526

526
4-53

श्रीः

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ ஆசார்யஜயந்திமலர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1953
MADRAS

விஜய ௵
ஐப்பசி ௴

ஸம்புடம் 12
ஸஞ்சிகை 10

...दिदन्तीन्द्रकुलकण्ठीरवो गुरुः । वण्शठारियतीन्द्रो मे सन्निधत्तां सदा हृदि ॥

JL
உ22ள211,ஈ41SH
N53·12·10
19541

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

	விஷயம்	பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	296
2.	புரட்டாசித்திருவோணமும் திருக்கேட்டையும்	303
3.	மாலுகந்த ஆசிரியர்	306
4.	வகுளாபரணப்பெருமாள் தமிழின் வாசியறிந்திடுநாள்	308
5.	தூப்புல் குலவிளக்கு	311
6.	தேசிகன் வகுத்த வழி	314
7.	ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தின் காக்ஷிகள் (படங்கள்)	318
8.	ஸ்ரீ அஹோபிலமடம் அழகியசிங்கரின் அறிக்கை	319
9.	ஆசார்யகுணானுபவம்	321
10.	தனியனின் பெருமை	325
11.	செய்திகள்	326
12.	நரசிங்கன் தகவாலே முடிசூடிய மாமுனிவன்	327
13.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	329
14.	திருவோணமும் திருக்கேட்டையும்	331
15.	ஸ்ரீ ஆதிவண்ஸடகோப யதீந்த்ரமஹாதேசிகன் வாழித் திருநாமம்	335
16.	வாழித்திருநாமகாதை	336

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ஹூ ஐப்பசி மீ { ஸஞ்சிகை 10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1958
MADRAS

‘ஸுஹேஶ்விதே ஶரணாகதேசேதஸே
க்ருபாவஶாத் க்ஷிப்தஸந்ந்யாஸநதி ।
லக்ஷ்ம்யா ஸஹாய்யஜித வாதஹாஸம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தலக்ஷாணாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

199541

योन्तःप्रविश्य ममवाच मिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

ஸ த்யோ வ்யக்ஷதரோஷயாந்தி ஹவதி
ப்ரஹ்மாஜ்ஞயா பாலகே
ப்ரஹ்லாதே பதயோ நதே த்ருவஹயே
காருண்யஹாராகர:।
ஶாந்தஸம் க்ருதஸ்ய தேந்யுதி
ஸதயா:ஸ்தோத்ரமேதாயதே
ஸ்ப்ரகாமயியோத்வி
தேநிய வரம் லோகாய சாநுக்ரஹம்॥'

[ந்ருஸிம்ஹ! உனக்கு மறுபடியும் கோபம் தணிந்தது. ப்ரஹ்மாவின் ஆஜ்ஞையால் பயமற்ற பாலகனான ப்ரஹ்லாதன் உன் திருவடித் தொழுதான். பொருமையுடன் கருணைக்கடலாகிய நீ அவனுடைய சிரஸ்ஸில் உன் திருக்கைகளை வைத்தாய்.(வைத்து ஆசிர்வதித்தாய்.) பிறகு உன்னை ஸ்தோத்ரம் செய்துகொண்டிருந்தவனும் வேறொன்றிலும் ஆசையற்றவனுமான அவனுக்கு வரமும் லோகாநுக்ரஹமும் நீ செய்தருளினாய்.]

லோகஸம்ரக்ஷணார்த்தம் நரஹரியின் அவதாரம் எடுத்த லோகநாயகனை அணுக, ப்ரஹ்மா முதலிய தேவாதிதேவர்களும் அஞ்சினர். பரமபக்தனான ப்ரஹ்லாதனே ஸ்ரீந்ருஸிம்ஹனின் கோபத்தைத் தணிக்க வல்லவன் என்று அவனையே ஶரண்யனிடம் ப்ரஹ்மா, ஈசன் முதலியவர்கள் அனுப்பினார்கள். பக்தபராதீனனான பகவானும் ரௌத்ராகாரம் மாறி கருணைக்கடலானான். ப்ரஹ்லாதனுடைய பக்தியின் பெருமைதான் என்ன!

பரமபக்தாக்ரேஸரனான ப்ரஹ்லாதன் அஸுரச்சிறுவர்களுக்கு நற்போதனைகள் செய்யுங்கால் பக்தி ஒன்பது விதமானதென்று உபதேசிக்கிறான். 'ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் । அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதனம்॥' என்று.

பகவத்கைங்கர்யமும், பகவானிடம் நிரதிசயமான பக்தியுமே நமக்கு பேரின்பத்தைக்கொடுக்கக்கூடியவை. ஸ்ரிய:பதியினிடம் பக்தியில்லாதவர்கள் பதிதர்களே. பக்தியே முக்தியைக் கொடுக்கும்.

இம்மாதிரியான உயர்ந்த அறிவை உலகில் நமக்கு எடுத்துரைப்போர்களேதான் ஆசார்யர்கள். ஆக ஆசார்யர்கள் நமக்குச் செய்யும் உபகாரம் அளவிடமுடியாததே. முற்காலத்தில் இருந்த வால்மீகி, வ்யாஸ, பராசராதி மஹர்ஷிச்ரேஷ்டர்கள் வேதப்ரதிபாத்யமான ஸர்வேச்வரனையும் அவனுடைய குணாதிசயங்களையும், அவைகளை அநுபவித்து நாம் நற்கதியடையும் வழிகளையும் நமக்கு நன்கு புலப்படுத்தவே இதிஹாஸ புராணங்களைச் செய்தருளினார்கள். இவைகளின் மூலம்தான் நாம் அரிய விஷயங்களை நன்கு அறிந்துகொள்ளமுடிகிறது.

இவர்களைப் பின்பற்றியேதான் ஆழ்வாராசார்யர்களும் உபதேசங்களைச் செய்தருளினர்கள். இப்படி பரம்பரையாக நல்வழியை நமக்குக்காட்டி நம்மை நற்கதிக்குக் கொண்டுபோக பலவிதங்களிலும் உதவிய நம் பூர்வாசார்யர்களுக்கு நாம் ப்ரத்யுபகாரம் செய்வதென்பதே

இயலாதகார்யமாக வல்லவா இருக்கிறது. ஸாமாந்ய உபகாரமானுல் ப்ரத்யுபகாரத்தைப் பற்றி சிந்திக்க அவகாசமுண்டு. ஆனல் பேருபகாரத்திற்கு எவ்விதமாக நாம் முயன்றும் ஈடுசெய்ய முடியாதுதான். அதனல் நாம் வாளாவிருக்கலாமா? அப்படியானுல் நாம் க்ருதக்நர்களாகிவிடுவோமே. இம்மாதிரியான தோஷம் நமக்கு ஸம்பவியாமலிருப்பதற்காகவேதான் நாம் ஆசார்யாநுஸந்தாநம் செய்து, ஆசார்யகுணங்களைக் கேட்டும், ஸ்மரித்தும், அவர்களுடைய ஸதுபதேசங்களை நன்கறிந்து அவைகளின்படி நாம் நம் வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ளவும் வேண்டும். இவைகள்தான் நாம் நம் ஆசார்யர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்.

அரிய விஷயங்களை அடிக்கடி கேட்டு இன்புறுவது மனிதரியல்பு. ஆதலால் நம் ஆசார்யச்ரேஷ்டர்களின் ஜ்ஞாபகம் நமக்கு எக்காலமும் தோன்றுவதின் பொருட்டே கிடைத்த ஸரியான ஸந்தர்ப்பங்களிலெல்லாம் நாம் ஆசார்ய ஜயந்திகளைக் கொண்டாடுவது நம் நற்கதியைத் தேடிக்கொண்டதாகவே ஆகும்.

புரட்டாசித் திருக்கேட்டையில் அவதரித்தவரே ஸ்ரீமதஹோபில மடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுகிய பரமாசார்யனே (தானே) நேரில் இம்மஹானுக்கு உபதேசம் செய்தருளி இவ்வுயர்ந்த ஸிம்ஹாஸநத்தையும் தந்தருளினன் என்பது:–
'ஃஹொவிலெ ஸ்ரீ-நரஸிஂஹஃ வெஷஷொஂ ஷயா உஃ' என்பதினல் விளங்குகிறது. இம்மஹானும் பலகாலம் எழுந்தருளியிருந்து பல்லாயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்தருளினர் என்பதும் ஸுப்ரஸித்தம். சிஷ்யர்களின் க்ஷேமத்தைக் கருதி பல க்ரந்தங்களைச் செய்தருளினர் என்பதும் 'ஷஷிவுவ ஸுமிதா' என்பதால் தெரியவருகிறது. ஆத்மீக வளர்ச்சிக்குப் பாடுபட்டபோதிலும் அதற்கு ஸம்பந்தப்பட்ட சரித்ரஸம்பவங்களையும், க்ரந்தங்களையும் புறக்கணிப்பது என்பது நம் நாட்டின் அஸாதாரணமான தன்மை. இதேபோல்தான் நம் பூர்வாசார்யர்களின் உயர்ந்தக்ரந்தங்களில் பலவற்றை நாம் இழந்திருக்கிறோம். இம்மஹானுக்கு விஜயநகரத்து அதிபதிகளில் சிலர் (முக்யமாக முகுந்ததேவராயர் என்பவர்) சிஷ்யர்களாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுதுகூட கீழ் அஹோபிலத்தில் திருக்கோயிலில் உள்ள முன் மண்டபத்தில் வலது புறம் ஓர் அரசனுடைய ப்ரதிமையையும், இடதுபுறம் ஓர் அரசியினுடைய ப்ரதிமையையும் நாம் காண்கிறோம். இவைகள்தான் முகுந்ததேவராயருடையவும் அவரது மனைவியினுடையவும் ப்ரதிமைகளென்று தோன்றுகிறது.

பல அரிய கார்யங்களைச்செய்துகொண்டுபல காலம் எழுந்தருளியிருந்தவர் இம்மஹான். ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்குப்பிறகு இந்த ஸிம்ஹாஸநத்தில் சிஷ்யஸம்ரக்ஷணத்தில் ஈடுபட்டு எழுந்தருளியிருந்தவர்கள் நாற்பத்திரெண்டு ஸ்ரீ அழகியசிங்கர்கள். இப்பொழுது நாற்பத்தி மூன்றுவது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பல அனுசாரங்களைப் போக்கவும், ஸத்ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டவும், அதற்கநுகுணமாக நம் ப்ராசீன குலதநங்களை ரக்ஷிக்கவும் முற்பட்டு பல உயர்ந்த கார்யங்களைச் செய்துவருவது நம்போன்ற சிஷ்யர்களின் பாக்ய விசேஷமே. பல்லாண்டு எழுந்தருளியிருந்து நமக்கு இம்மஹாசார்யர் உபகரிக்கும்படியாக ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹித்தருளுமாறு நாம் எல்லோரும் ப்ரார்த்திப்போமாக.

* * * *

ஆசார்யர்கள் சிஷ்யர்களின் நன்மைக்காகவே பலகாலும் பாடுபடுகின்றனர் என்று நாம் முன்னமே கூறியுள்ளோம். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு பழக்கவழக்கமும் (ஆசாரமும்) நம் நன்மையை மனத்திற்கொண்டேதான் அமைக்கப்பெற்றது என்று நன்கு ஆராய்ந்தோருக்குத் தோன்றும். நம்மில் ஒரு சிலர் காலவசத் வர்ணச்ரமதர்மங்கள்

தினால் இழுக்கப்பட்டு இப்பழக்கவழக்கங்களில் சிலவற்றில் நம்பிக்கை வைப்பதில்லை என்பது ஓர் வருந்தத்தக்க விஷயம். ஒருவருடைய வார்த்தையில் ஒரு பகுதியை மாத்திரம் ஒப்புக்கொண்டு, ஒரு பகுதியை புறக்கணித்து, அதே ஸமயம் இவர் பெரியவர் இவர் வார்த்தைகள் மதிப்பிற்குறியன எனக் கூறுதல் எவ்வளவு விசித்திரமானது. அதுபோலத்தான் இந்தச் சிலர் கூறுகின்றனர்.—

பாரதநாட்டுப் பண்பையும், கலாசாரங்களையும் புகழுங்கால், இவைகளுக்குக் காரணபூதர்களான ஸ்ரீமத்ராமாநுஜாசார் போன்ற ஆசார்யர்களைப் பெருமையாகப் பேசுகின்றனர். ஸ்ரீ ராமாநுஜாசார் என்ற ஸ்ரீ பாஷ்யகாரரின் பெருமையை அவர் செய்த க்ரந்தங்கள் மூலமாய் நாம் அறியமுடியுமல்லவா? தங்கள் கருத்துக்களுக்கு விரோதமாக அவர்கள் நடந்திருப்பார்களா என நாம் யோசிக்கவேண்டும். பாரத நாட்டிலே வர்ணாச்ரமங்களை ஆதரிக்காத ஆசார்யர்கள் உண்டா? இவைகளை அடிப்படையாகக்கொண்டுதானே தங்கள் ஸம்ப்ரதாயங்களை நிலைநாட்டினர் இப் பெரியோர்கள். வர்ணாச்ரமப்பாகுபாடு ஓர் ஸமூஹத்துக்கு மிகவும் அநுகூலமானது. பொருளாதார ஶாஸ்த்ரத்தில் வேலைகளின் பாகுபாடு (Division of labour) என்பது மிகவும் ஓர் உயர்ந்த தத்துவம். ஓர் தொழிலின் முன்னேற்றத்துக்கு இது இன்றியமையாதது. அதே போல் ஓர் ஸமூஹத்தின் முன்னேற்றத்துக்கு வர்ணாச்ரம தர்மம் இன்றியமையாதது. பொருள்வளர்ச்சிக்கு அது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இது ஆத்மீகவளர்ச்சிக்கு. ஆத்மீக வளர்ச்சியற்ற பொருள்வளர்ச்சி ஜீவனையிழந்த உடல் ஜலப்பெருக்கால் பருத்திருப்பது போலத்தானாகும். மஹாத்மாகாந்தியின் தத்துவங்களின் அடிப்படை ஆத்மீகவளர்ச்சியல்லவா? இப்பேர்ப்பட்ட வர்ணாச்ரமதர்மங்களை ஒழித்துக்கட்டுவதில் என் ஆர்வம்? எப்படி இது ஸரியான முறையாகும்? நம் நாட்டில் அதுவும் ஒரு கோடியில் உள்ள ஒரு சிலருக்கு, ராஜஸப்ரக்ருதிகளுக்கு, அஸஹிஷ்ணுதையும் ஆத்திரமும் ஏற்பட்டு ஸாத்விகத்தை ஒழித்துக்கட்ட ஆசையுண்டாகி இருப்பதை தடுக்கத்தானே முயலவேண்டும். அதற்காக ஸாத்விகத்தை அப்புறப்படுத்திவிட்டால் எதிர்ப்பில்லை என எண்ணுவது எவ்வளவு ஸரியாகும்? ஜலதோஷத்தைத் தடுக்க மூக்கைத்தானா அறுக்கவேண்டும்?

மனிதனுடைய புத்தியானது ஸரியானவழியில் செல்வதற்கு பல காரணங்கள் கூறப்பட்டிருப்பினும் முக்கியமானவைகளில் ஒன்று ஸாத்விக ஆஹாரம். 'ஆஹாரஶுத்தௌ ஸத்வஶுத்தி:' ஸாத்விக ஆஹாரங்களில் சேர்க்கப்பட்டது இனிப்பான பொருள்கள். அறுசுவை உண்டியில் இனிப்பு மிகவும் உயர்ந்தது. அப்படியிருக்க இனிப்புள்ள பொருள்களை வெறுக்கும் ஒரு சிலரின் த்ருப்திக்காக காரமான பொருள்களையே பலவாக்கி இனிப்பை அப்புறப்படுத்துவதுதானா வழி? வேறு வழியே இல்லையா?

அரசாங்க நூலாசிரியர்கள் தங்கள் புத்தகங்களில் மனிதனின் ஸ்வாதந்த்ரியத்தைப்பற்றி நன்கு பரிசீலனை செய்கிறார்கள். அம்மாதிரியான விரிவுரைகளில் ஓர் குறிப்பு நமக்குக் கிடைக்கிறது. ஓர் ஸமயம் ரஷ்யாவில் அரசவம்சத்தையே அழித்து மக்களாட்சியை சிலர் ஏற்படுத்த முயற்சித்தனர். அது ஸமயம் நடு வீதியில் ஓர் தள்ளாத கிழவி ஓர் சுமையுடன் நடந்துகொண்டிருந்தாள். பின்புறம் ஓர் மோட்டாரோட்டி, தன் மோட்டாரை வேகமாக ஓட்டிவந்தான். தன் வழியில் குறுக்கிட்ட கிழவியை சாலையின் ஓர் ஓரமாகப் போகும்படி ஏவினான். கிழவிக்குக் கோபம் வந்தது. 'மோட்டாரோட்டியே! என்ன சொன்னாய்? நடுச்சாலையில் நடக்க எனக்கு ஸ்வதந்திரம் உண்டு' என்றாள். மோட்டார் ஓட்டி, 'கிழவியே! ஸரி. நடுச்சாலையில் மோட்டாரை ஓட்டிச்செல்லவும் எனக்கு ஸ்வதந்திரம் உண்டு. பார் அதன் விளைவை' என்று சொல்லி தன் மோட்டாரை வேகமாகச்செலுத்த ஆரம்பித்தான். முடிவை நாம் ஊஹித்துக்கொள்ளலாம்.

அரசியல் ஸம்பந்தமாக ஓரளவு நம் ஸ்வதந்

திரத்தை நாம் விட்டுக்கொடுக்கவேண்டுமென்பது உண்மையே. இப்படி மக்களால் விட்டுக்கொடுக்கப்பட்ட ஸ்வதந்திரந்தான் பொது ஸ்வதந்திரமாகிறது. இதுவரை நாம் ஒத்துக்கொள்ளக்கூடிய அம்சம். அதற்காக நம் ஸ்வதந்திரம் முழுவதையும் இழந்துவிட்டு மற்றவர்களுடைய ஸ்வதந்திரத்திற்கு அடிமைகளாகிவிட முடியுமா? பொது ஸ்வதந்திரம் நமக்குக் கிடையாதா? நம்முடைய தனிப்பட்ட ஸ்வதந்திரமும் நமக்குக் கிடையாது என்று யாராவது சொன்னால் நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டுமா? மோட்டார் ஓட்டிக்காக பாதையில் ஒரு பாகத்தை ஒதுக்கிவைக்கலாம். நடந்து செல்பவர்களுக்கென்று வேறு ஒரு பாதையாவது இருக்கவேண்டாமா? எல்லோருமே மோட்டாரில் செல்லவேண்டும் என்றுதான் சொல்லவேண்டுமா? அது ஸௌகர்யம், அதற்காகச் சொன்னேன் எனக் கூறலாம். அதைப் பார்த்தால் அதைக் காட்டிலும் ஸௌகர்யம்போல் மற்றொன்று தோன்றும். இந்தக் கானல்நீருக்கு எல்லையே கிடையாது. நாட்டில் மக்களுக்கு த்ருப்தி என்பதே பிறகு போய்விடும். ராமராஜ்யம் நிலை நாட்ட முடியுமா?

மோட்டார் ஸவாரிகளிலும், ரயில் மூன்றாவது வகுப்புப் பிரயாணங்களிலும், இன்னும் பொதுவிடங்களிலும் நம்போன்றவர்கள் படும் அல்லல் கொஞ்சநஞ்சமல்ல. இதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு ஸமூஹத்துக்கில்லையா? ஒவ்வொருவருடைய ரக்ஷணத்திற்கும் ஸமூஹம் தனித்தனியே ஏற்பாடு செய்து தர முடியாதுதான். ஆனாலும் ஸமூஹத்துக்கு நம் பேரிலும் நல்லெண்ணம் உண்டு என்ற ஓர் விச்வாஸம் நமக்கும், மற்றெல்லோர்க்கும் ஏற்பட்டால் நாடு நன்மையை அடையும். நாம் எல்லோருமே இன்புற்றிருக்கலாம். இதேபோல் நாமும் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் வேண்டும். பூரணமாக பொதுவிடங்களிலும், பொதுக்கார்யங்களிலும் ஒத்துழைக்கவேண்டும். ஸமூஹத்துக்கு நம்முடைய கடமை அது. அதில் குறைவு ஏற்பட்டால் நம்முடைய பிசகுதான். அதேபோல் நம் ஸ்வதந்திரதர்மங்களைச் சரிவரச் செய்யவேண்டியதும் நம்முடைய முக்கியக் கடமை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நம் கடமையில் நாம் தவறினால் நாளடைவில் நம் கடமையை அயலார் உணர்ந்துகொள்ளமுடியாது. என்? நாமே உணரமுடியாது. பிறகு ஏதாவது ஒரு ஸமயத்தில் நம் கடமையைச் செய்ய முற்பட்டால் அதற்கு எதிர்ப்பு வருகிறது. கடமை காலாவதியாகிவிடுகிறது போலும்!

உதாரணமாக பாரதநாட்டுமக்கள் பல்லாயிரத்தாண்டுகளாக சிகை வைத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். வடமொழி இலக்கியங்களிலும், தென்மொழி இலக்கியங்களிலும் நாட்டுப் புராதன சிற்பங்களிலும் சித்திரங்களிலும் இதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன. இதை யாரேனும் மறுக்க முடியுமா? ஆங்கிலேய அரசாட்சியின் காரணமாய் நம் நாட்டில் நடை, உடை, மொழி இவைகளில் அனாவச்ய மாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாறுதல்களில் இம்மாதிரி 'சிகைமாறுதலும்' ஒன்று. இதனால் ஸௌகர்யம் இருப்பதாக சிலர் சொல்வதையும் நான் கேட்டிருக்கிறேன். அது வீண்வாதம். ஸௌகர்யம் என்பது த்ருப்தியில் முடியிறக்குவது போலல்லவா இருக்கவேண்டும்? இது அப்படியில்லையே! இதற்கு வாஸனைத் தைலம், சீப்பு, ஸ்னோ, பவுடர் இவைகளல்லவா தேவையாயிருக்கின்றன. வீண் செலவல்லவா ஆகிறது. படக்காட்சிகளின் சரித்திரத்தில் கூறப்படும் 'மேக் அப்' இதில் ஒவ்வொரு நாளும் வேண்டிவருகிறதே? என்ன போலி வேஷம் பாருங்கள். உண்மைத் தங்கத்தைக் காட்டிலும் போலித் தங்கத்துக்கல்லவோ மதிப்பு இக்காலத்தில். அதிலிருந்து இக்காலத்தின் பண்பை நன்கு மதிப்பிடமுடியுமல்லவா?

உண்மை நிலை இப்படியிருக்க புராதன மொழியைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்ட ஒரு சிலர் அம்மொழியின் இலக்கியங்களுக்கும், பண்புக்கும், கலாசாரங்களுக்கும் விரோதமனப்பான்மையுடன் நடந்துகொள்வது இப் போலிக்காலத்தின் இயல்புபோலும். இந்நிலையை எல்லாவிடங்களிலும் பரப்ப ஓர் சிலர் முற்படுகிறார்கள். உண்மை

யை விரும்புகிறவர்கள் இதை எதிர்க்கவேண்டியிருக்கிறது. எதிர்ப்பைத் தடுக்க என்ன வழி? உண்மையை மறைத்து எதிர்ப்பில்லாமல் செய்துவிடுவது தானா? யோசித்துப் பாருங்கள்.

* * * * *

கைத்தறித் துணிகள்

மேற்கூறிய ஸமூஹப்பிரிவினையில் பொருளாதார அடிப்படைக் காரணங்கள் உண்டென்று நம் நாட்டில் பல பெரியோர்கள் அடிக்கடி கூறிவந்தது நமக்கு ஜ்ஞாபகம் வருகிறது. ஒவ்வொருவரும் தனக்கு ஏற்பட்ட கார்யத்தில் ஈடுபட்டிருந்தால் மற்றைய வ்யவஹாரங்களுக்கு அவகாசம் ஏற்படாது. எப்பொழுது நம் கார்யத்தை நாம் புறக்கணிக்கிறோமோ அப்பொழுது இதரர்களின் கார்யங்களைப்பற்றி நாம் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். அப்பொழுது தான் மனத்தாங்கலும், மனக்கசப்பும் ஏற்படுகிறது. இம்மாதிரி ஏற்படாமல் செய்யவேண்டியது ஆஸ்திகர்களாகிய நம்முடைய கடமை.

பண்டைகாலந்தொட்டு நம் பாரதநாடு நெசவுத்தொழிலுக்குப் பெயர் பெற்ற நாடு. உலகில் மற்றைய நாடுகள் அத் தொழில் நுட்பங்களை அறியுமுன்னமே நம் நாட்டு 'டெக்கா மஸ்லின்' என்ற உயர்ந்தரகத் துணியைப்பற்றி சரித்திரங்கள் புகழ்கின்றன. அப்படிப்பட்ட கைத்தொழில் ஆங்கிலேய கிழக்கிந்தியகம்பனி அதிகாரிகளின் அநீதிகளால் மிகவும் ஒடுக்கப்பட்டது. அதர்மமானது தர்மத்தை சிறிது காலம் மறைத்து நிற்கும். ஆனாலும் அதை விழுங்கிவிட முடியாது. தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அழுக்கடைந்து தங்கள் ஒளியை இழக்கும். ஆனால் ஒளி இல்லாமலே போகுமா! க்ரஹணத்திற்குப் பிறகு ஸூர்யன் அதிக உக்ரமாகத் தகிப்பதை நாம் பார்க்கிறோம். அதே போல் சந்த்ரன் அதிக ப்ரகாசத்துடன் காணப்படுகிறான். அப்படியே உலோகங்களும் புது மெருகு கொடுக்கப்பட்டு முன்னைவிட நன்றாகவே ப்ரகாசிக்கின்றன.*

இப்படி முன் கூறிய கைத்தரித்தொழிலும் நம் நாட்டு மக்களின் உற்சாகத்தாலும், உழைப்பாலும் பண்டைகாலம்போல் முன்னேற்றமடைந்து வருவதை நாம் கண்டு ஸந்தோஷிக்கிறோம். ஆனால் அதே ஸமயம் நமக்கு வ்யாகுலத்தைக் கொடுக்கும் ஸம்பவங்களும் நேர்கின்றன. இத் தொழிலுக்கு ஆதரவில்லாமல் நசித்துவிடுமோ என்றுகூடத் தோன்றுகிறது. புராதன க்ராமாந்தரக் கைத்தொழில்களில் பல தொழில்களை நாம் இதே மாதிரி இழந்து வருகிறோம். இது நம்முடைய மதியீனம் என்பதில் ஸந்தேஹமில்லை.

நம் ஸம்ப்ரதாயத்தில் ச்ரேஷ்டராய் எழுந்தருளியிருந்த திருக்கோட்டியூர் சின்னஸ்வாமி ஓர் ஸமயம் இம்மாதிரி ஸாதித்தது எனக்கு ஜ்ஞாபகம் வருகிறது. அதாவது:- 'எங்கள் தகப்பனார் எழுந்தருளியிருந்த காலத்தில் எங்கள் குடும்பத்தில் மில் வேஷ்டிகளைத் தொடுவது அநாசாரம் என்று கருதப்பட்டது. கைத்தறி வேஷ்டிகளைத் தான் வாங்குவோம்' என்று 1932 ௵ அந்த ஸ்வாமி ஸாதித்திருக்கிறார். இது ஸமயத்தில் மற்றொரு விஷயம் அடியேனுக்கு ஜ்ஞாபகம் வருகிறது. பதினைந்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த மக்கள் ஸமுத்திரத்திலிருந்து உற்பத்தி செய்த உப்பு ஸமுத்திரத்தில் வாழும் ஜந்துக்களின் செதில்களுடன் கூடியிருப்பதால் உபயோகப்படுத்தத் தகாதவை. அது தங்கள் மதத்திற்கு விரோதமானது என்றும் கூறினார்கள். அது ஸமயம் பூமியில் வெட்டி எடுக்கப்பட்ட கல்லுப்பே உபயோகப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு உண்மை உண்டு. அதாவது:- பல ஜனங்களுக்கு வேலை கொடுத்து பொருளாதார நிலையைச் சீர்மையாக்கியது எனக் கூறலாம்.

இப்படி நம் ஸமூஹத்தில் வேலையின்மையி

* இதுபோலவே நம் தர்மாநுஷ்டானங்களுக்தும் இடையூறுகள் ஏற்படுவதால் சீக்ரமாகவே நன்கு நிலை பெற்றிருக்குமென நம்ப இடமுண்டு.

னாலும், ஆதரவுக்குறைவினாலும் ஓர் உயர்ந்த கைத்தொழில் நசுக்கப்பட்டு வருவதை நாம் பார்த்து வாளாவிருப்பது தர்மமாகாது. இக்காலத்தில் நாம் எல்லோரும் ஓர் ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். அதாவது:– கைத்தரித்துணிகளையே நாம் வாங்குவோம் என்று. ஸமீபத்தில் வருகிற தீபாவளிக்கும் இதை யநுஸரிப்பதுடன் அது முதற்கொண்டு இந்த ஸங்கல்பத்தை உறுதியாக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஓர் ஆதரவு ஏற்படும். அவர்களுக்கு வ்யாபாரம் உண்டாகும். வேறு கார்யங்களில் ஈடுபடமாட்டார்கள். பொருளாதாரநிலையும் அபிவிருத்தியடையும். ஒரு தேசத்தின் பொருளாதாரநிலைமை அத்தேசத்து மக்களின் பொருளாதாரநிலைமையைப் பெரும்பாலும் பொருத்ததாகவே இருக்கும். இதற்கு நாம் பாடுபடவேண்டியது மிகவு மவசியந்தான்.

* * * * *

ஆந்த்ர ராஜ்யம்

உலகில் உள்ள மக்களெல்லோரும் தங்கள் நாட்டிலும், மொழியிலும், பண்புகலாசாரங்களிலும் அதிக அபிமானமுடையவர்கள். உண்மையான கலாசாரங்களைப் புறக்கணித்து போலிக்கலாசாரங்களைக் கண்டு ஆநந்தித்துழல்பவர்களும் சிலருண்டென முன்னமேயே நாம் கூறியிருக்கிறோம். இதைப்பற்றி நாம் இப்பொழுது விவரிக்க முன்வரவில்லை.

உண்மைக் கலாசாரங்களின் அபிவ்ருத்தியையே அடிப்படையாகக்கொண்டுதான் ஆந்த்ரமாகாணப்பிரிவினை பற்றிய கிளர்ச்சி ஆரம்பமாகியது — தனிப்பட்ட ராஜ்யமானால் தங்களுடைய மொழி, கலை இவைகளை வ்ருத்தி செய்துகொள்ளலாம் என்றிருக்கும். அது ஒன்றாகவே இருந்தாலும் செய்துகொள்ளமுடியும். அதைப்பற்றி நாம் இனி விவாதிக்க வேண்டாம். இப்படி ஆரம்பித்த ஓர் கிளர்ச்சி முடிவில் ஓர் தனி ராஜ்யத்தையே ஏற்படுத்த உதவிற்று. சென்ற முதல் தேதி கர்நூல்ஜில்லாவை தலைநகராகக்கொண்டு ஓர் புதிய ராஜ்யம் உதித்த செய்தி எல்லோருக்கும் தெரியும். இவ்வுதயத்தில் முதற்ஸந்தோஷம் நமக்கே.

நம் ஸ்ரீஸந்நிதியின் காரணபூதரான மாலோலன் எழுந்தருளியிருக்குமிடம் ஸ்ரீஅஹோபிலமல்லவா? இவ்வஹோபிலம் கர்நூல் ஜில்லாவில் இருக்கிறது. புது ராஜ்யம் நமது என்பது மாத்ரமல்ல. தலைநகரமும் நம் ஜில்லாவிலேயே என்றால் யாருக்குத்தான் பெருமை ஏற்படாது. நாம் இதைப் பார்த்து மிகவும் பூரித்துப்போகிறோம். கிழக்குத் தொடர்ச்சி மலை என்று பூகோளத்தில் சொல்லப்படுகிற மலைத்தொடர்ச்சியை வடமொழியாசிரியர்கள் அவ்விதம் கூறுவதில்லை. நான், என்னுடையது, என்ற அஹங்காரங்கள் நம்முன்னோர்களுக்குக் கிடையாது. ‘டென்ஸிங்’ என்று ஓர் கப்பலுக்குப் பெயர் வைக்கலாம் என்றெல்லாம் நம் முன்னோர்கள் எண்ணினதேயில்லை. ஆத்மீக வளர்ச்சியே முக்ய நோக்கமானபடியால் ஆத்மீகவளர்ச்சியின் ஸாதனையான கடவுளின் பெயர்களையே இடுவார்கள் நம் முன்னோர்கள். ஸ்ரீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கும் மலைக்கு ‘கருடாத்ரி’ என்றும், ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு ‘சேஷாத்ரி’ என்றும் பெயரிட்டார்கள். சேஷசயநத்தில் ஸ்ரிய:பதி வீற்றிருப்பதுபோல் நிரந்தரமாக அங்கேயே ஸ்ரீநிவாஸன் எள்ளியிருப்பதால் அவ்விடத்திற்கு ‘சேஷாத்ரி’ என்றும், கருடாரூடரான பகவான் கஜேந்த்ராழ்வான்போன்ற பக்தர்களைக் காப்பாற்ற பல விடங்களுக்குச் செல்வதுபோல எப்பொழுதும் பக்தர்களைக் காக்க எழுந்தருளும் மாலோலன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு ‘கருடாத்ரி’ என்று பெயரிட்டார்கள்போலும். நம் முன்னோர்கள் எவ்வளவு தீர்க்கத்ருஷ்டிகள்!

இப்படி பகவானுடைய ஓரேமாதிரியான வாஸஸ்தாநம்தான் இவ்விரு பர்வதங்களும். நிரந்தர வாஸஸ்தலமான திருப்பதி வெகு செழிமையுடன் விளங்குகிறதில் ஆச்சர்யமில்லை. அதேபோல் ஸ்ரீஅஹோபிலத்தைச் செய்யவேண்டுமென்பதும் மிகவும் உண்மையே. அவச்யமானதுங்கூட.

புராதன க்ராமங்களை விட்டு நகரங்களில் வஸிக்கும் பெரியோர்களான பென்ஷனர்கள் க்ராமங்களின் துர்த்தசையைக் கண்டு க்லேஶ

மடையவில்லையா? அதுபோல புராதன காலங்களில் செழிப்புள்ள ஸ்தலம் ஸ்ரீ அஹோபிலம் என்பது நேரில் கண்டு களித்தவர்களுக்குத் தான் தெரியும். அங்கு காணப்படும் மலைகள் பல பாறைகளை அடுக்கி வைத்தவைகள் போல் தோற்றமளிக்கின்றன. அப்படிப்பட்ட உயர்ந்த பர்வதங்களின் இடையில் கற்றூண்களை நாட்டி நூற்றுக்கணக்கான சிறு கோயில்களையும், மண்டபங்களையும் கட்டியிருக்கிறார்கள் என்றால், யோசித்துப் பாருங்கள்; அந்நாட்டு மன்னர்களின் தெய்வபக்தியையும், கலாரக்ஷணத்தையும். தூண்களும் மண்டபங்களும் பல சித்ரவேலைப்பாடுகளுடன் அமைந்திருக்கின்றன. யாத்ரிகர்கள் அவைகளை இமைகொட்டாமல் பல நாட்கள் பார்த்து ஆநந்திக்கலாம். இவ்வளவு உயர்ந்த வஸ்து ஸுலபமாக அடைய முடியாதபடி இருக்கிறது. ரோஜா புஷ்பத்தை முட்செடி காப்பாற்றுகிறது உண்மையே. ஆயினும் அச்செடியே பெரிய புதரிடையில் இருந்தால் அதைப் பார்க்கத்தான் முடியுமா? பார்த்த பிறகல்லவோ ஆநந்திக்க முடியும். புதரை அப்புறப்படுத்துவது புஷ்பத்தை நாம் பார்ப்பதற்கு உதவுகிறது. அதுபோல் நாம் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தை அடைந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவித்து அவன் திருக்கோயில்களைக் கண்டு ஆநந்திக்க இடையூறுகள் இருக்குமேயானால் அவைகளை நாம் களைந்தெறிய வேண்டாமா?

தத்காலம் கர்நூல் ஜில்லாவில் உள்ள 'அல்லகட்டா' அல்லது 'சாகலமேரி' என்றவிடங்களில் தங்கியே ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது. அங்கிருந்து செல்வதற்கு ரஸ்தா ஸரியாகச் செப்பனிடாததால் மேற்படி க்ஷேத்ரத்திற்கு செல்வது மிகவும் ப்ரயாஸையான கார்யமாகவிருக்கிறது. ஆஸ்திகர்கள் எல்லோரும் நம் ராஜ்யாதிகாரிகளுக்குத் தெரிவித்து இந்த ரஸ்தாக்களைச் செப்பனிட்டு, வாய்க்கால்களுக்குப் பாலங்கள் கட்டி, போக்குவரத்து ஸாதனங்களையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது முதற்கடமை என்று உணரவேண்டும். இதுவரையில் ராஜ்யம் வெகு விஸ்தாரமாகவிருந்ததால் இவைகளைக் கவனிக்க அவகாசமில்லை. மனிதர்கள் நன்றாகக் கறக்கும் பசுவை மிகவும் ப்ரியமாக ரக்ஷிக்கிறார்கள். பசுவானாலும் ஏதோ சில காரணங்களால் கறவை ஸரியாக இல்லாமற்போனால் அதை உபேக்ஷிக்கிறார்கள். இம்மாதிரி எல்லா வ்யாபாரங்களும் உலகில் நடக்கின்றன. இதில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை. இனி அப்படி அல்ல. ராஜ்யம் தனிப்படுத்தப்பட்டபடியால் இவைகளை கவனிக்க முடியும். கவனிப்பதில் உத்ஸாஹமுமுண்டு. பாரததேசத்தின் தென் பாகத்தில் உள்ளது தான் ஆந்த்ர ராஜ்யம். ஆனாலும் தென் தேசத்தில் காணப்படும் நாஸ்திகம் இப்புது ராஜ்யத்தில் இல்லாமலிருப்பது மிகவும் போற்றத்தக்க விஷயம். ஆஸ்திகர்கள் நிறைந்த நம் ராஜ்யஸர்க்கார் மேன்மேலும் அபிவ்ருத்தியடைந்து வர்ணாச்ரமதர்மங்களை நிலை நிறுத்தியும், அதற்குக் காரணபூதங்களான புராதன ஆலயங்களைச் செப்பனிடவும் காப்பாற்றவும் உதவியும், உண்மையான ராமராஜ்யத்தை நிலை நிறுத்த ஸ்ரீமதழகியசிங்கர்கள் போன்ற மஹான்களின் அநுக்ரஹவிசேஷங்களினால் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹித்தருள வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

புரட்டாசித் திருவோணமும் திருக்கேட்டையும்

[ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்யஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு.]

'ஆனைப்பாரிவன் நேரில்லை காண் திருவோணத்தானுலகாளும்' என்ற புகழுடன் திருமலைமால் திருமணியின் அவதார விசேஷமாகத்தோன்றிய வாசார்யஸார்வபௌமனுடையவும் தேவகிமகனைகண்ணனை யசோதை வளர்த்தாப்போலே இந்தஸித்தாந்தத்தை மொய்ம்பால் வளர்த்த விதத்தாயாகிய ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடையவும் திவ்ய வைபவ விசேஷங்கள் சிலவற்றை நாளுமுகக்கவிங்கே நமக்கோர் விதி வாய்க்கின்றது.

எம்பெருமானாராகிய பெரிய ஏரியிலே வந்து தேங்கிய வேதாந்த ஸம்ப்ரதாயப்ரவாஹமானது நம் ஆசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு இந்த ஸம்ஸாரமாகிற கழனிக்கு ஏறிப்பாய்ந்து உய்வித்து வருகின்றது.

ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பின்பு (1) திருக்குருகைப்பிரான்பிள்ளான் (2) எங்களாழ்வான் (3) நடாதூர் அம்மாள் என்கிற க்ரமத்திலே உபயவேதாந்த ஸம்ப்ரதாயமும், (1) கிடாம்பியாச்சான் (2) ஆத்ரேயராமானுஜாசார்யர் என்கிற தமது வம்சக்ரமத்திலே ரஹஸ்ய ஸம்ப்ரதாயமும் பெற்று வாதிஹம்ஸாம்புவாஹராய்விளங்கியவர் கிடாம்பியப்புள்ளார்.

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனுக்கு ஐந்தாவது பிராயத்திலேயே 'ஆம் முதல்வனிவன்' என்று நடாதூர் அம்மாள் கடாக்ஷம் ப்ராப்தமாயிற்று. பிறகு இவருடைய மாதுலரான கிடாம்பியப்புள்ளாரின் திவ்யாநுக்ரஹத்தினால் இருபது பிராயத்திற்குள்ளேயே ஸாமாந்யசாஸ்த்ரங்களனைத்தும் உபயவேதாந்த ஸம்ப்ரதாயமும் ரஹஸ்யஸம்ப்ரதாயமும் ஸ்வயம்வரித்து விளங்கியது. அதனால் 'ஸ்வேந்யாந்யஸாதாரணோ ஜ்ஞாநவைராக்யயோ: பூஷகபூஷ்யபாவ:' என்கிற ரீதியிலே ஜ்ஞாநவைராக்யங்கள் தமக்குப் பூஷணங்களாய், அவற்றுக்குத் தாம் பூஷணமாய் திகழ்ந்தவர் நம் ஆசார்யன். 'நின் திருதனக்கு நீ திருவாகி' என்று எம்பெருமானிவ்வாசார்யனால் போற்றப்பட்டது போலவே தாமும் 'ஜ்ஞாநவைராக்ய பூஷணம்' என்று கொண்டாடப்பெற்றார். 'நின்றனக்கு நிகர் நின்னடியடைவார்' என்பதாக விவர் அநுஸந்தானமிவரிடமே காணலாமாயிற்று. வணக்கமொடுக்கம் வழக்கமொழுக்கமிரக்கம் முதலான குணக்குலமோங்குமணுக்கனாய் விளங்கியதையும், நான்மறை வல்லமை, சாஸ்த்ர ப்ரஜ்ஞை, ஸாஹித்யஸம்பத்தி முதலியவை இவ்வாசார்யனிடமே ஒற்றுமைப்பெற்று நின்றமையும் நினைத்து 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ... வேதாந்தாசார்ய' என்று ஈடுபட்டார்கள் பூர்வர்கள்.

ஆசார்யனுடைய ஸ்ரீஸூக்திகளின் பெருமையை புறச்சமயிகளான ஸ்ரீக்ருஷ்ணமிச்ரர், வித்யாரண்யர், அக்ஷோப்யமுநி, அப்பய்யதீக்ஷிதர் போன்றவர்களுள்பட போற்றியிருப்பது தெளிவானது. 'சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தையிகழேல்கண்டாய், சிறுமையின்வார்த்தையை மாவலியிடைச்சென்றுகேள்' என்று யசோதைப் பாசுரத்தின்படி கவிதார்க்கிகசிங்கத்தின் வார்த்தையைப் புறச்சமயிகளிடைச் சென்று கேட்டும் தெளியலாமாயிற்று. 'க்ஷுத்த: ப்ரத்யர்த்திநோ ந ... ப்ரத்யர்த்திலிங்கா:' என்று சிஷ்யரான தம்மைக் குறித்து எம்பெருமானார் தாமேயருளுவதாக ஸங்கல்பஸூர்யோதயத்திலுள்ளது. சிஷ்யர் பலர் பலசமயநிஷ்ணாதர்களாயிருக்கச்

செய்தேயும் ப்ரஜ்ஞாகுணவிசேஷம் பொருந்தியவுன்னைப் பார்க்கிலும் எனக்கு விச்வாஸ பாத்ரபூதராய் புறச்சமயிகளால் வாதத்திற்காக வேண்டப்படுமவர் மற்றொருவருமில்லை என்று குருவின் பணிதியிங்கு.

லோகாசார்யர் தாமும் 'சீரொன்று தூப்புல் ....ஒரொன்றுதானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு' என்று தனியனிட்டருளினர். 'தத்ராவஸேகஃ வஸு ஹுக்திர்ஹேது:' என்று அண்ணன் அருளியபடி. ப்ரமாண ஸம்ப்ரதாயார்த்த நிர்ணயம் செய்யுமிடத்தில் 'பேசிற்றேபேசலல்லால்' என்கிற க்ரமத்திலே பூர்வாசார்யர் பணிதியையே மேற்கோளாகக் கொண்டு 'உணவஜஸஃதீணெவஸாக்ஷத்ரு ஷெவாஷிஜெ மதிஃ' என்றரீதியில் நிர்ணயம் செய்தருளுமது நமது ஆசார்யனுடைய ஸரணியாகும் 'வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோமுள்ளத்தெழுதியதோலையிலிட்டனம் யாமிதற்கென்' என்றும் இப்படிரஹஸ்யத்ரயத்தைப்பற்றின கீழும் மேலுமுள்ள பாகங்களெல்லாம் வேதாந்தோதயன ஸம்ப்ரதாயமான மடப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாங்கேட்டருளினபடியே கிடாம்பியப்புள்ளாரடியேனைக் கிளியைப் பழக்குமாப்போலே பழக்குவிக்க அவர் திருவுள்ளத்திலிரக்கமடியாகப் பெருமாள் தெளியப்ரகாசிப்பித்து மறவாமற்காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்' என்று மிவ்வாருக நம்மாசார்யன் பணிதிகளை யாங்காங்கு தெளியக்காணலாம்.

ஸ்ரீ தேசிகஸூக்தி ஒரொன்றும் பார் ஒன்றச் சொன்ன பழமொழி என்றும், தாரணியில்வாழ்வார்க்கு வானேறப்போமளவும்வாழ்வு என்றும் தமது க்ருதஜ்ஞதைதோற்றத் தனியனிட்டருளினர் லோகாசார்யர். ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ அண்ணனும் 'சுவிவிஹ்நஸ்தவ்ரூஷா யாயவெதீ, ஷாவெஜடெஸொ ஷாஸ்திதவதாயு:' 'வாணீ பவதி ஸூக்தி ஸாஸூ தீவ ஹூயஃ ஹூவாரோஸ்யாநவாதீக' என்று ஸப்ததிரத்நமாலிகையில் அருளினர்.

இத்தகைய வைபவங்கள் வாய்ந்து வேதாந்தாசார்யனுக வேந்தாகாசார்யனாக இருக்கச்செய்தே வும் விளங்கியவர் நம் ஆசார்யன். 'வெஷாஜோ வாயஷூஸவொzஷிநு வெஷாஜேஷூவநெ ஷஃ। ஜஃ விவெகஃ கூவஷெுஜோ ஷாஜோ வாயஷூவதம் விஷூஃ॥' என்று பூர்வர் அநுஸந்தித்தார்கள். அம்ருதாஸ்வாதினியில்— 'வீண் பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே வேதாந்தவாரியனென்றியம்ப நின்றேம் நாண் பெரியோமல்லோம் நாம் நன்றுந் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே' என்று ஸ்வாமி தாமே இவ்வர்த்தத்தை வெளியிட்டிருப்பது இங்கே யநுஸந்தேயம். (வீண்)பயனற்று (பெரிய)பெரியதான என்றபடி. அன்றிக்கே வ்யர்த்தவார்த்தை—தோஷாரோபண வார்த்தை அதனுல் பெரிய, என்னவுமாம். வையத்திற்கு விசேஷணமிது. பயனற்ற ஸித்தாந்தங்களும் துரபிமானமும் மலிந்திருக்குமிப் பொங்கோதம்சூழ்ந்த புவநியில் என்றபடி. களையைவளர்க்கப் பயிரழியுமாப்போலவும், ச்யேநமத்யகபோதந்யாயத்தாலும் வைதிகதர்சனம் முழுக்கவழிந்து போகக்கூடிய இந்நிலவுலகில் ஸர்வேச்வரன் தானே தமக்கு வேதாந்தாசார்யபதமளித்து வேண்டும் ரக்ஷை பண்ணிக்கொண்டிருப்பது இங்கே விவக்ஷிதம். 'மாட்டாதேயாகிலுமிம் மலர்தலைமாஞாலம்' என்ற பாசுரம் இங்கு அநுஸந்தேயம்.

நஹஸ்ரோவிஜெணாயாவேதீணஷாய
ஸஷிரயெ। விஸூஷிதாயாயாஷு
வெஜடெஶாய ஜஜஷ॥

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

ஸ்ரீதேசிகனுக்குப் பிறகு (1)ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி(2)கடிகாசதகம் அம்மாள்(3) ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் என்பதாக வாசார்யபரம்பரை. இவ்வாசார்யன் கிடாம்பிக்குலபதியாகிய ஸ்ரீகேசவாசார்யர் என்கிற தமது திருத்தகப்பனர் பக்கலிலே 'தவிதீயஂ ஜந' என்று கொண்டாடப்பெற்ற ஸாவித்ரீமூலகஜன்மம் பெற்று 'த்ருதீயம் யஜு

தீக்ஷாயா:’ என்றரீதியிலே பஞ்சஸம்ஸ்கார தீக்ஷாரூபமான ஸ்ரீவைஷ்ணவ ஜன்மம் பெற்று இருபதாவது திருநக்ஷத்ரத்திலே துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய விசேஷகடாக்ஷலக்ஷ்யபூதராய் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிக ஸம்ப்ரதாயப்ரவர்த்தகராய் அறுபது சாதுர்மாஸ்யங்கள் லோகோஜ்ஜீவநம் செய்தருளிவந்த மஹிமையுடன் விளங்கியவர். த்ரய்யந்ததேஶிகயதீந்த்ரஶடாரிமூர்த்தி:யாகையாலே ‘ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன்’ என்று திருநாமமாயிற்றிவ்வாசார்யனுக்கு. திருநகரி யெம்பெருமானாகிய ஆதிப்பிரானுடைய திருநாமத்தின் ஆதியும் திருநகரியிலே மதாந்தரஸ்தரால் மறைக்கப்பட்ட நம்மாழ்வாரை யதாஸ்தானம் ப்ரதிஷ்டை செய்வித்தல் மூலம் ‘வண்சடகோபன்’ என்ற திருநாமமும் சேர்ந்து ‘ஆதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன்’ என்று திருநாமம் வழங்குவதற்க ஐதிஹ்யமுண்டு. ‘ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் ஜ்ஞாநஸம்பதாம் । ஶரணம் பவபீதாநாம் ஶங்காபங்கநிர்வ்ருதாம் ॥’ என்னும் தனியன் சிறியகண்ணாடி பெரியஉருக்காட்டுமாப்போலே இவ்வாசார்யோத்தமனுடைய குணவிசேஷங்களுக்கு ப்ரகாசகமாய் நம்மவர்களால் அநுஸந்திக்கப்படுகிறது. ஈச்வரன் அகிலஹேயப்ரத்யநீகனாய் கல்யாணகுணைகதானனுமாய் விளங்குமாப்போலே இவ்வாசார்யனும் நிரவத்யகுணஸம்பந்நியாய், அவன் ‘அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி’ என்ற வ்ரதத்துடன் விளங்குமாப்போலே இவ்வாசார்யனும் ஸம்ஸாரபீதரான ஆச்ரிதருக்கு ஶரணராய், இப்படி அநுகூலரஞ்ஜநம் செய்யச் செய்தேயும், அவன் ப்ரதிகூலநிரஸநம் செய்யுமாப்போலே இவ்வாசார்யனும் ஆரணநூல் வழிச்செவ்வையழித்திடுமைதுகரை நிரஸநம் செய்து ஶடகோபராய் அவன் ‘வந்யஸ்தாம் வத்ஸிகாத்ருஷ்டாவஸோ ந:’ என்று முநியாய் விளங்குமோபாதி இவரும் மநநபரராயுமிருப்பர் என்பது இத்தனியனில் திரண்டபொருள். ‘குணைர்ஸ்ரீநிஷத்யாயா:’ என்ற நிஷத்யாபதத்தினால் குணஸம்பத்துக்களை இவ்வாசார்யனாகிய கடையிலிருந்து ஸகலரும் பெற்றுக் க்ருதார்த்தராகலாம் என்று ஸூசிதமாகின்றது. ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் இவர்களுடைய ஸம்ப்ரதாயத்தின் பெருமை ஓங்கிவளருமாறு ஸம்ப்ரதாயஸ்தர் ஒவ்வொருவரும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களால் ஆத்மக்ஷேமத்தை ஸம்பாதிக்குமது சிஷ்யர் செய்யும் ஸமுசிதாசார்ய கைங்கர்யமாகும்.

भाट्टानामट्टहासः फणिपतिफणितेर्भागधेयं कणाद-
-व्याहारप्राणनाडीकपिलमतफलं नर्मधर्मागमानाम् ।
योगी श्रीवण्शठारिर्जगति विजयते किंच वेदान्तयुग्मा-
-चार्यो वेदोक्तमार्गस्थितिजननगुरुस्सर्वतन्त्रस्वतन्त्रः ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வரப்ரஹ்மணே நம:

மாலுகந்த ஆசிரியர்

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், சென்னை.]

'மாசில்மனந்தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக்கொவ்வா' என்பது சீரொன்றுதூப்புல் திருவேங்கடமுடையான் பாரொன்றச் சொன்ன பழமொழிகளுள் ஒன்று. ப்ரதானசதகம் என்ற ரஹஸ்யத்தைச் சேர்ந்ததாய் அம்ருதாஸ்வாதினியில் சேர்க்கப்பட்ட பாசுரமொன்றில் காணப்படும் இவ்வாக்யத்தின் பொருள் 'நிர்மலசித்தத்தையுடையவராய் கலக்கமற்ற ஜ்ஞாநிகளாம் மஹரிஷிகள் பிரித்துப் பிரித்து தத்வ நிரூபணம் செய்து வைத்தவைகளெல்லாம், மாலுகந்த ஆசிரியர்களுடைய ஒரு வார்த்தைக்கு ஈடாக மாட்டா' என்பது.

மாலுகந்த ஆசிரியர்கள் யாவர்? மால் என்று பெருமாளுக்குப் பெயர். 'மாலே' என்று கோதைநாச்சியார் திருப்பாவையில் அழகு ததும்ப எம்பெருமானை அழைப்பதிலிருந்து இப்பொருள் விளங்குகிறது. மாலுகந்த என்பது, மால்(பெருமாள்)உகந்த (விரும்பிய) என்றும் மாலை(பெருமாளை)உகந்த (விரும்பிய)என்றும் இருபொருளைத்தரவல்லது. மாலால் உகக்கப்பட்டவர்களும் மாலைஉகப்பவர்களும் மாலுகந்தவர்களாவார்கள். தேசிகோத்தமன் ஸ்ரீஸூக்திகளில் ஒருசொல்காணப்பட்டால் அச்சொல் எத்தனை பொருள்கள் தரவல்லதோ, அத்தனை பொருள்களும் (ஸந்தர்ப்பாதிகளால் விலக்கப்பட்டாலன்றி) விவக்ஷிதங்களே. ஒவ்வோர் பொருளைக்கொண்டு ஒவ்வோர் அர்த்த புஷ்டியையும்ரஸவிசேஷத்தையும் காணலாம். ஆகவே இங்கே குறிக்கப்படும் ஆசிரியர்கள் மாலா லுகக்கப்பட்ட ஆசிரியர்கள் என்றும், மாலையுகக்கும் ஆசிரியர்கள் என்றும் நம்மால் கொள்ளப்படவேண்டும்.

மாலாலுகக்கப்பட்ட ஆசிரியர்கள் என்ற முதற்பொருளின் ஸ்வாரஸ்யத்தை அநுபவிப்போம். வேதவேதாந்தங்களையும் வகுத்துக் கொடுத்து ஸூத்ரங்கள் மூலம் அவைகளின் அர்த்தங்களை எடுத்துக்காட்டிய வ்யாஸபகவான் முதலான மஹரிஷிகளெல்லாம் ஒரு முறையில் மாலாலுகக்கப்பட்டவர்களே யென்பது உண்மையாயினும், தத்வஹிதபுருஷார்த்தங்களனைத்தும் திருமாலே என்று காட்டிக் கொடுத்த ஆழ்வார்கள் எந்த அளவில் 'திருமகளால் அருள்மாரி' யென்றும், திருமாலாலருளப்பட்டசடகோபன்' என்றும் பேசப்படவல்லர்களோ அந்த அளவில் மஹரிஷிகளை வ்யவஹரிக்க முடியாது என்பதை ஒருவரும் மறுக்கவியலாது. புராணரத்நமாகிய ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை நிர்மித்த ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷியும் மாசில்மனந்தெளிமுனிவர்கள் தலைவராகமட்டும் விளங்கமாட்டுவரேயன்றி விசிஷ்ய மாலுகந்த ஆசிரியராகார். அபிநவ தசாவதாரமென்று தேசிகன்கொண்டாடி யிருக்குமளவில் மாலின் உகப்பு ஆழ்வார்களிடமே தங்கியது. எம்பெருமானே உகந்து ஆழ்வார்களாக அவதரித்தானென்றால் அவர்களையன்றி வேறுயாரை மாலுகந்த ஆசிரியர்களாகக்கருதலாம். 'காதல்செய்து என்னுள்ளம் கொண்டகள்வன்' என்றும் 'என்னைமுற்றப்பருகினான்' என்றும் அவர்களே வியக்கும்படி யன்றோ அவன் அவர்களை உகப்பது. ஆழ்வார்களுக்குப் பிறகு தோன்றிய நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர் போன்ற ஆசார்யச்ரேஷ்டர்களும்கூட மாலுகந்த ஆசிரியர் என்றே தேசிகன் திருவுள்ளமாதல் வேண்டும். 'யஸ்யாஸ்ம வசஸா ஜகதே கதா விசித ஜகத் ஸூத்ரோ வயம் ஸூக்திகா:' என்ற பங்க்தியே இதற்குப் போதுமான சான்று.

* * * * * * *

மாலையுகந்த ஆசிரியர் என்ற மற்றொரு பொருளும் ஆழ்வார்களையும் அவர்களுக்குப்பின் அவதரித்த ஆசார்யச்ரேஷ்டர்களையுமே குறிக்கும். 'பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் நாயகன் அவனே' யென்றும்' ஒத்துநின்ற மூவுருவும் கண்டபோதுஒன்றும்சோதி முகிலுருவமெம்மடிகளுருவம்தானே' யென்றும் 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே ஸ்வத: ஸ்ஸ வரஸ்ரிது ஸௌக்யஷீ ஸத்ராவா' என்றும் பேசவல்ல இவர்களை யன்றோ உண்மையில் மாலையே உகந்தவர்களாவார். எல்லாத் தெய்வங்களோடு சேர்த்து அவர்களுள் ஒருவனாக எம்பெருமானைப் பேசிப்போந்த வேத இதிஹாஸ புராணங்களைப்போ லல்லாது 'ஸ்ரீமந் நாராயணோ ந: பதிரகிலதநுர் முக்திதோ முக்திபோக்ய:' என்று தெளிவுபடப் பேசவல்லமை பெற்றது பற்றி ஆழ்வார்களையும் அவர்களை அடியொற்றிய ஆசார்யர்களையும் மாலையேயுகந்த ஆசிரியர்கள் என்று சொல்லத் தடையென்ன.

* * * * * * *

இதுவரை மால் என்னும் பதத்துக்குத் திருமால் என்று பொருள் கொண்டு இரண்டு யோஜனைகள் கூறினோம். இனி மால் என்னும் பதத்துக்கு வ்யாமோஹம், அல்லது மிகுந்த ஆசை, என்று ஒரு பொருளும் உண்டல்லவா? (ஆச்ரிதர் திறத்தில் மிகுந்த வ்யாமோஹம் கொண்டவனாதல் பற்றியே, எம்பெருமானுக்கு 'மால்' என்று திருநாமமேற்பட்டது.) அப்படிப்பட்ட மாலை (ஆசையை) உகந்த (விரும்பிய,) ஆசிரியர்கள், மாலுகந்த ஆசிரியர்கள். அதாவது:- எம்பெருமானிடத்து ப்ரேமையையே பெரிதும் விரும்பிய அதிகாரிகள் இவர்கள். 'காண்பான் அவாவுன் நான் அவா ஆருயிருருகியுக்க, எங்கள் மால் கண்டான் இவை, அன்பே பெருகும் மிக, காதல் கடலின் மிகப்பெரிதால் கொண்ட என் காதலுரைக்கில் தோழீ, மண்டினி ஞாலமும் எழ்கடலும் நீள் விசும்புங்கழியப் பெரிதால்' 'ஆவியின் பரமல்ல வேட்கை' 'அதனில் பெரிய என் அவா' என்பதுபோன்ற பல வாக்யங்கள் மாலை (ஆசையை) விரும்பியவர்கள்இவர்கள் என்றுகாட்டிக்கொடுக்கின்றன. 'காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்' என்று கலியனும் 'கண்ணனுக்கே ஆமது காமம்' என்று ராமனுசனும் அறுதியிட்டுப் போந்தமை காண்க. 'சோராத எப்பொருட்கும் ஆதியாம் 'சோதிக்கே ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்' என்று தமக்குக் காதலையே நிரூபகமாகக் கொள்ளும் நம்மாழ்வார் நிறுவிய இந்தக்காதல் ஸித்தாந்தம்தான் 'ஸக்ருத் த்வதாகார விலோகநாஸயா த்ருணீக்ருதாநுத்தம புக்தி முக்திபி:' என்று அக்காதலின் தன்மையை அறிந்து பேசிய ஆளவந்தாராலும் 'யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத:' என்று வர்ணிக்கப்பெற்ற ஸ்ரீபாஷ்யகாரராலும் மெய்ந்நெறியாக எடுத்து நமக்குக் காட்டப்பட்டிருக்கிறது. பகவத்காமத்தையே உகந்த இவர்களே உயர்ந்தோர்கள் என்று காட்டவே 'மாலுகந்த ஆசிரியர்' என்று தேசிகனால் பாராட்டப் பெறுகிறார்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நृஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

வகுளாபரணப்பெருமாள் தமிழின் வாசியறிந்திடுநாள்

[ஸ்ரீ. உப. வித்வான், வில்லிவலம், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

புரட்டாசித் திங்கள் திருவோணத் திருநக்ஷத்திரத்தில் அவதரித்த தூப்புற்தேவின் திருவடிதொழுது, தெரிந்ததைத் தினையளவு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீவரதராஜ பஞ்சாஶத்தின் ஒரு ச்லோகத்தை ஸ்ரீநம்மாழ்வார் பாசுரம் ஒன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து இன்புறுவோம்.

கரிகிரிமேல் கமலையுடன் அரசாளும் பேருளாளன் பேர் பாடுவது அந்த பஞ்சாஶத்து. அவனுடைய அதி ஸௌந்தரமான வடிவத்தில் படிந்து பலவிதங்களான அநுபவங்களை ஆசைப்பட்ட ஸ்ரீ தேசிகன் இந்த லோகத்திலேயே மேலும் சிலகாலம் வஸிக்க விரும்பினர். பேருளாளனும், இவர் மநோரதித்தபடியே இவரை இங்கு விட்டு வைக்க நினைத்தருளினன். அவ்வளவில் இவர் சில நிபந்தனைகளை அவனிடத்தில் அறிவிக்கிறார். 'அவைகளை நீ அமைத்துத் தருவாயாகில் இந்நிலவுலகே விண்ணுலகமாம்படி இருக்கும். என்னுடைய மநோரதமும் ஒரு படி முடிந்து விடும்' என்று. அவற்றுள் முதல் நிபந்தனை:— 'ஸர்வ பலஹேதுவான உன்னுடைய அநுக்ரஹம் எனக்குக் கிடைக்க வேணும். 'ப்ரஸாதஸ் ஸுலப:'. அவனுடைய ப்ரஸாதம் நமக்கு ஸுலபமானல் எப்பொருளும் கிடைத்ததேயாகக் கொள்ளலாம். அது இல்லையெனில் எதுவும் இல்லை என அமையும். ஆக 'உன்னுடைய அநுக்ரஹம் எனக்கு முதலில் கிட்டும்வகை செய்வாய்' என்று ப்ரார்த்திக்கிறார்.

'நல்லது கேட்டீர். நமது அநுக்ரஹம் அவ்வளவு ஸுலபமோ! கர்மயோக, ஜ்ஞாநயோக, பக்தியோக, ப்ரபத்தி யோகங்களில் ஒன்றுக்கல்லது நாம் ஆரையும் அநுக்ரஹியோம். நீர் இதுகளில் ஒன்றைச் செய்யப் பாரும். அன்றிக்கே வேறு ஸுக்ருதங்கள் பல உண்டு செய்ய எளிதானவைகள். கடைசி பக்ஷத்தில் நாம் உகந்தருளினநிலங்களிலாவது வஸித்துவாரும். நமது ப்ரஸாத பாத்ரமாவீர்' என்று பேருளாளன் அருளிச் செய்தானுகக் கொண்டு ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்கிறார்— 'அந்த திவ்ய தேசவாஸத்தையும் நீயே கைக்கூடும்படி செய்ய வேணும்'. 'தவாஸிஸீவ தஹேசு:'. நீயன்றோ அகிலத்திற்கும் ஆதிகாரணம். ஆகவே உன் அநுக்ரஹம் பெற வல்லேனும்படி நீயே என்னை உன் பக்கலில் இருத்திக் கொள்ளக் கடவாய்.

இவ்வாறு பேருளாளனை ப்ரார்த்தித்தவருக்கு ஒருஸந்தேஹம் எழுந்து மனத்தைக்குழப்பியது. அந்தோ! என் செய்தோமாக. நாம் கேட்டபடி திவ்யதேசவாஸத்தை அவன் கொடுத்தவிடத்திலும் சிசுபாலாதிகளைப்போல் பகவத் தூஷணமே பரம போக்யமாய்ச் செல்லும் ஸ்வபாவத்தையும் அவன் கொடுத்திட்டால் என் செய்வது? இது சிசுபாலாதிகளினும் கெட்டதசையாய்முடியுமே! எவைசிலபாபங்களை பகவத் க்ஷேத்திரத்திற்குப் புறம்பே செய்கிறோமோ, அவைகளையே பகவத்க்ஷேத்திரத்தில் செய்தால் வரும் அநர்த்தம் மிக்க அதிகமாய் இருக்கும். தேசஸ்வபாவம் அத்தகையது. இங்கு சிலர் கேட்ப்பர் 'யதிம்வி்தவி க்ஷேத்ராணோவிஶேஷா ராயதநே வஸேத் । ந கிம்வி்தவி க்ஷேத்ராணோ விஶேஷாராயதநே வஸேத் ।' என்று ஒரு ஶாஸ்த்ரம் சொல்லவில்லையா? நல்லதைச்செய்யவுமாம், செய்யாதொழியவுமாம், எப்படி பட்டாயினும் பகவத் க்ஷேத்திரத்தில் வஸி

க்கவேண்டும் என்றவாறு அது கட்டளையிடுகிற
தல்லவோ? என்று. அதன் கருத்து அதுவே
யாயினும் வேறு அதிகாரி விஷயத்தில் அதைக்
கொள்ள வேணும். பகவத்வேஷம் அற்ற
வர்களாய், அவனிடம் கொஞ்சம் அன்புமுடை
யவர்களுக்கு இஜ்ஜன்மத்தில் நல்லதைச் செய்தி
டினும், செய்யாதொழியினும் பகவத் க்ஷேத்ர
வாஸம் உய்யும் வழியாகும் என்று. ஆகஉக
ந்தருளின நிலங்களில் நம்மை இருக்கச் செய்யு
மிடத்திலும் பகவத்வேஷாதிகளை நமக்குக்
கொடுத்திடாது இருக்க வேணுமெனக் கருதி
அவனை மறுபடி இறைஞ்சுகிறார் — 'ஹஸ்தி
ஹகிரநவா ஹவிமெராவநாய' என்று.
ஹஸ்திகிரிநாதனே! உன்னிடம் எனக்கு பக்தி
யையும் அமைத்துத் தருவாயாக. விவேக
மற்ற ஜாதியிற் பிறந்த திக்கஜங்களுமன்றோ
உன்னிடம் ப்ரேமைகொண்டன. (இம்மலைக்
கு இப்பெயர் வந்த காரணம் அந்த தலபுராண
த்தில் இவ்வாறுகக்கூறப்பட்டிருப்பது காண்க)
'ஹநவா' அந்த பக்தியும் பழுதற்றிருக்க
வேணும். சிலர் தம்முடைய நன்மைகளைக்
கோலி உன்னைக் காதலிப்பர். இது பகவத்
பக்திக்கு வரும் ஓர் பழுது. மற்ற நம் காமங்
கள் மாய்ந்து உனக்கே நாம் ஆட்செய்யும்படி
பார்க்க வேணுமென்கிறார்.

இவர் கேட்டபடியெல்லாம் கொடுக்க அவன்
ஸங்கல்ப்பித்தருளினான். ஆனால் பாகவதர்கள்
நிறைந்து வாழும் திருப்பதிகள் அருமருந்தா
கையால் அவை கிடைக்கப் பெறாமல் ஏகாந்த
மான ஒரு திவ்யதேசத்தில் இவரை வைக்க
நினைத்தான் போலும். அடியார்கள் குழாங்
களுடன் கூடிக் குதூஹலிக்க நினைத்த இவரு
க்கு அது ஒரு அநர்த்தமாகுமிறே. 'புருஷா
ர்த்த ஸாகரம் வற்றுதல், வரையிடுதல் செய்
யாதபடியிருக்க பகவத்கைங்கர்யத்தின் எல்லை
நிலமான பாகவத கைங்கர்யம் மிகவும் உபா
தேயம்' என்று இவரே ஸாதித்தது நோக்க
வேணும். பகவத்கைங்கர்யம் செய்ய நினைத்து
முதலில் அதில் இழிந்தவன் காலக்ரமத்தில்
பாகவத கைங்கர்யமும் செய்ய விரும்புவன்.
மனைவியினிடம் கொள்ளும் அன்பு முதலியன

மாமனார் வீட்டவர் வரையில் வளருமாப்போல்
பாகவதகைங்கர்யத்தைவெறுப்பவனுக்கு இவ்வு
லகில் இன்பக்கடல் ஒரு வரை அறுத்தலுக்கு
உட்ப்பட்டதாகவோ, அடியோடு வற்றினதா
கவோ முடியுமே அல்லது எல்லை அற்று விரி
ந்து கிடப்பதாய் இராது. ஆகையால் அதை
யும் சேர்த்து ப்ரார்த்திக்கிறார். 'ஸம்ஸூஜ்ய
தே யதி வ ஊாவஸஜநஸூீய:' என்று. பாக
வதர்களுடன் பகவத் குணங்களை நித்யஸூரி
கள் போல பிணங்கிப் பிதற்றி நான் காலம் கழி
க்கவேணும். இதையும் நீ அருளவேணும்.

இந்நான்குநிபந்தனைகளையும் நீ நிறைவேற்றி
னால் 'ஸம்ஸார ஸஷ ஹரவஜூவவ ஜூ ஸவ'.
இம்மண்ணுலகே விண்ணுலகாகும். உன்னை
முற்றாட்டாக அநுபவித்து என்மனோரதமும்
ஒரு படி முடியுமென்கிறார்.

இப்படி ஸ்ரீ தேசிகன் பஞ்சாஶத்தில் அரு
ளின பொருளை வகுளாபரணப் பெருமாளின்
திருவாய்மொழி மூலமாகவும் நாம் அநுபவிக்
கலாம். 'இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென்?
இரு மாநிலம் முன் உண்டுமிழ்ந்த செங்கோ
லத்த பவள வாய்ச் செந்தாமரைக்கண் என்ன
ம்மான் பொங்கேழ் புகழ்கள் வாய வாய்ப்புல
ன்கொள்வடிவுஎன் மனத்ததாய் அங்கேய் மல
ர்கள் கையய வாய் வழிபட்டோட அருளிலே'
என்பது பாசுரம். இங்கே திரிந்தேற்கு—இந்
தஸம்ஸார மண்டலத்திலேயே வஸிப்பவர்களு
க்கு, இழுக்கு உற்றுஎன்—என்ன சேதம் ஏற்
பட்டு விடும்? 'ஸம்ஸார ஸஷ ஹரவஜூவவ
ஜூ ஸவ' என்று முன் சொன்னபடி இது
வே பரமபத துல்யமாம் போது வேறு ஒரு
தேசம் செல்ல அபேக்ஷிக்கவேணுமோ? ஸம்
ஸாரமண்டலம் பரமபத துல்யமாவதற்கு முத
ற்காரணம் அவன் அருள் பெறவேண்டும்.
'வழிபட்டோட அருளில்' பூர்வர்களான பாக
வதர்கள் சென்ற வழிசெல்ல அவன் அருள
வேணும். எல்லா உலகங்களையும் ப்ரளயகால
த்தில் உண்டு, தன் வயிற்றடக்கி, ரக்ஷித்த
வன். பிறகு ஸ்ருஷ்டி காலம் வந்தவாறே
வெளியார்காண வெளியில் உமிழ்ந்தவன். செங்
கோலத்த பவளவாயன், செந்தாமரைக் கண்

ணன், இத்துணைச் சீரும் சிறப்பும் உடையவன் வேறுயாரோ அன்று. 'என்னம்மான்' எனக்கு ஸர்வவிதத்திலும் ஸ்வாமியானவன். அவன் அருள வேணும். இதையே 'ஸ்வம வெஸ ஹ்ருஸீக்ஷவி' என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்தபடி.

இங்கே திரியுமவர்க்கு வரும் சேதமென்ன? ஜகத்காரணமாயும், வடிவழகுடையவனுயும் உள்ள அவன் அருளினுனுகில் என்றுர் ஆழ்வார். இது மட்டில் போதாது. வேறு சிலவும் வேண்டுமென்கிறுர் மேலே. பொங்கேழ் புகழ்கள் வாயவாய்— பகவானுடைய பொங்கிவரும் புகழ்களை வாயில் வைத்து பாகவதர்களுடன் கலந்து பேசிப்பருகவேணும். 'யெெய யஶஃ வரஹ்ராழ' கல்யாணகுணங்கள் வாய்ப்பட்டு இருப்பது, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கே. கல்யாணகுணங்களை வெளிப்படுத்தும் பல பகவந்நாமாக்களைச் சொல்லி இன்புறலாமே! 'ஹம்ஸஶ்ஜ்ஜ்யெதெ யஶி வ ஊாஸ ஜநஸ்வஹீய:' என்று முன்பு ஸ்ரீதேசிகன் விரும்பினதும் இதுவே. பகவந்நாமாக்களைச்சொன்னுல் வாய் வெந்து விடுமோ! 'வக்த்ரம் ஸஶ யெஃாவி ந வக்த்ரி கஶ்விக ஶெஹா ஜநா-நாம வ்யஸநாஹிஶ்வ்யழ' என்றனர் பெரியோர். பகவானுக்கு பேர்களும் பல உண்டு. அவைகளை உச்சரிக்க வாயில் நாவும் நன்றுக உண்டு. இருந்தும் ஸம்ஸாரிகள் கெடுவதேன்? பரிஹரித்துக்கொள்ள வழியிருந்தும் இப்படியா வ்யஸந பரம்பரையை விரும்பிப் போருவது? 'ஹ்ராத ஶெஃவெதி க்ருஷ்ணேதி ஶோவிநேதி வ ஜல்வதாழ । ஶஜ்ராஹ்ந வாவராணெஹ வயொZவ-ஸாஜஸஸ உவ்யெதெ ॥' அஜீர்ணத்தில் ஆஹாரம் உண்டால், காலையில் உண்டது உச்சிப்போதிலும், உச்சிப்போதிலுண்டது மாலையிலுமாகத் தொந்திரை செய்யும். க்ருஷ்ண! கோவிந்த! என்று காலையில் பகவந்நாமாக்களைச் சொன்ன பேர்களுக்கு அப்படி மத்யாஹ்நத்திலும், மாலையிலுமாக ஏதேனுமொரு நோய் உண்டாகக் கண்டி கோளாகில் சொல்லிப் போங்கோள் என்று மஹர்ஷி கேட்கிறுர்.

மேலும் ஆழ்வார் ப்ரார்த்திக்கிறுர். புலன் கொள்வடிவு என்மனத்ததாய்—ஸேவிப்பவரின் ஸர்வ இந்த்ரியங்களையும் கவர்ந்து கொள்ளும் அழகு பெற்ற அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹம் என்மனத்திலிருக்கும்படி அருள வேணும். இவ்வம்சம் பகவத்ஸமீப தேசங்களில் வஸிப்பவர்களுக்கே கிடைக்கக் கூடியதொன்றுகையால் ஸ்ரீ தேசிகன் அதற்கேற்ப இவ்விஷயத்தைச் சிறிது மாற்றி 'தவாஹ்ஸி ஸஶீவ தஶ்ஶுக' என்று அபேக்ஷித்தார். 'புலன் கொள் வடிவு' உலகத்தில் புலன்கள் வடிவைக்கொள்ளக் கடவன. 'ஐந்த்ரியம் ரூவஹ்ராஹகம் வக்ஷு:' இங்கோ (பகவத்விஷயத்திலோ). வக்ஷுர்ஹ்ராஹகம்ரூவழ.' சக்ரவர்த்தித்திருமகனின் திருமேனியழகை வர்ணிக்குமிடத்தில் 'ரூஷிவிதாவஹாரிணழ' என்று மஹரிஷியும் இந்த்ரியங்களுக்கு க்ராஹகமாக வடிவு அழகைச் சொன்னுர்.

'அங்கேய் மலர்கள் கையவாய்' என்பது அடுத்து வரும் ப்ரார்த்தனை. பெருமாள் திருவடிகளுக்குத் தகுந்த புஷ்பங்கள், கைகளில் நிறைந்து இருக்கவேணும். புஷ்பங்களை அவன் திருவடியில் இட்டுப் பூஜிக்குமளவு தனக்கு அவனிடம் பக்தி பாரவச்யம் வேணுமென்கிறுர். ஆராமங்கள், தடாகங்கள் இவைகளில் நிறையபூக்கள் உண்டு; பறிக்கக்கைகளும் உண்டு. ஆனுல் அவைகளைப் பறித்து அவன் திருவடிகளில்இட நெஞ்சில் ஈரம் வேண்டுமே. இவை எல்லாமிருந்தும் ஏதாகிலும் விரோதிகளால் விக்நம் வரில் அதையும் தானே பரிஹரித்துத் தன் திருவடியில் இட்டுக்கொள்ளும் ஸ்வபாவமும் அவனுக்கு உண்டு. அன்று ஆனைக்கு அருள் செய்த விடத்தில் இது ஸ்பஷ்டம். அழுங்கிய ஆனையின் அருந்துயர் இதுவே. பறித்த பூவின் செவ்வி மாறுதே அவன் திருவடிகளில் இடப்பெற்றிலோமே இதொரு விக்நம் முதலையினுல் வந்ததே! என்று. தன்னுடர்பிறகு முதலையினுல் வந்த நலிவை அது கணிசிக்கவில்லை. ஆறிலோ நூறிலோ சாகக் கடவதான இந்த சரீரத்தில் மஹான்களுக்குக் கண்ணேட்டம் உண்டாகாதிறே. ஆக பூ

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

தூப்புல் குலவிளக்கு

[ஸ்ரீ. உப. ஈ. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, M. A.L. T. ப்ரின்ஸிபால்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

'सानुप्रासप्रकटितदयैः सान्द्रवात्सल्यदिग्धैः
अम्बस्निग्धैरमृतलहरीलब्धसब्रह्मचर्यैः ।
घर्मे तापत्रयविरचिते गाढतप्तं क्षणं मां
आकिञ्चन्यग्लपितमनघैराद्रियेथाः कटाक्षैः ॥'

'நின்னருளாங் கதியின்றி மற்றொன் றில்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலைகழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன்
உன் சரணே சரணென்னுந் துணிபு பூண்டேன்.'

இவ்விதமாக ஸ்ரீமந் நாராயணனுடைய அநுக்ரஹம் ஒன்றே நம்மைக் காப்பாற்றும் என்று அடிக்கடி எடுத்து உரைக்கும் நம் ஆசார்யச்ரேஷ்டர்களுக்குள் நம் மனத்தில் இடங்கொண்டவரே நம் தூப்புல் குலவிளக்கு. இக் கருத்தைத்தான் ஸ்ரீ நயினாராச்சார்:—

'உன்னருளன்றி யெனக்கொரு நற்றுணை யின்மையினால் என்னிருவல்வினை நீயே விலக்கியிதங்கருதி .... பொன்னருளாலருளாய் புகழ் தூப்புல் குலவிளக்கே' எனக் கூறினார்.

(கடற்கரை) கலங்கரை விளக்கு ஸமுத்திரத்தில் ப்ரயாணஞ் செய்து தவிக்கும் மானுமிகளுக்கு எப்படி உத்ஸாஹத்தைக் கொடுக்குமோ, அதே போல் ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கித்தவிக்கும் சேதனர்களுக்கு சீர் தூப்புல் குலவிளக்கு அச்சத்தை நீக்கி உற்சாக மூட்டுகிறது. உலகில் உள்ள சேதனர்களில் பலர் நல்லது கெட்டது தெரியாமல் மனத்திற் தோன்றினவைகளைச் செய்து கொண்டு காலங் கழிக்கின்றனர். பகுத்தறிவு மங்கிக்கிடப்பதாலே அதை வெளிப்படுத்த வேண்டி வருகிறது. பலஆண்டுகளாக உபயோகத்திலில்லாத உலோக ஸாமான்கள் தங்கள் ப்ரகாசத்தை இழந்து கிடக்கின்றன. நம் முயற்சியால் அழுக்கை நீக்கி ப்ரகாசத்தை வெளிப்படுத்துகிறோம். அதே போல் நம் ஆசார்யர்களும் 'எற்றிமனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும் மாற்றி' விடுகின்றனர். சேதனனிடம் ஜ்ஞாந விளக்கு எற்கனவே உண்டு. ஆனால் அஜ்ஞாநத்தால் மூடப்பட்டிருக்கிறது. அந்த அஜ்ஞாந இருளைப் போக்கடிப்பது மிகவும் அவச்யமாகிறதல்லவா.

ஒரு சிலர் இருளில் வஸித்தும், ஒளியைக் கண்டு நடுங்கியும், அழுக்கை அநுபவித்தும்,

---

இட்டு அர்ச்சிக்குமளவு எனக்கு அவனிடம் பக்தியும் வேண்டும் என்கிறார். ஸ்ரீ தேசிகனும் இதையே 'ஸ்வயம்வ்யக்த ஹஸ்த்ரநவா ஸுரி ஸைல நாய' என்றார்.

ஆக இவ்விதம் ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ஆழ்வாரை அடி யொற்றித் தன்னுடைய க்ரந்தங்கள் அமைத்து அருளினமைக்கு இது ஓர் உதாஹரணமாத்திரம் எனக் கருதி இவ்விஷயத்தை இங்கு விஜ்ஞாபித்தேன். வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி, இது போன்றவைகொண்டு பிறரும் அறியும்படி கிடப்பதை முன்னிட்டே முன் தலைப்பில் கூறிய முதுமொழியும் முன்னோரால் மொழியப்பட்டிருக்கவேண்டும்.

சுத்தத்தை விரும்பாமலும் இருப்பதையும் நாம் காணுவதும் உலகில் இயல்பே. ஆனால் இந்நிலை விரும்பத்தக்கதல்ல. ஸுகாதாரம் என்று கூறுபவர்கள் ஆகட்டும், ஸுகாதாரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள சாஸ்த்ரங்களைக் கூறுபவர்களாகட்டும் இந்நிலையை விரும்பார்கள். அசுத்தத்தை நீக்கவேண்டியதும், இருளைப் போக்கடிக்க வேண்டியதும், ஒளியையும், ஒளியாகிய அறிவையும், உண்டாக்க வேண்டியதும் நமது முக்யகக்டமைகள் ஆகும். இம்மாதிரியான நற்காரியங்களைச்செய்பவர்கள் தான் ஆசார்யர்கள். 'ஏற்றிமனத்தெழில் ஞானவிளக்கை யிருளனைத்தும் மாற்றினவர்க்கு ஓர் கைம்மாறு மாயனும் காணகில்லான்' என்று ஸ்வாமி தேசிகனே அருளிச்செய்தார்.

'सत्पुरुषःखलु हिताचरणैः अमन्दं आनन्दयति अखिललोकं अनुक्त एव' என்றது ஓர் ஆப்தவாக்யம். அதாவது — ஸாதுக்கள் இதரர்களால் ப்ரார்த்திக்கப் படாமலேயே தாங்களாகவே ஸர்வலோகத்தையும் நற்கார்யங்களைச்செய்து ஆநந்திக்கச் செய்கிறார்கள். அதேபோல் ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்ப்பாராமல் ஆசார்யர்கள் சிஷ்யர்களுடைய க்ஷேமத்தையே புருஷார்த்தமாகக் கருதுகின்றனர்.

'सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज । अहं त्वा सर्व पापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥' என்ற ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவின் வாக்யத்தின் உண்மையை அறிந்தவர்களே ஆசார்யர்கள். இதைமனத்திற்கொண்டு சிஷ்யவர்க்கங்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமே என்று ஆசைப்படுகின்றனர். **'मद्रक्षणभरः श्रीपतेरेव'** அதாவது–என்னைக் காப்பாற்றும் பொருப்பு ஸ்ரியஃபதியினுடையதே என்ற ஜ்ஞாநம் உண்டானவுடன் ஜீவன் கடைத்தேறுகிறான். நான், என்னுடையது என்ற அபிமானங்களும், அஹங்காரங்களும் தொலைந்தவுடன் சேதனன் நற்கதியடைய வழியைத் தேடிக் கொள்பவனாகிறான். அதுவரை எங்கெங்கோ அலைந்து கஷ்டப்படுகிறான். பிறகு ஒரு சிலர் ஸரியான இடத்திற் புகுவதில்லை. எப்படி காகாஸுரன் ராமனை மனத்தில் எண்ணாமல் **'त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः'** என்று மூவுலகும் அலைந்து முடிவில் ஸ்ரீராமபிரானையே சரணமடைந்தானோ அதேபோல் கெட்டலைந்து பிறர் மனை புகுந்தெழுந்து பல துடரங்கள்பட்டு, முடிவில்தான் 'உன்னையல்லால் மற்றொரு தெய்வம் இல்லை' என்று ஸ்ரியஃபதியினுடைய திருவடியை அடைகின்றனர். இந்நிலையில் உள்ளவர்களைத்தான் ஆசார்யக்ருபை கைதூக்கி விடுகிறது. நமக்கு ஏற்பட்டுள்ள வல்வினைகளைநீக்கி நம் ஹிதங்கருதி நற்றிரு மந்த்ரங்களை நமக்கு ஓதி நம்மைக் காத்தருள்கின்றனர். இப்பேர்ப்பட்ட பேருதவிக்குத்தான் நாம் கைமாறு ஒன்றும் செய்யமுடியாமல் தவிக்கிறோம்.

உலகில் **धर्मार्थ काम मोक्षाख्येषु चतुर्विध पुरुषार्थेषु मोक्ष एव परम पुरुषार्थः** என்று வேதமும், அதை யொட்டியே புராணங்களும், பிற்காலத்தில் ஆசார்யர்களும் உத்கோஷிக்கின்றனர். 'அறம் பொருள் இன்பம் வீடுபயக்கம்' என்று குறளும் காணப்படுகிறது. இப்பேர்ப்பட்ட புருஷார்த்தத்தை அடையும் வழியை வேதத்திலேயே காண்கிறோம். **'चन्द्रां प्रभासां यशसा ज्वलन्तीं श्रियं लोके देवजुष्टा मुदाराम् । तां पद्मनेमीं शरणमहं प्रपद्ये ऽलक्ष्मीर्मे नश्यतां त्वां वृणे ॥'** பின்பு இதிஹாஸ புராணங்களிலும் அதேபோல் வழிவிதிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பின்பற்றியே **'कान्तस्ते पुरुषोत्तमः'** என்று ஆரம்பித்து ஆளவந்தாரும் ஸ்ரீயின் பெருமையைப்பாராட்டுகிறார். ஸ்ரீ ஸ்தவத்திலே ஸ்ரீ வத்ஸாங்கமிச்ரரும் **'यस्याः कटाक्षवीक्षाक्षणलक्षंलक्षितामहेशाः स्युः। श्रीरङ्गराज महिषी सा मामपि वीक्षतां लक्ष्मीः ॥'** என்கிறார். அதாவது–ஸ்ரீரங்கநாதமஹிஷியாகிய ஸ்ரீ (லக்ஷ்மீ) தன் க்ருபாகடாக்ஷத்தால் என்னை அநுக்ரஹிக்கட்டும். ஏனென்றால் க்ஷணகாலத்தில் அக்கடாக்ஷ விசேஷத்தால் எல்லோரும் மஹேசர்களாக (பலிஷ்டர்களாக) ஆகிறார்களல்லவா!

ஸ்ரீபராசரபட்டரும் ஸ்ரீகுணரத்ந கோசத்தில் பலவிதமாக லக்ஷ்மியின் புகழை எடுத்துரைக்கிறார்.

இப்படி பூர்வாசார்யோக்திகளால் புகழப்பட்ட லக்ஷ்மியின் பெருமையை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் நமக்கு எடுத்துரைப்பதை நாம் பார்த்தும், படித்தும், அநுபவிக்கும் பாக்யம்கிடைத்திருக்கிறது. ஸ்ரீஸ்துதியில் **'श्रेयोमूर्तिं श्रियमशरणस्त्वां शरण्यां प्रपद्ये'** என்கிறார். இந்தக்

கருத்து ஸ்ரீபாஷ்யகாரரால் சரணாகதி கத்யத்தில் '**अनन्य शरणश्शरणमहं प्रपद्ये**' என்று கூறப்பட்டதைப் பின்பற்றியதே யாகும். '**माता देवि त्वमसि भगवान् वासुदेवः पिता मे**' அதாவது நீயே (என்) தாயாகிறாய். பகவான் வாஸுதேவன் என் தகப்பன் என்ற கருத்து ஏற்கெனவே ஸ்ரீ தேசிகன் ஸாதித்த '**युवां दैवतं दम्पती नः**' (நீங்கள் இருவரும் சேர்த்தியிலே எங்கள் தெய்வம்) என்றதை அநுஸரித்ததே யாகிறது. 'திருமகளோ டொருகாலும் பிரியா நாதன்' 'ஒண்டொடியாள் திருமகளுந் தானுமாகி' என்றெல்லாம் ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸாதிப்பதெல்லாம் இக்கருத்தைப் பின்பற்றியவைகளே. 'அந்தமிலாவாரணங்கள் நாலாய் நின்ற வதன் கருத்தை யாழ்வார்களாய்த்தெடுத்து' என்று சொல்வதால் வேதோக்தமான வர்த்தங்களைப் பின்பற்றினவை ஆழ்வார்களின் பாசுரங்கள், அவைகளைப் பின்பற்றினவை மற்றைய ஆசார்யர்களின் உக்திகள் என்றும் அவைகளை 'சிந்தையினாலனுதினமும் சிந்திப்போர்க்குச் சேமமதாந்திருமால் தன் கருணையாலே' என்பவை தெளிவாகின்றன.

மேலே கூறியபடி நமக்குப் பேருபகாரம் செய்த ஸ்ரீவேதாந்த தேசிகனின் பெருமையை நாம் பாடிப்பாடி மனந்தெளிந்து உய்வதே நல்லதல்லவா. பூர்வாசார்யோக்திகளை நாம் படிப்பதும் அவைகளின்படி நம் வாழ்க்கையைத்திட்டப்படுத்திக்கொள்வதுமே கற்பதின் பயன்.

'கற்கக் கசடற கற்றபின் நிற்க அதற்குத்தக' என்றபடி நம் வாழ்க்கையில் நாம் கற்றறிந்த ஸூக்ஷ்மார்த்தங்களைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

வைராக்யபஞ்சகத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் வெறும் அர்த்தத்தைத் தான் விரும்பவில்லை என்பதையும் '**देवं सेवितुमेव निश्चिनुमहे**' என்பதால் பகவத் பக்தியே நமக்கு எல்லாவற்றையும் தந்தருளக் கூடியது என்பதையும் விளக்கிக்காட்டியுள்ளார். அதையநுஸரித்து நாமும் '**कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन**' என்றபடியே நமக்கு ஏற்பட்ட பகவத் பக்தியிலே நாம் ஈடுபட்டிருத்தல் அவச்யம் என்பதை அறியவேண்டும். 'முகுந்தனடி பூண்டன்றி மற்றோர் புகலொன்றிலையென' நிற்க வேண்டியதே நமது கடன்.

இப்பேர்ப்பட்ட உயர்ந்த கருத்துக்களை நமக்கு எடுத்துரைத்தவரே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் என முன்னமே கூறினோம். வேத வாக்யங்களுக்குப் புறம்பான எல்லாமதங்களையும் கண்டித்து 'மாதவனே பரனென்று வையங்காண' எடுத்துரைத்தார். 'நாரணற்கே யடைக்கலமாய் நல்குவீரே' என்றும் தைர்யமாய் எடுத்துரைத்தார். இந்த மஹானின் சரித்திரமே நமக்கு ஓர் எடுத்துக் காட்டு. ஆத்மகுணங்களுக்கெல்லாம் ஆகரமாய் விளங்கினார் என்பதும் தெளிவாகிறது.

'வணக்க மோடுக்சம் வழக்க மோழுக்கமிரக்கஞ்சேரும்
இணக்க முறக்கமிழுக்குமழுக்குமிகந்து நிற்கும்
குணக்குல மோங்குமிராமானுசன் குணங்கூறும் தூப்புல்
அணுக்கனைப் பிள்ளைதனை யரணாக வடைபவர்க்கே.'

विभुर्बन्धं प्राप्य व्यतनुत विमुक्तिं व्रजभुवां
स्वतन्त्रोऽसौ धूर्तः स्वयमजनि सूतश्च भजताम् ।
प्रतिज्ञां स्वामौज्झत्स्वपदतटिनीसूनुसमरे
महद्योगात्प्रायो वहति महिमानं तदधिकम् ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

தேசிகன் வகுத்த வழி

[ஸ்ரீ. உப. வித்வான், அத்தி, க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலே, மதுராந்தகம்.]

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுடைய லீலா விபூதியில் ஜனித்த ஒவ்வொரு சேதனனும் ஸுகத்தையே விரும்புவான். புருஷனால் ஸுகம் விரும்பப்படுவதால் ஸுகத்தையும் புருஷார்த்தகோடியில் சேர்த்து நித்யஸுகமான மோக்ஷத்திற்கும் புருஷார்த்தம் என்று வ்யவஹாரமுண்டாயிற்று. தம்தமிச்சைக்கு விஷயமான வஸ்து (விஷயமே) ஸுகமென்று சாஸ்த்ரஜ்ஞர்களின் வ்யவஹாரம். 'இது நமக்கு அனுகூலம்' என்கிற ஜ்ஞானமே ஸுகம் என்பாரும் உளர். அப்படிப்பட்ட ஸுகங்களில் விவேகியானவன் அல்பமாயும், அநித்யமாயும், துக்கம்கலந்ததாயும், ஸ்திரீ, புஷ்பம், சந்தனம், இவைகளால் உண்டாகக்கூடியதுமான ஸுகத்தில் ஆசையைநீக்கி அந்தமிலாப்பேரின்பமான மோக்ஷஸுகத்தையே அடையமுயலுவான். அந்த ஆநந்தம் பரமபதமென்று பெயர்பெற்ற தேசவிசேஷத்தில் பரந்தாமனைக்காண்பதால் உண்டாகிறது. அந்த ஆநந்தம் அழிவற்றது. அங்கு சேர்ந்தபிறகு சேதனனுக்கு புனராவ்ருத்தி (திரும்புதல்) கிடையாது. இப்படிப்பட்ட மோக்ஷத்தின் ஸ்வரூபத்தை ச்ருதி ஸ்ம்ருதிகள் அழகாகக் கூறியிருந்தும் சிலர் இதை அங்கீகரிக்காமல் மோக்ஷஸ்வரூபத்தை போதிக்கிற ச்ருதிகளுக்கு வேறுதாத்பர்யம் கல்பித்து அத்வைதத்தை ஸ்தாபித்தார்கள். பிற்காலத்தில் ஸ்ரீராமானுஜர் அவதரித்து ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தமுகத்தினாலும், நேரில் வாக்யார்த்தம் சொல்லியும் விசிஷ்டாத்வைதமதத்தை ஸ்தாபித்தருளினர். ஆகவே அதுமுதலிதற்கு ராமாநுஜதர்சநம் என்று பெயர் வழங்கிவருகிறது. இந்த விஷயத்தை ஸ்வாமிதேசிகனும் 'நாயோவஜ்ஞம் ப்ரவ்ருத்தம்' என்றச்லோகத்தில் 'த்ராதும் ஸத்ய்ருஷ்ய்ருதீமெந்த்ரு:' என்கிற அம்சத்தினால் விளக்கியருளினர். ஆகவே ஸ்ரீபாஷ்யகாரர் முதற்கொண்டு வாழையடிவாழையாக வளர்ந்து வந்த நம் ஸம்ப்ரதாயத்தில் ஸுமார் 700 வருஷங்களுக்கு முன் யோஜனா பேதத்தினாலே சிறிது பிளவு ஏற்பட 'கலௌ வேங்கடநாயக:' என்கிறபடி கலியுகத்தில் ஸாதுஸம்ரக்ஷணத்தில் பத்ததீக்ஷிதனான திருவேங்கடமுடையான் நம் ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரவர்த்தகனாகையினாலே இந்த பிளவைக் களையும் பொருட்டு தன்னிடத்தில் சிறந்த பக்தரான அனந்தஸூரியின் (காஞ்சியில் தூப்புலில் மஹாஜ்ஞாதாவாக எழுந்தருளியிருந்தவர்) தேவியாரான தோதாரம்பை என்கிற உத்தமியினிடத்தில் தன் திருவாராதனத்திலிருக்கும் வண்டையை (மணியை) தன் உத்ஸவதீர்த்த வாரிதினத்தில் (புரட்டாசித் திருவோணநன்னாளில்) குமாரராக அவதரிப்பிக்கச்செய்து நம் ஸம்ப்ரதாயத்தை வளர்க்கத் தொடங்கினான். இந்த விஷயத்தை ஸ்வாமி தேசிகனும் 'வணாஹரேஸ்ஸஜநிஷ்யதா நா' என்கிற ச்லோகத்தினால் வெளியிட்டருளினர். இப்படி நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவந்த இக்குழந்தைக்கு பெரியோர்கள் ஸ்ரீநிவாஸனின் நியமனத்தினால் அவதரித்தபடியால் 'வேங்கடநாதன்' என்று திருநாமம் சாத்தினார்கள். ஸ்ரீவேங்கடநாதனும் அந்தந்த காலங்களில் சாஸ்த்ரோக்தமாய் சௌளோபநயநாதிஸம்ஸ்காரங்களைப் பெற்று தன்மாதுலரிடத்தில் வேதாந்த வித்யையும் ததங்க வித்யைகளையும் அதிகரித்து இருபது திருநக்ஷத்திரத்திற்குள்ளேயே அநேக சிஷ்யர்களுக்கு ஸ்ரீபா

ஷ்யாதி க்ரந்தங்களை காலக்ஷேபம் ஸாதிக்க ஆரம்பித்தார். அதுமுதல் இவருக்கு 'தேசிகன்' என்று திருநாமம் வழங்கவாரம்பித்தது. இப்படி க்ரந்த காலக்ஷேபத்துடன் காலத்தைப் போக்காமல், தம் காலத்திற்கு பிறகும் இம்மதத்திற்கு க்ஷோபம் வாராதபடி அநேக க்ரந்தங்களையருளிச்செய்தார். இதை 'ஶ்ருவாஜவ ஶ்ருவஶாநவாயிநி ஜஶஷெநஜ்வஷிநா- ஶாவஸநீயவாரா ந விவக்ஷஹெதொ:' என்கிற ச்லோகத்தினால் தாமே காட்டியருளினார். (இங்கு ந விவக்ஷஹெதொ: என்பது குறிகொள்ளத்தகுந்தது.) துஷ்டர்களை தண்டிப்பதும் சிஷ்டர்களைரக்ஷிப்பதுமே பகவானுடைய அவதாரப்ரயோஜனம் என்று பகவான் கீதையில் அருளிச்செய்துமிருக்கிறார் அதைக்காட்டிலும் ஆசார்யர்களுடைய அவதாரத்துக்கு, துஷ்டர்களையும் திருத்திப் பணிகொள்வது, ப்ரயோஜனமாகையால் ஸ்ரீதேசிகனும், வேதாந்தங்களிலும், ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலும் தனித்தனியே சிதறிக்கிடக்கும் அர்த்தங்களை ஒருங்கே திரட்டி ஸ்திரீ, சூத்ரர்கள் உள்பட யாவருக்கும், தெரியும் பொருட்டு அருளிச்செய்திருக்கிறார். ஆகவே நித்ய ஸுகத்தை விரும்புகிறவன் ஸ்ரீதேசிகன் வகுத்த வழிகளை ஸதாசார்யன் பக்கல் அறிய முயலவேண்டும்.

அம்மஹான் காட்டியவழியாதெனில் 'விவெகநிவெ஦. விரக்தி ஹீதயஃ வ்ரஸாஜ ஹெதஶு க்ஷேணாவிஶராஜயஃ। வ்ருக்ஷ்யத்ருதி க்ஷாசெஜஜாயிரோஹணம் வராஷிஸித்ருதா தஃ வவஶணாம் க்ஷஶஃ॥' என்ற ச்லோகத்தில் அவ்வழியைக்காணலாம். பரமபதம் என்பது உயர்ந்த இடத்தில் இருப்பதால் உலகத்தில் உயர்ந்த இடத்தை அடையும் பொருட்டு படிகளை அமைத்து அதன் வழியாக ஏறுவதென்பது இயல்பாதலால் அதை திருவுள்ளத்தில் கொண்டு ஸ்ரீதேசிகனும் நித்யஸுகமான மோக்ஷத்தை (பரமபதத்தை) அடையும் பொருட்டு 9 படிகளை அமைத்து அதை எல்லோரும் அறியும்படி பரமபதஸோபானம் என்று ஒரு ரஹஸ்யத்தை அருளிச்செய்தார். அந்தப்படிகளை மேலே காட்டிய ச்லோகம் விளக்குகிறது.

1. தத்வங்களை நன்றாக அறிதல் 2. மனம் தளர்தல் 3. உலகஸுகத்தில் ஆசையற்றிருக்கை. 4. தன்னுடைய பாபகர்மங்களையும் அதன்பலமான நரகாநுபவத்தையு மறிந்து பயப்படுதல். 5. பகவானுடைய ப்ரஸன்னதைக்குக் காரணமான பக்தி அல்லது ப்ரபத்தியை அநுஷ்டித்தல் 6. இந்தகர்மசரீரத்திலிருந்து ஜீவன் வெளிக்கிளம்புதல் 7. அர்ச்சிராதிமார்க்கத்தை நினைப்பது 8. ப்ரக்ருதிமண்டலத்தையும் அதிக்ரமித்திருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை யடைதல் 9. அங்கு ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனை கண்டு களிப்பது என்கிற அம்சமே மேலே காட்டிய ச்லோகத்தின் பொருள். இவைகளை நன்றாக அறிந்து கொண்டால் நித்யஸுகமான பரமபதத்தை அடைவது திண்ணம். முதல் படியை ஏறித்தான் இரண்டாவது படியை ஏறமுடியுமாதலால் அந்தக்ரமத்தை யனுஸரித்து விவேகாதிகளும் உத்தரோத்தரங்களுக்கு பூர்வபூர்வம் காரணமாகத் தேறுகிறது. ஆகவே, விவேகமானது நிர்வேதத்துக்குக் காரணமாக ஆகிறது. விவேகம் என்பது பகுத்தறிந்து பார்த்து தெரிந்துகொள்ளுதல். விவிச்யதெ க்ஷநெநெதி விவெகஃ, என்கிற விர்ப்பத்தியினால் இவ்வர்த்தம் கிடைக்கிறது. இது ஒரு ஜ்ஞான விசேஷம். இது எல்லோருக்கும் எளிதில் உண்டாகாது. இப்படிப்பட்ட ஜ்ஞானம் உண்டாவதற்கு ஸத்வகுணம் காரணம். அந்த ஸத்வகுணத்தின் விகாஸத்திற்குக் காரணம், ஆஹாரசுத்தி. இதையே ஸ்ரீபாஷ்யத்தில் 'ஶ்ருஹாரஶுஜௌ ஸத்வஶுஜிஃ' என்று ஸாதித்தார். இதற்கு காரணம் விவேகம் என்பதை ஸ்ரீபாஷ்யகாரர் 'தஜ்ஜஜிஃவிவெக' என்று வ்ருத்திகாரருடைய வாக்யமாகக் காண்பிக்கிறார்.

ஆகையால் விவேகம் என்பது ஜ்ஞானவிசேஷமென்றும் ஜ்ஞானம் ஸப்ரகாரமாகையாலே (ஒரு வஸ்துவை விஷயீகரிக்குமாகையாலே) தத்வம், ஹிதம், புருஷார்த்தம், இவைகளைக் கொண்டதென்று ச்ருதியினால் அறிகிறோம். 'ஹொக்தா ஹொ஗்யம் ப்ரெரிதாரம்ச ஶக்வா ஜுஷ்டஸ்ததஸ்தெநாம்ருதத்வமெதி' என்கிற ச்ருதியும் ப்ரமாணமாகிறது. ஹொக்தா என்

பதினல் சித் என்கிற தத்வமும், ஹொமூ எனபதினல் அசித் என்கிற தத்வமும், வெ ஸிதாஸ்ம் என்பதினல் நியந்தாவான ஈச்வர தத்வமும், சொல்லப்படுகிறது. உகுவாஜுஷ: என்பதினல் இவைகளை யறிந்து பகவானிடத்தில் பக்தி அல்லது ப்ரபத்தி அநுஷ்டிக்கவேண்டுமென்கிற ஹிதமும், சுரூதகூஜெதி என்பதால் புருஷார்த்தமும் சொல்லப்பட்டதாகிறது. இந்த ச்ருதியின் அர்த்தமானது ஆசார்யனை அணுகி கேட்கவேண்டியததாலால் இங்கு ஸங்க்ரஹமாக எழுதப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்த தத்வ ஹித புருஷார்த்த விவேகமே ஒவ்வொரு சேதனனுக்கும் ஆவச்யகம் என்று முடிந்தது. இந்த விவேகம் ப்ரமாண ஸாரமான (1)ரஹஸ்யத்ரய விவேகமென்னும் (2)இந்த ரஹஸ்யங்களில் தோன்றின பராவர தத்வ விவேகமென்னும் பலபடியாக விகாஸத்தை அடையும். இந்த விவேகத்தை அறிந்து கொண்டால்தான் முதல் படியை அடைந்தவனுக ஆகிருன். முதல் படியை ஏறித்தான் இரண்டாவது படியை ஏறிச்செல்ல முடியுமாதலால் இதை அறிந்த பிறகு இரண்டாவது படியாகிற நிர்வேதத்தை அடைய முயற்சிக்கவேண்டும். நிர்வேதமாவது, நரகபயத்தினல் பாபத்தைச் செய்யாமல் இருக்கவேண்டுமென்கிற எண்ணம். இதன்ப்ரகாரத்தை ஆஹ்நிகத்தில் கண்டுகொள்ளலாம். பிறகுவெராமூ. வைராக்யம் என்பது உலக ஸுகத்தில் ஆசைபற்றிருக்கை. இதன் ப்ரகாரத்தை ப்ருஹதாரண்யகத்தில் கஹோள ப்ரச்னத்தில் காணலாம். இது நிலைபெற்றதும், தம்பாபங்களின் மிகுதியால் இனி வரப்போகும் நரகாநுபவ துன்பங்களுக்கு அஞ்சுதல் என்கிற படியை யடைவான். ஆகையால் மேலே குறிப்பிட்டுள்ள ஸுகத்தை(மோக்ஷத்தை)அடைவதின் பொருட்டு பகவானிடத்தில் பக்தி அல்லது ப்ரபத்தியை யநுஷ்டிப்பதென்கிறபடியை யடைவான். பிறகு உதாநிக்ருத என்கிற படி. உத்க்ராந்தி என்பது— ஜீவன் இந்த சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல். ஜீவன் இதுக்குக் கீழ்படியாக நூபணம் செய்யப்பட்ட பக்தி, அல்லது ப்ரபத்தி அநுஷ்டிப்பது என்கிற நிலைமையை யடைந்த பின் ‘வ தஜெஹாவஸாநெ ஊம் கூவதூஅ வூாவய ஷயமு’ (இந்த சரீரத்தின் நாசத்தின் பிறகே உன் திருவடிகளை அடைவிப்பாய்) என்று ப்ரார்த்தனபுரஸ்ஸரமாக ப்ரபத்தியை அநுஷ்டித்து இந்த சரீரம் நாசமடையும் வரையில் ‘தேனர்கமலத்திருமகள் நாதன்’ என்கிறபடி ஸ்ரீவைஷ்ணவோத்தமர்கள் வஸிக்கும் ஸ்தலத்தை தனக்கு வாஸஸ்தானமாகச் செய்து கொண்டு பகவானை த்யானித்திருப்பானுகில் அந்த ஜீவனுக்கு ஶரண்யன் ஸங்கல்பமடியாக ஒரு நாள் உத்க்ராந்தி உண்டாகும். உத்க்ராந்தியின் ஸ்வரூபமாவது:—

ஶ்ரோத்ரம் (செவி) ரஸநா (நாக்கு) வக்ஷுஃ (கண்) நாஸா (மூக்கு) கூவக் (உடலிலுள்ள இந்திரியம்) என்கிற ஜ்ஞாநேந்திரியம் ஐந்தும் வாய், கை, கால், பாயு, உபஸ்தம், என்கிற கர்மேந்திரியமைந்தும்மனத்தோடுசேர்த்து அந்த மனதைத்யும் ப்ராணவாயுவில்சேர்த்து அதையும் ஜீவனிடத்தில் சேர்த்து அந்த ஜீவனையும் பூதங்களின் (ஐந்து) அம்சத்தில் சேர்த்து பிறகு அவன் ஶரண்யனிடம் சேர்ப்பிக்கிருன். இந்த விஷயம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் நிர்யாணுதிகாரத்தில் ‘ஊநவி கரணஜாம் வூாணெ ஊநஃ வஷெ வ தம் ஸுபிதி வடியநு ஹுதெஷெம் வரெ வ தஊதமி’ என்கிற ச்லோகத்தினல் காட்டியருளினர். ப்ரபன்னனுக்கு மரணத்தில் நியமமும் இல்லை என்பதும் குறிப்பிடத்தகுந்தது. ஜீவனுடைய சரீரம் பஞ்ச பூதங்களின் அம்சத்தினல் ஆக்கப்பட்டது. அந்தசரீரத்தின் முதுகின் மேல் புரத்தில் த்ரிஸ்தூணம் என்கிற எலும்பு இருக்கிறது. மரணகாலத்தில் ஈச்வரன் அதைக்கடைந்து அங்கிருந்து ஜீவனை வெளியேற்றுகிருன். அந்த ஸமயத்தில் ஜீவனுக்கு அதிக வேதனையுண்டாகும் (இது மரண மடையும் எல்லோருக்கும் உண்டு) அப்பொழுது ஜீவனை பரமாத்மா தன்னேடு அணைத்துக்கொள்ளுவதாக ப்ரமாணம் கூறுகிறது. இப்படி வெளியேறிய ஜீவன்ஸூக்ஷ்மசரீரத்துடன் அர்ச்சிராதிமார்க்கத்தை அடைகிருன். அர்ச்சிராதி

மார்க்கத்தை கீதையில் 'அக்நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் । தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: ॥ சொல்லியபடி (அக்நி முதலியவர்கள் வழியாக) அடைந்து ப்ரக்ருதி மண்டலத்துக்கப்பால் உள்ள விரஜையை மனஸினுல் தாண்டி ஸ்ரீவை குண்டத்தை அடைதல் என்கிற 8-வது படியை அடைகிருன். ஸ்ரீவைகுண்டத்தின் ஸ்வரூபமும் பெருமையும் ஸ்ரீவைகுண்டகத்யத்திலே (ஸ்ரீபாஷ்யகாரர் பணித்தது) அறியவும். ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளிலும் அறியலாம். இப்படி ஸ்ரீவைகுண்டத்தையடைந்ததும் அங்கு 'ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய ச்ரிததுரிதஹரம் தக்ஷிணம் குஞ்சயித்வா' என்கிறபடி அனந்தாழ்வான்மீது ஸ்ரீபூமி முதலிய தேவிகளோடு ஸகல பூஷண பூஷிதனுய் வீற்றிருக்கும் எம்பெருமானைக் கண்டு களிப்பது வராவ்தி என்கிற 9- வதுபடி. இதுவரையில் இவன் (ஜீவன்) பட்டகஷ்டம்தீர அவனைக் கண்டு களித்து கருட விஷ்வக்ஸேநாதி நித்ய ஸூரி கோஷ்டியுள் புகுந்து (கலந்து) ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யத்தைச் செய்துகொண்டு ஆநந்தக்கடலில் மூழ்கி கிடப்பான். இதைத்தான் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பி பெற்ருர்கள். ஆகவே நித்ய ஸுகத்தை விரும்புகிறவன், ஸ்ரீதேசிகன் வகுத்த வழிகளை பின்பற்றி நடப்பானுகில் மோக்ஷத்தையடையலாம்.

இப்படிப்பட்ட பெரிய விஷயத்தை அல்பஜ்ஞர்களாகிய நமக்கு உபகரித்தருளின ஸ்ரீதேசிகன் விஷயத்தில் அம்மஹான் நியமித்தபடி போற்றியுகப்பதும், புந்தியிற்கொள்வதுந்தவிர அவர் விஷயமாக ஜயந்தீ மலர் வெளியிடுவதும் திருமால் உகந்த கைங்கர்யமாகும்.

ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் இந்த மாதத்தில் அவதரித்ததினுல் 'மாஸாநாம் மார்கஶீர்ஷோऽஹம்' என்கிற வசனப்படி மார்கழிமாதம் போலே புரட்டாசி மாதமும் கொண்டாடத்தகுந்தது. ஸ்ரீநிவாஸனின் ரக்ஷணமும் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனின் ரக்ஷணப்ரகாரத்தை கீழே விஜ்ஞாபித்தோம். ஸ்ரீ ஆதிவண்ஶடகோபன் தன் சிஷ்யர்களின் ரக்ஷணத்தின் பொருட்டு அகம்தோரும் க்ராமந்தோரும் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு உலகமெல்லாம் ஸஞ்சாரம் செய்து உலகம் பூரா பரவியிருக்கும் தன் சிஷ்யர்களுக்கு திருவிலச்சினை மந்திரோபதேசம் முதலியது செய்து கொண்டும் தன் காலத்தின் பிறகும் அதே மாதிரி நடக்கும் பொருட்டும் எற்பாடு செய்தார். ஆகையால் இவர் உபகாரம் விலக்ஷணமானதாய் விளங்குகிறது.

सत्वस्थान्निभृतं प्रसादय सतां वृत्तिं व्यवस्थापय
त्रय्यब्रह्मविदागसस्तृणमिव त्रैवर्गिकान् भावय ।
नित्ये शेषिणि निक्षिपन्निजभरं सर्वसहे श्रीसखे
धर्मं धारय चातकस्य कुशलिन् धाराधरैकान्तिनः ॥

ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தின் காக்ஷிகள்

கீழ் அஹோபிலம் த்வஜஸ்தம்பம்

ஜயஸ்தம்பம் [கீழ்]



கீழ் அஹோபிலம் புஷ்கரனி



மேல் அஹோபிலம்
முன்கோபுரம்



கீழ் அஹோபிலம் விமானத்தோற்றம்



மேல் அஹோபிலம்
விமானத்தோற்றம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபிலமடம் அழகியசிங்கரின் அறிக்கை

ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்தில் ஜீர்ணோத்தாரணம்

'अहोबिले श्रीनृसिंहस्य समन्ताद्योजनत्रयम् ।
गयाप्रयागकाशीभ्यस्सत्यं शतगुणाधिकम् ॥'

[ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹனைச் சுற்றிலும் மூன்றுயோஜனை விஸ்தீர்ணமுள்ள க்ஷேத்ரமானது கயா, ப்ரயாகை, காசி இவைகளைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமான மேன்மையுடன் கூடியது. இது ஸத்யம்.] என்று புராண ப்ரஸித்தியுடையதும், நூற்றெட்டு திருப்பதிகளில் ஒன்றும், திருமங்கை மன்னனால் பாடப்பட்டதுமான ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம் மிகப்புராதனமான ஸ்ரீவைஷ்ணவ புண்யக்ஷேத்ரம். அந்த க்ஷேத்ரம் இப்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ள ஆந்திரமாகாணத்தின் தலைநகரான கர்நூல் ஜில்லாவிலுள்ளது. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமி எல்லோராலும் கொண்டாடப்பட்ட தெய்வம். ஸுமார் 700 வருஷங்களுக்கு முந்தி ஸ்ரீ அஹோபிலமடத்தில் முதல் ஸ்வாமியான 'ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்ரமஹாதேசிகன்' என்னும் ஜீயரால் அவருக்கு சிஷ்யர்களாயும் விதேயர்களுமான மன்னர்களைக் கொண்டு பலதிருப்பணிகள் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. அது முதல் அந்த தேவஸ்தானம் ஸ்ரீஅஹோபிலமடத்தின் அழகியசிங்கர்களால் (ஆதீனகர்த்தாக்களால்) பரிபாலிக்கப்பட்டு வருகிறது. நடுவில் கால க்ஷேபத்தாலும், பலவித ராஜாங்க மாறுதல்களாலும் அங்குள்ள கோயில் குளங்கள் ஜீர்ணங்களாக ஆகியிருக்கின்றன.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் அந்த ஸ்தலங்களுக்கு செல்லக்கூட மார்க்க வஸதி இல்லை. மிகவும் மஹிமை வாய்ந்த இந்த க்ஷேத்திரத்தின் ஜீர்ணோத்தாரணம் அவச்யம் செய்யவேண்டியிருக்கிறது. பக்தகோடிகளின் ஏகோபித்த உதவியினால்தான் அப்படிச் செய்து அதன் புராதன மஹிமையை நிலைநாட்டவேண்டும். இயன்றமட்டில் ஸ்ரீமடத்தின் ஜீவேஜியிலிருந்து முக்யமான மதிள், மண்டபம் முதலிய ஜீர்ணோத்தாரணங்கள் செய்யப்பட்டும் ஜலவஸதிக்காக கோயிலுக்குள்ளேயே ஒரு கிணறு எடுக்கப்பட்டுமிருக்கிறது. ஸுமார் 1500 ரூபாய் ஷை விஷயங்களுக்கு இப்போது செலவிடப்பட்டிருக்கிறது.

இதற்குமுன் பார்க்கவதீர்த்தத்திலிருந்து குழாய்வழியாக ஜலம் கொண்டுவருவதற்கு ஸுமார் 20000 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். மற்றும் பலமண்டபங்கள் பாங்கர் மான்ய ஸ்ரீ மங்நீராம் ஸேட்ஜீ அவர்களைக் கொண்டு கட்டப்பட்டுமிருக்கிறது.

இப்பொழுது முக்யமாக கீழ்கண்ட திருப்பணிகள் செய்யவேண்டியிருக்கிறது.

(1) கீழ் அஹோபிலம் புஷ்கரணி படிக்கட்டை தூக்கிக்கட்டி அதைச்சுற்றிலும் விழுந்திருக்கும் மதிலைக்கட்டவேண்டியிருக்கிறது. இதற்கு எஸ்டிமேட் தொகை ஸுமார் ரூ 10000 (பத்தாயிரம்) ஆகிறது.

(2) புஷ்கரணியைச் சுற்றிலுமுள்ள மண்ட

பத்தைபுதிப்பிப்பதற்கும், விழுந்துபோனவைகளைக் கட்டுவதற்கும் எஸ்டிமேட் தொகை ஸுமார் ரூ 9000 (ஒன்பதாயிரம்.)

(3) புஷ்கரணிக்கு எதிரிலுள்ள உடையவர் ஸன்னிதியைப் புதுப்பிக்கவும், அதைச்சுற்றிலும் நந்தவனம் அமைக்கவும் எஸ்டிமேட் தொகை ரூ 8000 (எட்டாயிரம்.)

(4) ஸ்ரீகாரஞ்சநருஸிம்ஹன் ஸன்னிதியையும் அதைச்சேர்ந்த திருவடிக்கோயிலையும்(அநுமார்ஸன்னிதி)புதுப்பிக்க எஸ்டிமேட் தொகை ரூ 2000 (இரண்டாயிரம்.)

(5)ஸ்ரீக்ரோடாநருஸிம்ஹன் ஸன்னிதியைப் பழுதுபார்த்து புதுப்பிக்க எஸ்டிமேட் தொகை ரூ 1800 (ஆயிரத்துஎட்டுநூறு.)

(6) ஸ்ரீமாலோலன் ஸன்னிதியையும் அதைச்சேர்ந்த சொனையையும் பழுதுபார்க்க எஸ்டிமேட் தொகை ரூ 3500(மூவாயிரத்துஐநூறு.)

(7) மேல்அஹோபிலத்தின் மேல்மண்டபங்களின் தளங்களைக்குத்தி ஒழுகாமல் பழுதுபார்க்க எஸ்டிமேட் தொகை ரூ 3000(மூவாயிரம்.)

(8) மதிள்களையும், கோபுரங்களையும், மண்டபங்களையும், ஆழ்வார்கள் ஸன்னிதியையும் பழுதுபார்க்க எஸ்டிமேட் தொகை ரூ 4000 (நாலாயிரம்.)

(9) த்வஜஸ்தம்பம், கதவுகள் முதலானவைகள் பழுதுபார்க்க எஸ்டிமேட் தொகை 2000 (இரண்டாயிரம்.)

(10) ஸ்ரீசத்ரவடன் ஸன்னிதியில் தலைமட்டத்தின்மேல் கர்ப்பக்ருஹம் பூர்த்தி செய்யவேண்டிய எஸ்டிமேட் ரூ 2000 (இரண்டாயிரம்.)

ஆக இந்த பத்து அயிடங்களில் வேலை அவச்யம் செய்யவேண்டியிருப்பதால் இவைகளில் ஒவ்வொன்றிலும் ஏகதேசமாக அங்வயித்து நடத்தக்கூடிய பக்தர்கள் இந்த கைங்கர்யத்தை ஏகதேசத்திலேயே நடத்தி தாங்களும் க்ருதார்த்தர்களாக ஆவதோடு தங்களுடைய புகழை அந்த கைங்கர்யம் செய்த இடத்தில் தங்கள் ப்ரதிபிம்ப மூலமாகவும் சிலாசாஸன மூலமாகவும் நிலைநாட்டிக்கொள்ளலாம்.

முழுவதிலும் அங்வயித்துச் செய்ய சக்தியில்லாதவர்கள் தங்கள் தங்களுக்குள் ஒரு கமிட்டியைச்சேர்த்துக்கொண்டு தங்களுக்கு முடிந்தவரை கைங்கர்யத்திலங்வயிக்கலாம்.

அவ்விதம் தாங்கள் நேரில் நின்று நடத்த முடியாதவர்கள் தங்களாலான பொருளுதவியை கைங்கர்யங்களுள் தங்களுக்கு இஷ்டமான வகையில் உபயோகப்படுத்தும்படி கண்டு ஸ்ரீஸன்னிதிக்கு அனுப்பினால் அதற்குதேவையான பணம் சேர்ந்ததும் மேல்படி கைங்கர்யங்கள் ஸ்ரீ ஸன்னிதியில் நடத்தும்படி ப்ரார்த்திக்கலாம். இதுகள் பக்தகோடிகளாலேயே நடத்தவேண்டியவிஷயங்கள்.

'अहोबिलार्पित द्रव्यमणुमात्रमपि द्विजाः ।
तद्रव्यं मेरुणा तुल्यं वर्धते वटबीजवत् ॥'

[சிறிய ஆலம்விதை மிகப்பெரிய மரமாக வளர்வதுபோல், அஹோபில க்ஷேத்ரத்தில் தானம் செய்யப்பட்ட த்ரவ்யம் அணுவாக விருந்தாலும் மேருபர்வதத்தளவு வ்ருத்தியடைகிறது.] என்று அத்தேசத்தில் செய்யப்படும் தானத்தின் மஹிமை ஸ்தலமாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பொதுவாக யாத்ரிகர்களுக்கு போக்குவரத்து ரஸ்த்தாவின் ஸௌகர்யங்களும் முக்யமாக மேல் அஹோபிலத்திற்குப் போகவேண்டிய ரஸ்தாவின் சீரமைப்பும் நதியின் பாலங்களும் அமைத்து ஸுகமாகச் சென்று ஸேவித்து வரும்படி செய்யவேண்டிய பொருப்பும் புதிதாக ஏற்பட்டிருக்கும் ஆந்த்ரமாகாணத்தின் முதல் கடமையாகும். அதை கவர்மெண்டில் செய்து கொடுத்தால் பிறகு கைங்கர்யங்களும் ஸுலபமாக நடைபெறக்கூடுமென்று ஸ்ரீஅஹோபிலமடம் அழகிய சிங்கரின் நியமனத்தின் பேரில் ஸ்ரீகார்யம் ஸ்ரீ. உப. தையார், ஜோஸ்யம், மாடபூஷி, வித்வான்,ரங்காசாரியஸ்வாமி அறிவிக்கிறார்.

ப்ரஹ்லாதவரதன்



பத்துத்திருக்கைகளையுடைய மேலஹோபில ஸ்ரீ ந்ருஸிம்ஹன்



அத்யத்புத சில்பவேலைப்பாடுகளுடன்கூடிய 100 ஸ்தம்பங்களுடன் அமைந்துள்ள
கீழ்அஹோபிலம் ரங்கமண்டபம்



ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸநம்
ப்ரஹ்லாதவரதன்



மேல்அஹோபிலம் த்வஜஸ்தம்பம்



சத்ரவடன்

PHOTOS BY

V. NARASIMHAN, 1. Armenian st, Madras.

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஆசார்யகுணனுபவம்

[ஸ்ரீ. உப. கே. துரைஸ்வாமிஜயங்கார் ஸ்வாமி, கோடியாலம்.]

ஶேவ்யாட்யம் ஶாஸ்த்ராம் வந்தே ஶேஷாத்ரிஹரயே நம: |
ஶ்ரீவத்ஸா ஹ்ருதஸாரம் வக்தா வந்தநாத்ருஷ்ய யஸ்ய ||

ஶ்ரீயஶோஹாஸ நரஸிம்ஹாஸாய நாராயணதீர்த்தே ஶாஸ்திகவிவிஷ்வாஸ்யாந்தி ஶாஸ்த்ராம் ஸஜ்ஜாநம் |
நிரவதிகபரமாநந்த வேதவேத்யாசார்ய ஶேஷவத்ஸாவரஶோக்த: ஶ்ரீநிதிம் வேங்கடேஶம் ||

பகவான் கவிதார்க்கிகஸிம்ஹஸ்ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும், ஸ்ரீமத்வேங்கடநாத வேதாந்தாசார்யரும், நிரவதிகமஹிம மஹநீயரும், ஸர்வகுணநிதியும், பரமகாருணிகருமான ஸ்ரீ தூப்புல் மஹாதேசிகனின் அவதார, விபவ, க்ரந்த வைலக்ஷண்யங்களைப்பற்றியோ, அவர் செய்த மஹோபகாரங்களைப்பற்றியோ சொல்லயத்தனிப்பது 'மாருதிஜா திரிதி ஸாகரம் தரிதுமநா: பாலப்லவங்கமா:' என்பது போலாகும். ஆயினும் இப்பரமாசார்யரின் திருநக்ஷத்ரஉத்ஸவத்தில் ஸஹ்ருதயர்களான ஸ்ரீவைஷ்ணவதாஸ்யாம்ருத ரஸிகர்களிடம் 'தொண்டர்க் கமுதுண்ண' சிறிய இச்சொன்மாலையை ஸமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். ஸ்ரீ தேசிகனைப்பற்றி ஏதாவது சொல்லும்போது அம்மறைமுடியண்ணலின் ஸ்வரூப நிரூபக தர்மமாயும் நிரூபித ஸ்வரூபவிசேஷணமாயுமிருக்கும் ஆசார்யதத்வ விஷயங்களான சிலவற்றை ஞாபகப்படுத்திக் கொள்வது உசிதமல்லவா.

ஸர்வலோக ஶரண்யனின் லீலாவிபூதியில் வர்த்தித்துவரும் ஒவ்வொரு சேதநனும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே பராவர தத்வ ஜ்ஞாநம் பெற்று ஶ்ரிய:பதியின் திருவடிகளை உபாயோபேயங்களாகப்பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும். அதற்காக ஸாத்விகர்களான பாகவதர்களை நாடி அவர்களுடன் பரஸ்பரஹிதைஷியாய் நெருங்கிப்பழகி அவர்களின் உதவியால் ஒரு ஆசார்யனை யடைந்தேயாகவேண்டும். இப்பேற்றை பகவான் தன் நிர்ஹேதுக க்ருபையால் தான் அளித்து, ஏதோ ஒரு ஜந்மாந்தர ஸுக்ருதத்தைமுன்னிட்டு ஸதாசார்ய ஸம்பந்தத்தையேற்படுத்தி ஸம்ஸாரத்திலிருந்து நம்மை ஆச்சர்யமாகக்காப்பாற்றுகிறன். 'சிறுபயனில்படியாத தகவோரான' ஸதாசார்யர்கள்தான் 'கடலைக்கடைந்தமுதமளித்த திருமாலடியைக்காட்டும்' வேதங்களிலிருக்கும் ஸாரதமமான பொருளைத்திரட்டி அடியார்களுக்கு உபதேசரூபமாயும் ஸ்ரீஸூக்திகள் ரூபமாயும் கொடுக்கிறார்கள். மேலும் இம்மஹாபுருஷர்கள் 'ஆத்மஹிதகரமான ஆராத்யஸ்வரூபம் இன்னதென்றும், ததாராதனமின்னதென்றும், அதன் பரமபலம் இன்னதென்றும் உள்ளபடி யறியாத சேதநனுக்கு பரமபந்துவாய், பரமகாருணிகனுய், பரமோதாரனுய், போகமோக்ஷஸகல பலப்ரதனுய், ஸர்வஶரீரியாய், ஸர்வகர்மஸமாராத்யனுய், ஸர்வஶேஷியாய், ஸர்வலோகநியந்தாவாய், சுபாச்ரயதிவ்யமங்களவிக்ரஹோபேதனுய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனுய், நிகிலதோஷாஹிதனுய், பரதத்வமான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வலோக ஸமாச்ரயணீயனென்று அவனையாச்ரயித்துக்காட்டியும், அவன் திருவடிகளை சரணமென்று ஸர்வதா அவலம்பித்துக்காட்டியும், அவன் குணநுபவமும், இம்மையிலும் மறுமையிலும் அவனுக்குகந்த கைங்கர்யம் செய்வதுமே பரமபுருஷார்த்தமென்று போதித்து ஶ்ரிய:பதியினிடத்தில் மீளாத பேரடிமைக்கு அன்பு பெறச் செய்து 'ஜயந்தி புவி ஸந்த:' என்று ஜயசீலர்களாக விளங்குகிறார்கள்.

இந்த ஆசார்யத்வம், ப்ரதமகுருவும் பீதகவாடைப்பிரானுமான ஸ்ரிய:பதியினிடத்திலிருந்து காலதத்வமுள்ளவரையிலும் அவன் நித்யேச்சையால் கிடைக்கும்க்ருபாகார்யம். 'தேசிகாநாம் ஹ்ருதயேஷு ஸ்புட: த்வம் திஷ்டஸி' என்று ஆசார்யர்களுடைய ஹ்ருதயங்களில் ப்ரகாசமாய் எழுந்தருளியிருக்கிறான் ஸ்ரீகீதாசார்யனான பரமாத்மா. அவனே 'குரூணாம் ஜிஹ்வா ஸிம்ஹாஸனே லப்தப்ரதிஷ்டித:' என்று ஸ்ரீசேஷஸிம்ஹாஸனத்தைவிட ஆசார்யர்களுடைய வாக்காகிற ஸிம்ஹாஸனத்தில் அதிக ப்ரியமுடன் வீற்றிருந்து வாஸ்தவார்த்தங்களைக் கொடுக்கிறான். ஒருவன் ப்ரஹ்மஜ்ஞானத்தை யடைய ஆசார்யனிடமேபோகவேண்டுமென்று ச்ருதியின் விதி. ஸதாசார்யர்களே ஶாஸ்த்ரங்களை நன்றாய் ஆராய்ந்து ரஹஸ்யார்த்தங்களையுபதேசித்து பகவான் திருவடியில் மாறாத பக்தியையுண்டாக்கவல்லவர்கள். 'மாசில் மனந்தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக்கொவ்வா' என்றபடி ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளே எம்பெருமானின் கைவளை அல்லது சங்கம்போல் ப்ரகாசிக்கின்றன. ஆச்ரிதரக்ஷணத்தில் தண்டதரனான பகவானைவிட ஏற்றம் பெற்ற ஆசார்யர்களின் பெருமைக்காக பகவானின் க்ருபை நமக்கு நித்யஸூரிகளின் பதத்தையளிக்கும். ஸ்ரீபிராட்டி ஜீவராசிகள்விஷயத்தில் மிகுந்த கருணையும் வாத்ஸல்யமும் உடையவளாக இருப்பதோடு ஆசார்யஸஹாயத்தை முன்னிட்டுத்தான் பகவானிடத்தில் புருஷகாரம் செய்கிறாள். ஸ்ரீஆழ்வார் முதலான நித்யஸூரிகள் பரமபதத்தில் அவர்களுடைய தயைக்குப் பாத்ரங்களில்லாத லோகோஜ்ஜீவனத்திற்குக் காரணமாய் பூமியில் ஆசார்யர்களாய் அவதரிக்கிறார்கள். அவர்கள் பகவானுடைய விபவார்ச்சாவதாரங்களுடன் ஸர்வதா வந்தவதரித்து ஸர்வபூதஸுஹ்ருத்துக்களாய் தத்காலம் எழுந்தருளியிருக்கும் நம் ஸாக்ஷாத் ஆசார்யர்களைப் போல விபவரூபிகளாகவும், எம்பெருமானார், ஸ்ரீதேசிகன் இவர்களைப்போல் கோயில்கொண்டர்ச்சாரூபிகளாகவும் இந்த கர்மபூமியில் அடியார்களை வாழ்விப்பதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டும் ஸௌலப்யத்திற்கும் க்ருபைக்கும் செய்யும் லோகோபகாரத்திற்கும் மாயனும் கைம்மாறு காணகில்லான்.

'பகவத்வந்தநம் ஸ்வாத்யம் குருவந்தநபூர்வகம்' என்றபடி ஆசார்யனுடையஸேவையைமுன்னிட்டுக்கொண்டு பகவானை ஸேவிப்பதுதான் போக்யதமமானது. எல்லாகர்மங்களிலுமாசார்யன் நினைவில்லாவிடில் பகவான் எந்த வந்தநத்தையும் அங்கீகரிக்கமாட்டான். ஆசார்யஸம்பந்தமுள்ளவர்தான் ஸத்கர்மங்களை அப்யஸித்துக்கொண்டு பகவானிடத்தில் விசேஷப்ரீதியடைந்து அந்த பரமபக்திபரீவாஹமாக ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்து பரிபூர்ணப்ரஹ்மாநுபவத்தை யடைகிறார்கள். ஆசார்யர்களுடைய ஸ்தோத்ரங்களும் சரித்ரங்களும் பகவத்ஸ்தோத்ரசரித்ரங்களைப்போல் ப்ராபாவமுள்ளவை. ஸதாசார்யர்கள்விஷயமாய் ப்ரேமபாரவச்யத்தால் ஏற்படுகிற ப்ரபந்தங்கள் ஒரு அநுக்ரஹவிசேஷத்தை பூர்வபாவியாக உடைத்தாயிருப்பவை. அவைகள் எவ்விதத்திலும் குற்றமற்றவை. 'ஆசார்யதேவோ பவ' 'தேவமிவாசார்யமுபாஸீத' என்று பகவானைப் போலவே ஆசார்யர்களை நாம் உபாஸிக்கவேண்டும். 'குணஜ்ஞா:' என்று பெயருடைய அவர்களின் அருமை பெருமைகளைப் பரிசோதித்துச்சொல்லமுடியாது. ஸதாசார்யர்களுடைய பரிபூர்ணகடாக்ஷத்தைப்பெற்று அவர்களுக்கு பரிபூர்ணசேஷவ்ருத்தியைப் பண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு 'கடுவினையாறு' என்றபயங்கரமான கர்ப்பவாஸமில்லை. அவர்களை உள்ளபடியறிந்து அவர்களையே பரமப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் பற்றுமவர்கள் மஹாபாக்யசாலிகள். 'தேவு மற்றறியேன்' என்று ஸ்ரீமதுரகவியாழ்வார் காட்டிக்கொடுத்தபடி ஸதாசார்யர்கள் விஷயத்தில் அநந்யபாவத்தையடைந்து அவர்களின் குணாநுபவத்தில் ஆழ்ந்திருக்கும் மஹான்கள் தேடக்கூடிய புருஷார்த்தம் வேறொன்றுமில்லை.

வேங்கடேசாவதாரரான நம் குருமாமணியைத் தொழுதுகந்து தோத்திரங்கள் பாடிப்

பேரின்பமடைவோமாக. இவ்வாசார்யரத்நத்தின் சில குணம்சங்களைமட்டும் பின்வருமாறு அநுபவிப்போம்.

இப்பிரானின் அவதார ரஹஸ்யத்திலொரு படியாக,

யதிராஜனருட்கலமே நலமே
கதியே கவிதார்க்கிககேஸரியே,
வானவர் வாழ்ச்சி தருங்காவலனே
ஞானவைராக்கிய செழுமணியானே.

என்று அநுஸந்திக்கலாம். ஸத்ஸம்ப்ரதாய வ்ருத்தியை யபேக்ஷித்த பகவானுடைய பூர்ணகடாக்ஷத்தைப்பெற்ற இக்கலாநிதி ஸ்ரீநடாதூரம்மாள், கிடாம்பி அப்புள்ளார் இவர்களுடைய விசேஷ கடாக்ஷத்திற்கும் பாத்ரமாயிருந்தார். இக்காளமேகதேசிகனை:—

தத்துவமளித்த காரிமாறனே,
புத்துயிரளித்தநாதநாதனே,
புருடனைப்போற்றியயாமுனமுநியோ,
சுருதி புகட்டிய யதிவாரிதியோ

வென்று குணாநுபவம் செய்யலாம். விபவத்தில் ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யாதிகாலக்ஷேபங்களிலன்வயித்த மஹான்கள் மிக்க ஆச்சர்யத்துடனிவர் ஸ்ரீராமாநுஜனின் ஸாக்ஷாதவதாரமோ என்று ஸந்தேஹித்தார்களாம். ஸ்ரீதேசிகன் நமக்கெல்லாம் ஸாக்ஷாத்தாக ஆசார்யராகவிருந்து ஶாரீரகமென்னும் வேதாந்த ஶாஸ்த்ரத்தை நேருக்கு நேராக போதிக்காவிடினும், ஸ்வாமியின்மதுமத்தமமானஜிஹ்வையிலிருந்து ஜ்ஞாநப்பால் ராசிகளாக அவதரித்த ஸ்ரீஸூக்திகள் நமக்கு ஸ்வாமிஸ்தானத்தில் ஆசார்யத்வம் செய்து நம் ஸந்தேஹங்களைப் போக்கி, வானேறப்போமளவும் வாழ்வை யளிக்கின்றனவாதலின் ஸ்வாமி எல்லோருக்கும் எக்காலத்திலும் ஸாக்ஷாத்தாகவே வேதாந்தாசார்யராவரென்று பணிப்பது மிகையாகாது. இதற்கு நிதர்சனம்,

புத்தகமொருகை, முத்திரை யொருகை,
வித்தகனே யருள் பொலியும் வதனு,
சத்துவமேனிய உத்தமனேயா,
பத்தர்வினை தவிர்ப்பது மக்கழலோய்.

என்று அர்ச்சாரூபத்தில் இப்பொழுது அவ்விதமாக எழுந்தருளியிருப்பதே. இவர்சொல்லாலறிந்தே இவரை சோராமற் கண்ட பூர்வர்கள் ,பகவந்தமிவாநந்தகல்யாணகுணவாரிதிம் வேங்கடேசம் குரும் நௌமி' என்றருளிச்செய்தார்கள்.

இவ்வேதாந்தகுரு மறைகளுக்கும் மறைநிலைநின்றார்க்குமளித்தபேருதவியை,

செந்தமிழ் வடமொழி மறைகள் யாவும்,
உன்திறத்தால் நிறம் பெற்றது மிகையோ,
விதவிதமாயவை மெய்யொலி பரப்பி,
உதவிய தூப்புல் குருமாமணியே.

என்றவாறு பரவலாம். இத்தமிழ்மறையோனியற்றிய இசைத்தமிழ் ப்ரபந்தங்களைப்பற்றி சுருங்கச்சொல்வது,

உலகளந்த குறளான மாயனின்
அலங்கலான நாலாயிரமறையை,
மன்னிய நானூற்றைந்தாய் நல்கிய
கன்னிச் சிரவணத்தூப்புல் ஐயனே.

என்று மங்களாஶாஸநம் செய்வதே. கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனுன இப்பிரானுடைய பகவானின் அர்ச்சாவதாரத்தில் ஈடுபாட்டையும், பாகவதவிஷயத்தில் ஊற்றத்தையும், பிராட்டிதசையை யடைந்து அநுபவிக்கும் விஷயத்தில் இவர் பரமபக்தியையும் எவ்வாறு வர்ணிப்பது. குணமே வடிவாய்வந்த இவ்வருள்தருமாரணதேசிகன் குமதிகளை வென்றவிதமோ,

யதிவரனின் தரிசனமேயோங்கிட
வாதிகளை வென்ற நீதிமொழிகளின்,
வண்மை திண்மை வருணிக்கலாகுமோ
அண்ணலே! மெய்ய நின்வியப்பே.

அவ்வியப்பின் ஆழ்மையை அநுபவிக்கவல்லார் யார். கம்ஸனை நிரஸித்து ஸாதுஸம்ரக்ஷணம் செய்த திருப்பாவைச் சிங்கமே ஹிரண்யனை நிராகரித்து ஜ்ஞாநவ்ருத்தனுன பாலபக்தனுக்குக் கிங்கரத்வாதிராஜ்யத்தையளித்த திருநரஸிம்ஹம். அந்த நரஸிம்ஹமே திருவேங்கடவனுன சேஷகிரிச்சிங்கம். இச்சிங்

கமே தன் நாதமான ஆராய்ச்சிமணியுடன் 'வேங்கடநாத' னென்று தூப்புலில்தோன்றிய கவிதார்க்கிகஸிம்ஹம். 'கர்மணே ஸ ஏஷ கவிதார்க்கிகஸிம்ஹநாத:' என்றிவர்தாமே யருளியதுபோல் இவர்நாதம் யானைக்கூட்டங்களாகிற ப்ரதிவாதிகளை யடக்கி யதிராஜருடைய திருவடிவாரத்திலேயே கட்டுவித்ததாம்.

வேதவேதாங்கதத்வநிர்ணயசதுரரான நம் ஸ்வாமி காட்டிக்கொடுத்த ஶரணாகதியின் பெருமையைப் பற்றி எவ்வண்ணமுரைப்பது.

பனிக்கடலிலே துயிலும் நாதன்
தனிக்கடலெனத் தாங்கிய உலகம்
பவக்கடலிலே தவியாவண்ணம்
தவநெறி காட்டிய தகைமையோனே.

சுருதியினிறுதியினிதயமும், கலியுகத்தில் ஸர்வோபஜீவ்யமுமான ஶரணாகதி உபாயத்தைக் காட்டிக்கொடுத்து அதை ப்ரதிஷ்டாபனம் செய்துவைத்த ப்ரபதநகலாஜந்மஜலதி இவரே. ப்ரபத்திஶாஸ்த்ரத்தின் படிகளை இவர் உத்கோஷம் செய்திருக்கும் சீர்மையைப் பராமர்சித்தால் இவ்வவதாரத்தின் முக்யப்ரயோஜநம் ந்யாஸவித்யா ப்ரதிஷ்டாபனமென்றே தோன்றும். திருவஹிந்தையில் வராஹாவதாரம் செய்த ஸ்ரீதெய்வநாயகனைப் பாடிய திருமங்கைமன்னனைப் பின்பற்றுமிவர் ஶரணாகதிக்கு முதலவதாரமான ஜ்ஞாநப்பிரானையே போற்றுகிறார். பவக்கடலில் மூழ்கியிருக்கும் உலகத்திற்கு பகவான் 'காருண்யாத் ஶாஸ்த்ரபாணினா' என்று ஶாஸ்த்ரங்களைக்கொடுத்துதவியும் அனேக அவதாரங்கள் செய்தும் போதாமல் கடலில் அரக்கன் ஒளித்துவைத்திருந்த தான் படைத்த உலகத்தை மறுபடியும் பவக்கடலிலேயே கொண்டுவந்துவிட்டார். நம் வேங்கடநாதனே தவநெறிகாட்டி யுலகத்தை பவக்கடலிலே தவியாவண்ணம் காப்பாற்றிவிட்டார். இத்தகைமை எத்தன்மையதோ.

ஸ்ரீவைஷ்ணவ உலகில் நம் ஸ்வாமியின் திவ்ய சரித்ரத்தைப் பற்றி யறியாதாரில்லை. ஸர்வஜ்ஞரான இம்மஹாசார்யன் விஷயத்தில் அடியார்கள் செய்யும் கிஞ்சித்காரம் எது?

அமலனுமக்கு அளித்த பெயரொடும்
கமலையுகந்தளித்த விருதொடும்
நல்லாருலகம் நற்பதமெய்திட
பல்லாண்டிருமென்றிசை பாடுவமே.

என்று பல்லாண்டு பாடி, அவரையும், அவர் தொண்டர்களையும் வணங்கி வழிபட்டுத் துதிப்பதே நமது வாழ்வின் பயன்.

(325-வது பக்கத்தொடர்ச்சி)

இருக்கக்கூடும். ஆனால் துர்க்குணலேசமுமில்லாத அக்குணங்கள் மட்டும்தானிங்கு இருக்கின்றன என்பதையும்ப்ரகாசப்படுத்துகிறது 'நிரவத்யாநாம்' என்னும் பதம். இக்கல்யாணகுணங்களும் சில மஹான்களால் அநேகவாரம் பகுப்ரகாரமாக நிரூபிக்கப்பட்டவைகளே. மறுபடியும் கூறினால் புனருக்தமேயாம். அஸ்மதாதிகளுக்குத் தெரியாத இம்மஹாதேசிகன் குணங்கள் எவ்வளவு உண்டோ அவை யாவும் 'குணஸம்பதாம்' என்கிற பதத்தினால் விவக்ஷிக்கக் குறைவில்லை. ஶ்ரீஹ ரக்ஷகவாசகஶரணஶப்தத்தை இங்கு உபாயபரமாக்கி உபாயத்வேன இம்மஹானை அத்யவஸிக்கிறேன் என்றும் அர்த்தங்கொள்ளலாம். 'ப்ராவிஷ்ட: க்ஷுத்பிபாஸாப்யாம் ப்ராணமீக்ஷஸ்வ ப்ராணக்ருஜ: | ஆபாயாத்வத்யா மோக்ஷஸ்தஸ்மாதாபாத்யாது மே வச:' என்கிறதனால் எல்லோரும் ஆசார்யஸம்பந்தத்தால்தான், மோக்ஷத்தையடையலாமென்று ஏற்படுகிறபடியால் நமக்குப்பரமாசார்யனான இம்மஹாதேசிகன் விஷயமாக அவதரித்த இத்தனியனைமாத்திரம் கீழ்க்கூறிய அர்த்தத்துடன் அநுஸந்தித்தால் இப்பிறவிக்கடலைத்தாண்டி பரிபூர்ண ப்ரஹ்மாநந்தத்தை யடைவோமென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

தனியனின் பெருமை

[ஸ்ரீ. உப. வித்வான், முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைஸ்ப்ரின்ஸ்பால்,
ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஆசார்யனை அல்லது அவர் க்ரந்தங்களைப் புகழ்ந்து கூறுபவையாயும் க்ரந்தங்களுக்கு வெளியில் நிற்பவைகளுமான ச்லோகங்கள் (பாசுரங்கள்) தனியன்கள் எனப்படும். அம்மாதிரியான தனியன்கள் அநேக ஆசார்யர்களுக்கு ஒவ்வொருப்ரகாரமாக அவதரித்திருக்கின்றன. அம்மாதிரி ஆசார்யரத்நமான நமது ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கும்ஒரு தனியன் அவதரித்திருக்கிறது இம்மஹாதேசிகன் விஷயமாக எழு பதங்களுடன் கூடியும் அநுஷ்டுப்ரூபமாயும் அவதரித்திருக்கிற தனியனை ப்ராஜ்ஞர்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் 'மா நிஷாத! ப்ரதிஷ்டாம் த்வமகம: ஶாஶ்வதீஸ்ஸமா: । யத் க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம்' என்று வால்மீகிபகவான் தன் திருவாக்கில் அநுஷ்டுப்ரூபமாக அவதரித்த ச்லோகத்தை வைத்துக்கொண்டு சந்த்ர ஸூர்யர்களிருக்கும் வரையில் புகழுடன்கூடிய ஆதிகாவ்யம் என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீமத் ராமாயணம் என்கிற க்ரந்தத்தை எப்படி யருளிச்செய்தாரோ அம்மாதிரி ஒரு பெரியக்ரந்தத்தைச் செய்யவும் கூடுமென்று தோன்றுகிறது.

'ப்ரபத்யே நிரவத்யாநாம்
நிஷத்யாம் குணஸம்பதாம் ।
ஶரணம் பவபீதாநாம்
ஶடகோபயதீஶ்வரம் ॥'

என்கிற ச்லோகம்தான் அம்மஹானின் தனியன். இத்தனியனை அந்த ஸ்வாமியினுடைய ஸம்ப்ரதாயஸ்தரான ஸ்ரீவைஷ்ணவர்கள் இது காரும் ஸேவித்துக்கொண்டுவருகிறார்கள். அதற்குக் காரணம் பார்ப்பவர்களுடைய ப்ரவ்ருத்திக்குக்காரணபூதங்களான விஷயம், ப்ரயோஜநம், ஸம்பந்தம், அதிகாரீ என்கிற இந்நான்கு மித்தனியனில் பூர்ணமாயிருப்பதே. அதாவது:— இம்மஹாதேசிகன்தான் விஷயபூதர். இம்மஹானை ஆச்ரயிப்பதின் மூலம் வருகிறபகவத்கைங்கர்யம் ப்ரயோஜநம்; ஆசார்யசிஷ்யபாவம் ஸம்பந்தம்; ஜநந மரணரூப ஸம்ஸாரத்தில் பயந்தவர்கள் அதிகாரிகள்.

ஒருவித தோஷமுமில்லாத குணங்களாகிற ஐச்வர்யங்களுக்கு (பெரியகடைவீதியாயும்) ஜநநமரணரூபமான இஸ்ஸம்ஸாரத்தில் பயந்தவர்களுக்கு ரக்ஷகனுமான ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனை மஹாவிச்வாஸத்துடன் த்யானிக்கிறேன் என்பது இதன் கருத்து. இக்கருத்துக்கள் இம்மஹான் விஷயத்தில் மிகையாகாது. 'சடகோபமுநீச்வரத்வம்' இம்மஹானுக்கு அஸாதாரணம் என்பதை இங்கு கூற வேண்டியதில்லை. கூறினால் அது பிஷ்டபேஷணமாகும்.

எந்த கடைத்தெருவிலும் "ஸர்வாங்ஸம்பூர்ணதாயம்" என்கிறபடியே தோஷமில்லாத சுத்தமான வஸ்துக்களிருப்பது மிகவுமரிதே. ஆனால் இந்த மஹானாகிற கடைவீதியில் அம்மாதிரியான ஒரு வஸ்துவைப் பார்க்க முடியாது என்பதைத்தெரியப்படுத்துகிறது "நிரவத்யாநாம்" என்னும் பதம். இம்மஹாதேசிகனுகிய கடைவீதியில் 'ஸத்த்வம் ஸத்யம் ஆர்ஜவம்' இத்யாதிகளால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஆசார்ய குணங்களாகிற ஸம்பத்துகள் தானிருக்கின்றன. இக் குணங்கள் இன்னும் சிலரிடத்தில்

(தொடர்ச்சி 324-வது பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

செய்திகள்

கல்யாணப்ரவர்த்தினீ ஸபா
மதுராந்தகம்.

இச்சபையானது (21-9-53) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இக்கலாசாலை அத்யக்ஷர் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (M. A. L. T.) தலைமையில் முதலாவதாகக்கூடிற்று. அவ்வமயம் வ்யாகரண சிரோமணி இறுதி வகுப்பிலிருக்கும் T. பார்த்தஸாரதி என்பவன் **'पाणिनीयं महाशास्त्रं पदसाधुत्व लक्षणम्। सर्वोपकारकं कृत्स्नं ग्राह्यं त्याज्यं न किञ्चन ॥'** என்னும் விஷயத்தைப் பற்றி ஸம்ஸ்க்ருத வ்யாஸம் ஒன்றை எழுதி வாசித்தான். அதன்பிறகு அத்யக்ஷஸ்வாமி அதே விஷயத்தைப் பற்றி விரிவாக எளிய நடையில் வித்யார்த்திகளுக்கு உபதேசித்தார்.

பின்னர் இச்சபையானது (23-9-53) புதன்கிழமையன்று மாலை 4 மணிக்கு கலாசாலை உபாத்யக்ஷரும், ந்யாயாத்யாபகருமாகிய ஸ்ரீ. உப. M. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. அதுஸமயம் வ்யாகரண சிரோமணி 3 ம் வகுப்பிலிருக்கும் R. கண்ணன் என்னும் வித்யார்த்தியால் 'विद्या' என்னும் விஷயமானது எழுதி வாசிக்கப்பட்டது. பிறகு அத்யக்ஷ ஸ்வாமியும் அதே விஷயத்தை மிகவும் அழகான நடையில் வித்யார்த்திகளுக்கு உபதேசம் செய்தார். பிறகு கார்யதர்சியினால் தன்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு ஸபை இனிது கலைந்தது.

D. க்ருஷ்ணமாசாரி,
R. கண்ணன்,
கார்யதர்சிகள்.

ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசிக ஸபா
ஸ்ரீபெரும்பூதூர்.

மேற்படி ஸபையின் ஆதரவில் ஸ்ரீபெரும்பூதூர் வடபுஷ்கரணிக் கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு சாற்றுமறையன்று காலை திருமஞ்சனமும், மங்களாசாஸனமும் ராத்திரி சாற்றுமுறையும், கோஷ்டிவிநியோகமும் விசேஷமாக நடைபெற்றது. பத்துநாட்களாக உபயவேத பாராயணங்களும், ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தபாராயணங்களும் நடந்தன.

ப்ரதிதினமும் மேற்படி ஸபையின் ஆதரவில் லோக க்ஷேமத்துக்காக ஸ்வாமி தேசிகன் ஸந்நிதியில் ஸஹஸ்ரநாம, ஸ்தோத்ராதி பாராயணங்கள் நடைபெற்று வருகின்றன.

R. சடகோபாசாரியர்.
3-10-53

ஸ்ரீரங்கம்

பெரிய பிராட்டியார் ஸன்னிதிக்குமுன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுக்கு வெகு விமர்சையாய் வேதபாராயண அத்யாபக கோஷ்டியுடன் உத்ஸவம் நடைபெற்றது. ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி 'ஆசார்ய மஹிமை' என்கிறவிஷயம் 2நாள் உபந்யாஸம் செய்தருளினர். ஸ்ரீ.உப. மோகனூர், கோபாலாசார்ய ஸ்வாமியால் அபீதிஸ்தவத்தின் மஹிமை உபந்யஸிக்கப்பட்டது. ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது.

N. ராமஸ்வாமி.
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

'ஸ்ரீ நரசிங்கன் தகவாலே முடிசூடிய மாமுனிவன்'

[ஸ்ரீ. உப. ஈ. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, M. A. L. T. ப்ரின்ஸ்பால்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

அப்பொழுதுதான் பிற்பகல் ஆரம்பித்தது. ஸூர்யன் தன்முழுத்திறமையைக் காண்பிக்கும் வேளை. ஜனங்கள் வெய்யிலுக்கு அஞ்சி நிழலில் தங்கும் ஸமயம். ஆனால் உத்ஸாஹாதிசயத்தினாலும் 'நம் ஆசார்யனுடன் அநுயாத்ரையாகச் செல்கிறோம்' என்ற ஆநந்தமேலீட்டாலும் திரள் திரளாக சிஷ்யர்கள் வெய்யிலைப்பாராமல் கீழ் அஹோபிலக்கோயிலிலிருந்து புறப்பட்டனர். திடகாத்ரமுள்ள புருஷர்கள் மாத்திரமல்ல. வயது முதிர்ந்தவர்களும், ஸ்த்ரீகளும் தங்கள் சிறிய குழந்தைகளுடன் ஆநந்தமாக ஸம்பாஷித்துக்கொண்டு புறப்பட்டார்கள். சிலர் தங்கள் வஸ்த்துக்களை மூட்டை கட்டி தோளில் போட்டுக்கொண்டும், சிலர் தலையில் சுமந்து கொண்டும் புறப்பட்டனர். சிறு மூட்டைகளைக் கூட தூக்கியறியாதவர்களும், தூக்கிவரலஜ்ஜைப் படுபவர்களும் கூட தங்கள் மூட்டைமுடிச்சுக்களைத்தாங்களே சுமந்து கொண்டு புறப்பட்டார்கள் என்றால் அவர்களுடைய உத்ஸாஹத்தைப்பற்றிகேட்க வேண்டுமா என்ன?

நாம் எதிர்ப் பார்ப்பதற்கு மாறாக ஸந்தோஷம் உண்டாவது இயற்கை யல்லவா. அதேபோல் ஸூர்ய வெப்பத்தை எதிர்பார்த்துங் கூட புறப்பட்ட அடியார்களுக்கு ஓர் வியப்பே ஏற்பட்டது. வெப்பத்திற்குப் பதிலாக எங்கும் நிழல் தென்பட்டது.

'வேய்ங்கழை போய்-தேய்த்ததீயால் விண் சிவக்கும் சிங்கவேழ் குன்றமே' என்று ஆழ்வார் அநுஸந்திக்கிறார். எப்படியானாலென்ன. விண் சிவந்துதான் இருந்தது. தீயினாலன்று மேகத்தினால். மேகத்தைக் கண்ட மயில்கள் நர்த்தனம் செய்யுமாப்போலே நம் அடியார்க் குழாங்களும் களிப்பெய்தினர்.

'ஒன்பதுருநரசிங்கனுகந்துறையுந்திருப்பதிகளன்புடனே பணிசெய்யு மற்புதனுமாசிரியன்' பின் புறப்பட்டோமென்ற களிப்பேதான்.

யானை புறப்பட்டது. சங்கநாதம் ஒலித்தது. யாத்ரிகர்கள் முன்னும் பின்னுமாக புறப்பட்டனர். பல்லக்குகளை எழுந்தருளப் பண்ணும் ஆட்கள் தங்களுக்கு ஏற்பட்ட வேகத்துடன் பல்லக்குகளைத் தாங்கிப் புறப்பட்டனர். ஸ்வஸ்தி வாசனத்துடனும், கட்டியங்களுடனும் எழுந்தருளினர் நம் ஸ்ரீ அழகியசிங்கர். நம் ஸ்ரீ அழகியசிங்கர் சிங்கப் பிரானை மங்களாசாஸநம் செய்வதைப் பார்ப்பதிலும், நேரில் இருந்து அநுபவிப்பதிலும் எவ்வளவு ஆநந்தம் அங்குள்ளோர்க்கு! அங்குமிங்கும் குன்றிலேறியுமிறங்கியும் சென்று கொண்டிருந்தார்கள் சீடர்கள். நம் ஸ்ரீ அழகியசிங்கர் தம் அருகிலே பக்தியுடன் வந்துகொண்டிருக்கும் ஓர் சிஷ்யனைக் குறித்து 'நின்றழலால் தேய்ந்த வேயுமல்லதில்லாச் சிங்கவேழ் குன்றமே' என்று ஆழ்வார் பாடிய பாடலின் கருத்து இப்பொழுது புரிகிறதா, என்று ஸாதிக்கும்படி இருந்தது. எங்கு பார்த்தாலும் மூங்கிற்புதர். செல்வோர்கள் ஒவ்வொருவரும் ஓர் மூங்கிற்கழியுடன் சென்றார்கள். அதன் உபயோகம் அப்பொழுது சிலருக்குத் தெரியவில்லை. பிறகு மேலே செல்லச் செல்ல கால் சுழன்று குன்றுகள் ஏறும்பொழுதுதானவைகளின் உபயோகம் தெரியவந்தது. வழிமுழுவதிலும் வானளாவி நின்ற மரங்கள். அடர்ந்த புதர்கள். நடுநடுவே வளைந்து வளைந்து தோன்றும் பவநாசினியாறு. சிறுசிறு கூழாங்கற்களும், கற்பாரைகளும் நடுநடுவே தலைதூக்கினின்றன. இவ்விதமாகவே 'சென்று காண்டற்கரிய கோயிலாகிய சிங்கவேழ்குன்றத்தைக்காணப் புறப்பட்ட நூற்றுக் கணக்கான சிஷ்யர்கள் அடிக்கடி 'சுருதிநினைவியைவயறியுந்துணிவுடையார் தூய்மொழிகள்' கொண்ட ஆழ்வார் பாசுரங்களை மனத்தில் அநுஸந்தானம் செய்து கொண்டு சென்றனர்.

வழியிலே பல பல விதமான நூற்றுக்கணக்கான மண்டபங்கள் தென்பட்டன. சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறபடி, சாளுக்கிய அரசர்கள் காலத்து சிற்பங்களைக் கொண்டதான அழகிய தூண்களுடன் கூடியவைகள். பெரிய தடாகங்கள் நாலாபுறங்களிலும் படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றவைகளாக தோற்றமளித்தன. ஓங்கி உலகளக்கும் குன்றுகளின் மேல்இம்மாதிரியான அரிய தெப்பக் குளங்களும் மண்டபங்களும் எப்படிக் கட்டப்பட்டன என்பது ஓர் ஆச்சர்யமே.

இப்படி உயர்ந்த குன்றுகளின் மேல் ஏறிச்சென்ற அடியார்கள் ஓர் விஸ்தாரமான சதுக்கத்தை அடைந்தனர். நாற்புறங்களிலும் குன்றுகள் தென்பட்டன. சதுக்கத்தின் ஓர் புறம் மண்டபமொன்றும், மற்றொரு புறம் 'சிங்கவேழ் குன்றுடைய எங்களீசன்' திருக்கோயில் காணப்பட்டது. கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியது கண்டோம் என்று ஆநந்தமேலீட்டால் எல்லோருமாரவாரஞ்செய்யத் தலைப்பட்டனர்.

இக் கோயில் குகையில் குடியிருக்கும் நம் நரசிங்க மூர்த்தி பல ரூபங்களிலே எல்லோருக்கும் ஸேவை ஸாதிப்பதைக்கண்டுகளிப்புற்று நற்கதியடையும் பாக்யத்தை அங்கு செல்பவர்களே அடைகின்றனர். அஸுரனது பேருடலைப்பிளந்து நார்கிழிப்பாரது போல நன்றாகக் கிழித்திட்டு வீற்றிருக்கும் நரசிங்கனைக்கண்டு அவன் மடிமலரைப் பணியும் பாக்யமும் எல்லோருக்கும் கிடைக்குமா!

இப்பேர்ப்பட்ட 'சோதியெனவுலகெல்லாம் சுகம் பெறவே வந்துதித்த ஆதிகுருநரசிங்கன் அருளாலே யோகியான ஆதிவண்சீர் சடகோபனடியிணை யென் முடிமணியே' என்று நாம் எல்லோருமநுஸந்தாநம் பண்ணும்படியான காலமும் பெருமையும் நம் ஜங்மாந்தரஸுக்ருதத்தாலேதான் நமக்குக் கிடைத்திருக்கிறது.

கருடாத்ரியின் மத்தியிலே அஹோபிலத்திலே தன்கருணையால் "மாமலராள் மன்னியுறை மடியுடையான்நாசிங்கன்வீற்றிருக்கும்பாக்கியத்தை முதன்முதலிலே கண்டுகளித்தவர் தான் இறைவன்புரட்டாசித்திருக்கேட்டையிற்குருவாய்ப் பிறந்திட்ட சடகோபன்.' இச்சடகோபன்தான் ஆதிகுரு நரசிங்கனருளாலே யோகியான ஆதிவண்சீர் சடகோபன் எனக்கூறப்படும் நம் முதல் அழகியசிங்கர். **'अहोबिले श्री नृसिंहः प्रेषमन्त्रं स्वयं ददौ'** என்று ஸ்ரீந்ருஸிம்ஹனே இவருக்கு மந்த்ரோபதேசமும் செய்து துரீயாச்ரமத்தையும் தந்தருளினார். அதுமுதல் இந்த ஸ்ரீ அஹோபிலமடம் கோடாநுகோடி சிஷ்யர்களை நற்கதிக்குக் கொண்டுவந்திருக்கிறது, ஸ்ரீ ஆதிவண்சடகோபனே ஸ்ரீதேசிகனது அவதாரம். ஸ்ரீதேசிகன் ஸ்ரீவேங்கடேசனுடைய அம்சாவதாரமானபடியால், ஸ்ரீ ஆதிவண்சடகோபனும் ச்ரிய:பதியின் அம்சாவதாரமே. இக்கருத்து அழகாகப் பின்வரும் பாசரத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் காணமுடியும். 'செல்வமுடைவேங்கடவன்அறந்திகழுமாமணியினவதாரமாங் குருவே நிறைந்திங்கே யிம்முனியாய் நிற்கின்றதுறைப்பேனே'.

'त्वमेव माता च पिता त्वमेव' என்கிறபடி 'பெற்றதாயாய்ப் பேதமில்லாத்தந்தையுமாய் மற்றுமுள்ள சுற்றமுமாய் மன்னிய பொன்னிராசியுமாய் எத்திசையுமென்னுடையவின்னுருவாம் பாக்கியமாய் உற்றமுனி சடகோபனே'.

நம் ஸ்ரீ ஆதிவண்சீர் சடகோபன் ஒன்பதுரு கொண்ட நரசிங்கனில் ஸ்ரீமாலோலனையே தம் ஸஞ்சாரத்தில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றதும் மிகவும் பொருத்தமானதே.

அலர்மேல் மங்கையுறைமார்பனென்ற ஸ்ரீநிவாஸனும் ஒருஸமயம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதித்தனன் என்று வேங்கடாசலமாஹாத்ம்யம் கூறுகிறது.

நிற்க புரட்டாசித் திருவோணத்தில் புவியுதித்த நம் தேசிகனும் **'भगवति युवां दम्पती दैवतं नः'** என்று ஸ்ரீமந்நாராயணனே நமக்கு தைவம் எனக் குறிப்பிட்டார்.

கூரத்தாழ்வானே இதற்கு ஒருபடி மேலேயே குறிப்பிட்டுள்ளார் **'देवि त्वन्महिमावधिर्न हरिणा नापि त्वया ज्ञायते'** உன்னுடைய பெருமை உனக்கும் உன் பர்த்தாவுக்கும் தெரியாது. ஏனென்றால்,– பெருமை அளவுகடந்ததல்லவா என்கிறார். இப்பெருமையினேற்றத்தை யறியத்தான் ஸ்ரீந்ருஸிம்ஹனும் ஸ்ரீலக்ஷ்மியை நோக்கிக் கொண்டே வீற்றிருப்பதுபோல் ஸேவை ஸாதிக்கிறான் போலும்.

ஸ்ரீபராசரபட்டர் மேலும் பிராட்டியின் ஏற்றத்தை விவரிப்பது மிகவும் அழகாக அமைந்திருக்கிறது:–

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸஞ்சாரமும் கடப்பையில் வீற்றிருத்தலும்.

ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்திற்கு ஸ்ரீ அழகிய சிங்கர் ஸங்கல்பத்திற்குமுந்திஎழுந்தருளினார். பிறகு அவ்விடத்திலேயே சாதுர்மாஸ்யஸங்கல்பத்தை நடத்துவதாகத் திருவுள்ளம்பற்றி அங்கே ஸுமார் மூன்று மாதகாலம் ஸ்ரீந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் அந்த க்ஷேத்ரத்தில் செய்யவேண்டிய அனேக சீர்த்திருத்தங்களைச் செய்யும்படி நியமித்தவைகளை நேரில் கடாக்ஷித்தாயிற்று. அங்கு 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் மூன்று மாஸாராதனங்கள் நன்றாக நடந்தன. பிறகு புரட்டாசிமீ 8உ (24-9-53) வியாழக்கிழமை காலை 5 மணிக்கு உத்தானத்திற்கு ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் விஜயயாத்ரை ஆரம்பமாயிற்று. கீழ் அஹோபிலத்திலிருந்து ஸுமார் 9 மைலில் தூரத்திலுள்ள ராமதீர்த்தத்திற்கு அன்றையதினம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளினார். அவ்விடத்தில் ஒரு கோயிலும் குளமும் இருக்கிறது. அக்கோயிலில் ஸ்ரீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். அக்கோயிலுக்கெதிரிலுள்ள குளம் மிக ரமணீயமாகவிருக்கிறது. அக்கோயிலின் நித்ய பூஜாதிகள் 1 மையில் தூரத்திலுள்ள க்ருஷ்ணபுரவாஸிகளின் அபிமானத்தினால் நடந்து வருகின்றன. அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் இந்த க்ஷேத்ரத்தையும் அஹோபிலக்ஷேத்ரத்தைப்போல விலக்ஷணமாக (வெகு நன்றாக) பரிபாலிக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். ஆழ்வாராசார்யர்களுக்கும் ஜடீபந்தனம் முதலியவை செய்து ப்ரதிஷ்டாதிகளைச் செய்விக்கவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். அன்றிரவே அங்கிருந்து புறப்பட்டு 7 மையில் தூரத்திலுள்ள போதனத்திற்கு எழுந்தருளினார். ஊருக்கு அருகில் உள்ள குமுத்வதீ (குந்தா) என்னும் ஆறில் ஸ்ரீ அழகியசிங்கர்

'मातर्मैथिलि राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधास्त्वया
रक्षन्त्या पवनात्मजाल्लघुतरा रामस्य गोष्ठीकृता ।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नस्सान्द्रमहागसस्सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी

ஸீதாதேவியே! தாயே! மிதிலாதிபன்மகளே உன்னைப்பல துன்பத்துக்குட்படுத்திய ராக்ஷஸிகளை ஹநுமான் கோபத்திலிருந்து நீ காப்பாற்றியபொழுது உன் [உயர்ந்த] குணங்கள் ராமபிரானுடையகுணங்களையும் வென்றுவிட்டன. ஏனெனில்,- ராமன் தன்னைச்சரணமடைந்தகாகாஸுரனையும், விபீஷணனையும் காப்பாற்றினான். உன் க்ஷமையோ அளவுகடந்தது. அதுதான் எங்களுக்குப்புகல். ஆதலால் நாங்கள் பாபிகளான போதிலும் எங்களைப்பரிசுத்தப்படுத்தி இன்புறச்செய்யட்டும்.

இப்படிப் பூர்வாசார்யர்கள் பிராட்டியின் பெருமையைப்பலவாறு புகழ்ந்திருக்கிறார்கள். இதையே குறிப்பாகக்கொண்டுதான் நம் ஆதிகுருவும் நமக்கு ஸேவைஸாதிக்கிறான். மாலோலன் அல்லவோ நம் ஆதிகுரு. லக்ஷ்மியின் பெருமையில் பூரித்துப்போனவன்.

மாலோலன் நமக்கு இப்படி எக்காலமும் ஸேவைஸாதிக்கும்படி நமக்குநேர்ந்தது நம் ஸ்ரீ ஆதிவண்சீர்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனாலல்லவா!.

அப்படிப்பட்ட ஆசார்யச்ரேஷ்டரை **'गुरुं प्रकाशयेद्धीमान्'** என்றபடி நாம் பரக்கப்பேசி துதி செய்வது அவச்யம்அல்லவா. 'எத்திசையும் அக்கோசமேந்துகின்ற கையுடனே புத்தியுள்ளே வரும் யோகி பொன்னடியை மறவேனே'.

செம்பொன்சேர்சிங்கவெற்புச்செழிக்கவந்த,
சீர் பெரும்பூதூர்முனியே சகத்துதித்த,
புரட்டாசிக்கேட்டைதனில்புவியுதித்த,
சடகோபமாமுனியே!வாழி வாழி! என்று
நாமெக்காலமும் சிந்திப்போமாக.

'ஓங்குமலை வாழ்க அஹோபிலம்தான்வாழ்க பாங்காய்ச் சடகோபன் பா வாழ்க- பூங்கமலம் தன்னை யணி தாராய் சடகோபமாமுனியே! இன்னமொரு நூற்றாண்டிரும்.'

நீராட்டம் செய்து அநுஷ்டாநாதிகளை முடித்துக்கொண்டு, அதற்கு அருகிலுள்ள சத்திரத்தில் ஸ்ரீமாலோலனுக்கு ஆராதநாதிகளைச் செய்தார். அவ்வூர் வாஸிகள் அஹோபில க்ஷேத்ரத்திற்கு கடப்பை முதலிய இடங்களிலிருந்து வரும் யாத்ரிகர்களுக்கு பஸ்போகும் ரோட்டுக்கு அருகாமையில் தங்குமிடம் கட்டினால் ஆற்றில் வெள்ளம்வரும் ஸமயத்தில்கூட அஹோபிலத்திற்கு ஸௌகர்யமாகத் தங்கிப் போகலாம். போகும்பொழுது ராமதீர்த்த க்ஷேத்ரத்தை தர்சனம் செய்துபோக ஸௌகர்யமாயிருக்கும். ஆர்லகட்டாவைக்காட்டிலும் இங்கு கட்டுவது ரொம்பவும் ச்ரேஷ்டமானது என்று ப்ரார்த்தித்து தாங்கள் இலவசமாய் 50 செண்ட் நிலம் கொடுப்பதாய் சொல்லி அந்த இடத்தை ஸ்ரீஅழகியசிங்கருக்குக் காட்டினார்கள் அந்த நிலத்தை புச்சிரெட்டி மூலம் பெருமாள்பேரில் எழுதிக்கொடுத்துவிட்டார்கள். அங்கிருந்து 25–9–53 ம் வ இரவு புறப்பட்டு சாகல்மேரிக்கு ஒரு மையில் தூரத்திலுள்ள சத்திரத்திற்கு எழுந்தருளினர். மத்யாஹ்னமே அங்கிருந்து புறப்பட்டு இரவு 7 மணிக்கு 8 மையில் தூரத்திலுள்ள கானகொடுருக்கு எழுந்தருளினர். அங்கிருந்திரவு 2 மணிக்குப் புறப்பட்டு 7 மையில் தூரத்திலுள்ள ரோட்டுக்கு அருகாமையிலுள்ள ஒரு மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். 27–9–53 இரவு அங்கிருந்து 12 மையில் தூரத்திலுள்ள காறிப்பேட்டைக்கு எழுந்தருளினர். இவ்வூரில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். 29–9–53 இரவு அங்கிருந்து 13 மையில் தூரத்திலுள்ள கடப்பைக்கு எழுந்தருளினர்.

கடப்பையில் பெருமாள் அஹோபிலமெழுந்தருளும் காலத்தில் ஒரு இடத்தை தனக்காக ஏற்பாடு செய்துகொண்டார். ஸ்ரீமாலோலன் திருவுள்ளத்தை யநுஸரித்து ஸ்ரீமதழகியசிங்கர் 13000 ரூபாயில் மடத்துக்காக ஒரு கட்டடம் வாங்கியாயிற்று. மேற்கொண்டு 4000 ரூபாய்க்குமேல் சிலவு செய்து அவச்யமான ரிபேர்களும்செய்யப்பட்டு பார்ப்பதற்கு வெகு நன்றாய் விளங்குகிறது. ஆந்த்ர தேசத்தில் தனி மாகாணம் ஏற்படுத்த நிச்சயித்திருந்த 1–10–53ல் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் தனக்கு ப்ரத்யேகமாக ஸங்கல்பித்துக்கொண்ட கடப்பை மடத்தில் தன்னுடைய வீற்றுருப்பையும் அங்கீகரித்து அதற்காகவே முதல் நாளே எழுந்தருளியிருப்பதாய் மஹனீயர்கள் அநுஸந்திக்கும்படி இருந்தது. ஸர்வலோக சரண்யனான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஆந்த்ர மாகாணத்தாரையும் அநுக்ரஹிக்கவேண்டியதைத் திருவுள்ளத்தில் கொண்டே ஆந்த்ரமாகாணம் சென்னைமாகாணத்தை விட்டுப்பிரியும்பொழுது முன்னமேயே கர்னூல் ஜில்லாவில் முழுவதும் தனது ஸாம்ராஜ்யம் தோற்ற சிங்கவேழ்குன்றத்தில் வீற்றிருக்கச்செய்தேயும் இப்பொழுது உலகத்தாருக்கு மறுபடியும்தனியாய் எடுத்துக்காட்டுவதற்காகவே போக்குவரத்து ஸௌகர்யம்மிக உள்ளதான கடப்பையில் தனது ஸாம்ராஜ்யம் தோற்ற அழகியதான தன் மண்டபத்தில் வீற்றிருந்தான் என்றநுஸந்திப்பது மிகப்பொருத்தமே. அவ்விடமுள்ள ஸ்ரீஸந்நிதிசிஷ்யர்கள் பெருமாளை யதாசக்தி ஆராதித்தார்கள். தாசில்தார் ஸ்ரீ ராஜகோபாலாசார்யர் ஒருநாள் ததீயாராதனம் தன்னுடையதாக இருக்கவேணுமென்று ஸமர்ப்பித்தார். இவ்வூரில் ஆறு தினங்கள் தங்கியிருந்தார். இந்த ஆறு தினங்களிலும் ஸமாச்ரயண பரஸமர்ப்பணாதிகள் நடந்தன. காலையில் ஸ்ரீபாஷ்யமும், மத்யாஹ்னம் பகவத்விஷயமும் காலக்ஷேபம் நடந்தன. விபவாவதாரத்தில் பெருமாளுக்கும் பெரியபெருமாளான ரங்கநாதன் அத்யயனஉத்ஸவத்தின் பொருட்டு ஆழ்வாருக்காக ஸ்ரீபாதம் தாங்கிகளை அனுப்பி அதுவரை புறப்பாடு இல்லாமல் இருப்பதுபோல்அர்ச்சாவதாரத்தில் திருவேங்கடமுடையானுக்கும் பெரிய பெருமாளான ஸ்ரீந்ருஸிம்ஹன் தானும் சிலநாள் கடப்பையில் தங்கவேண்டியதை உத்தேசித்து ஸ்ரீபாதம்தாங்கிகளின் விளம்பத்தை ஏதோ ஒரு வ்யாஜத்தினால் ஏற்படுத்தி அதிகப்படியாக நான்கைந்து தினங்கள் எள்ளியிருந்தார். வையமேழும் தன் பொன்வயிற்றில் வைத்து நோக்கிக்கொண்டதுபோல் தன்னுடைய ஸமஸ்தபரிஜன பரிச்சதங்களையும் தன்னுடைய ஸங்கல்பாதிகளையுடைத்தான கடப்பை மடத்தின் எல்லைக்குள்ளேயே ஸௌகர்யமாய் வைத்து நோக்கியருளினான். இதில் ஓர் ஆச்சர்யமிருந்தபடி என் என்று அவனுடைய குணங்களில் ஈடுபட்டவர்கள் பலகால்சொல்லி மகிழ்ந்தார்கள். பெருமாள் அங்கு எழுந்தருளியிருந்தமையால் அந்நகர் கோலாஹலத்துடன் விளங்கிற்று.

இத்தருணத்தில் எம்பெருமான் 'உபமாநம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருவோணமும் திருக்கேட்டையும்

[ஸ்ரீ. உப. வித்வான், களத்தூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரிய:பதியாயும் அவாப்த ஸமஸ்த காமனுயுமுள்ள ஸர்வேச்வரன் 'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே' என்று தானருதியிட்டபடி தர்மம் குலைந்து அதர்மம் மேலிட்ட தருணம் ராம க்ருஷ்ணாதி ரூபமாக அவதரித்து 'யத்யதாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந:' என்று நினைத்து தானும் நன்கு அநுஷ்டித்து காண்பித்தா னென்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். பின்பும் 'ஜ்ஞாநாந்விஶ்வ க்ஷாந்தே யஸ்ய ஹ்ருதி ஸ்திதோ ஹ்ருதவ்யாத:' என்கிறபடியும் 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா' என்றுப்போலும் பொய்கையாழ்வார் முதல் திருமங்கை மன்னனளவாயுள்ள ஆழ்வார்களாகவும் நாதமுனிகள் முதலாக ஸ்வாசார்ய பர்யந்தமாயுள்ள ஆசார்யர்களாகவும் ஸர்வேச்வரன் தானே அவதரித்து தர்மங்களை அநுஷ்டித்துக்காண்பித்தும் க்ருந்தங்கள் மூலமாக வெளிப்படுத்தினர் என்பதும் தெரியவருகிறது. இவ்விதம் சேதநர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவே வந்த அவ்வோ அவதாரங்களின் தினங்களை கொண்டாடி அவர்கள் செய்துகாண்பித்த நற்செயல்களையும் அநுஸந்தித்து நாமும் அதன்படி நடக்க ப்ராப்தமன்றோ. அப்படி நினைவு வரும்படியான ஸர்வேச்வரனின் அவதார தினங்கள் வருடத்தில் ஒவ்வொரு மாதமுமுள்ளன.

இவ்விதம் ஆழ்வாராசார்யர்கள் இங்கு வந்தித்து தாங்கள் மாயையினின்று விடுபட்டு ஸர்வேச்வரனை அடைந்ததுமல்லாமல் அனைத்துலகமும் உய்வதற்காக பல அருளிச்செயல்களையும் மொழிந்திருக்கின்றனர். இவ்வளவு மஹோபகாரம் பண்ணினமஹான்களை எப்பொழுதும் துதித்துக்கொண்டு அவ்வோ வருட திருநக்ஷத்திரங்களில் மிகவும் பக்தியுடன் விசேஷமாகக் கொண்டாடுவது அவசியமே.

இவ்விதம் முன்னுள்ளோரும் செய்து வந்தார்கள் என்று அறிகிறோம். இங்ஙனம் கொண்டாட வேண்டிய திருநக்ஷத்திரங்களில் திருவோணமும் ஒன்று. வருட திருநக்ஷத்திரத்தையாவது மனத்தில் கொண்டு துதிக்கக் கடமையன்றோ. திருவோணம் என்கிற நக்ஷத்திரம் ஸ்ரீ வைகுண்டத்தில் அனந்த கருட விஷ்வக் ஸேநாதிகளாலும் நித்ய ஸூரிகளாலும் எப்பொழுதும் துதிக்கப்படுகிற ஸர்வேச்வரனுடையதும், சேஷாசலத்தில் வீற்றிருக்கும் திருவேங்கடப் பெருமாளுடையதும். அப்படிப்பட்ட திவ்யநக்ஷத்திரத்தில்தான் திருவேங்கட முடையானின் கண்டாம்சமாய் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன் அவதரித்தார். அவர்

அசேஷாண'மென்கிறபடிப்ரஹ்லாதனுக்கருள் புரிந்ததுபோல் க்ருஷ்ணவதாரத்தில் அர்ச்சிக்கப்பட்டவராயும் மதுமூர்த்தியான யாதவாத்ரிநாதனை ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸேவை பண்ணிவைப்பதற்காக ஸ்ரீபாதம் தாங்கிகளை வரவழைத்துக்கொண்டு கடப்பா நகரத்தை விட்டு 5–10–53 திங்கட்கிழமை இரவு கிளம்பி 10 மைல் தூரத்திலுள்ள மத்யமடுவுக்கு எழுந்தருளினர். அங்கிருந்து பகல் 1 மணிக்குப் புறப்பட்டு 11 மைல் தூரத்திலுள்ள ராமாபுரம் என்னும் கிராமத்துக்கு எழுந்தருளினர்.

(தொடரும்)

தொண்டைமண்டலத்திற்கு திலகம் போன்ற ஸ்ரீ காஞ்சிநகரியில் விளக்கொளியெம் பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான திருத்தண்கா என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் கலியுகம் 4370 (கி. பி. 1268) விபவ வூ புரட்டாசிமீ ஸ்ரவணநக்ஷத்திரம் கூடின சுபதினத்தில் ஸ்ரீ அனந்தஸூரிக்கும் தோதாரம்பைக்கும் திருக்குமாரனாக அவதரித்தாரென்று அறிகிறோம். தசரதரையும் கௌஸல்யாதேவியையும் ஜனங்கள் வாழ்த்தியதுபோல நாமும் அநந்தஸூரியையும் தோதாரம்பையையும் துதி செய்வது அவச்யமாயிற்று. இதன் காரணம் சக்ரவர்த்தித்திருமகன் செய்த மஹோபகாரத்தையும் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் செய்த மஹோபகாரத்தையும் நினைத்து இவர்களை பெற்றெடுத்ததே. அவ்விதம் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன் மஹோபகாரம் செய்தார் என்பது அவரெழுதிய நூல்களாலும் பெரியோர்களாலும் அறிகிறோம். அதை யுத்தேசித்தே ஒவ்வொருவரும் துதிக்க முயலுகிறார்கள். அதில் அடியேனும் ஒன்று. எப்படி முயன்றும் பயனளிக்கவில்லை. அப்படியிருந்தும் பட்டர் எழுதிய ச்லோகத்தைக்கண்டு துதிக்கத் துணிவு கொண்டேன். அது எங்ஙனே யென்னில் பட்டர் ஸ்ரீரங்கநாதன் விஷயமாக துதிக்கமுயலும் தருணத்தில் 'அமிதம் மிதம் மிதயோர்மிதம் ஸ்துதம் பரிநிந்திதம் பவதி நிந்திதம் ஸ்துதம் । இதி ரங்கராஜ ம்ருஜுதேவ வாக்ஷஸ்து ஸ்துதமேவ வயம் கிமீதி தவ ஸங்க்ரமதே:' என்று அநுஸந்தித்தார். இதற்குப்பொருள் ஸ்ரீரங்கநாதனை அளவிட முடியாது என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள்தான் அறிந்தவர்களாகிறார்கள். துதிக்க முயன்றவன் ஜ்ஞாந சக்தியற்றவனாயிருக்கும்போது பரிஹஸிக்கப் படுகிறான் என்று. அவ்விதமே ஸ்ரீரங்கநாதன் அம்சபூதரான நிகமாந்த மஹாதேசிகன் விஷயமாக துதிக்க முயன்றவனும் ஆகிறான். அதற்குக் காரணம் —ஸ்வாமி தேசிகனின் குணங்களும் அளவற்றது. அப்படியிருந்தும் அடியேன் புந்தி சக்திக்குத் தக்கவாறு ஸ்வாமி தேசிகனைப்பற்றி சிலவற்றை விஜ்ஞாபிக்கிறேன். தூப்புல் நிகமாந்தமஹாதேசிகனின் அருளிச் செயல்களும் அவர் அநுஷ்டித்துக் காண்பித்த முறையும் சேதனர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவே வெளிப்பட்டன. ஒவ்வொரு ஸ்வாமியின் அருளிச் செயல்களையும் நன்கு பராமர்சிப்போமாகில் அவைகள் தத்வ ஹித புருஷார்த்தங்களையே தெளிவு படுத்துகின்றன. அதுவுமல்லாமல் ஒவ்வொரு சேதனனும் அபேக்ஷிக்கும்படியான தர்மார்த்த காமமோக்ஷங்களையே ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திகள் ப்ரகாசப் படுத்துகின்றன. ஒவ்வொன்றையும் கணிசித்துப் பார்ப்போம். கீழ்ச்சொன்ன அம்சங்களில் முதல் தர்மத்தை பராமர்சிப்போம்.

தர்மம் என்பது ஶாஸ்த்ர சோதிதமாயும் அந்தந்த வர்ணாச்ரமத்திற்கு அநுகுணமாயுமுள்ள கர்மங்களென்று இங்கு விவக்ஷிதம். தூப்புல் நிகமாந்த மஹாதேசிகன் பால்யாத்ப்ரப்ருதி தேஹாவஸாந பர்யந்தம் ஶாஸ்த்ரீய முறைப்படியே கார்யங்களைச்செய்து வந்தார். ஐச்வர்யத்திலும் ஆசையற்றவராகவே இருந்தார். இந்த விஷயம் வித்யாரண்யஸ்வாமிக்கு பத்ரிகை மூலமாக ஸ்வாமி அறிவித்த ச்லோகத்தைச் கணிசித்துப் பார்ப்போமாகில் தெரிய வருகிறது. அதாவது — 'நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம் । அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ॥' இந்த ச்லோகத்தால் ப்ராஹ்மண யோநியில் பிறந்த ஒவ்வொருவனும் 'ப்ராஹ்மணஸ்ய தநம் விதா நஷ்ட:' என்று நினைத்து குடும்ப பரணத்திற்கு வேண்டிய அளவு தினந்தோறும் உஞ்சவ்ருத்தி மூலமாகஸம்பாதித்து பகவத்யாந பரனாக இருக்கவேண்டுமென்று புலப்படுகிறது. இப்படி அநுஷ்டித்துக்காண்பித்தது மல்லாமல் தர்மத்தை ப்ரதிபாதனம் பண்ணும்படியான ஸச்சரித்ர ரக்ஷா முதலிய பல நூல்களுமுண்டு. ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளிய ஒவ்வொரு க்ரந்தங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு கணிசித்துப் பார்ப்போமாயின் தர்மத்தை ப்ரதிபாதனம் பண்ணவே அவதரித்தன வென்று புலப்படும்.

அதற்கடுத்தபடி அர்த்தத்தைப் பராமர்சிப்போம். 'ஃஅயூதெ ஊதி ஃஅயூஃ' என்கிற வ்யுத்பத்தியால் ஒவ்வொரு மனிதனும் ப்ரார்த்திக்கத் தகுந்த பொருளை தெரிவிக்கிறது. இந்த அம்சத்தை தெரியப்படுத்த ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திகளில் சில அமைந்திருக்கின்றன. அதாவது— த்ரவ்யத்தை விரும்புகிறவனுக்கு ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸ்துதி செய்தருளினர். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸ்துதியை அநுஸந்தித்த உடன் பிரஹ்மசாரிக்கு பலமும் கிடைத்தது. இதை 'யொமாரஂஹ ஃவி.த உநவொ யஃஷ தெ.காஜ்ய யஃதுஂ யஃஂ வூாவூஂ வூய ஷிஹ யெயாரயணெ யநாயாழ। தெஷாஂ ஹூ ஒயஃ நவதிமூஹா ஃவெராஃவெ யெவஃா யாரா நியஃாஜ்யிகூ ஃயிகூஂ வாஂ ஹிதாநாஂ வஸூநாழ॥' என்கிற ச்லோகத்தைக் கொண்டு சொல்லுவார்கள். இவ்விதம் ஜ்ஞாநத்தை விரும்புகிறவனுக்கு ஹயக்ரீவனிடமிருந்து அடையலாமென்று கருதி ஹயக்ரீவ ஸ்தோத்ரம் செய்தருளினர். அதில் உள்ள ச்லோகங்களை அநுஸந்தித்தால் கேவலம் ஜ்ஞாந மாத்திரமல்ல, வாதாடும்படியான சக்திகூட ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட அர்த்தபுஷ்டியுள்ள ஒவ்வொருச்லோகங்களும் அமைந்துள்ளன. இவ்விதமே வ்யாதிபயம் போக்கிக் கொள்ள விரும்புகிறவனுக்கு அபீதிஸ்தவம், கருடபஞ்சாசத் முதலியவைகளை அர்த்தபுஷ்டியுடன் அருளிச்செய்தார்ஸ்வாமி தேசிகன். இப்படி தனக்கொரு பயனைக்கருதாமல் பிறர் அபிஸந்திக்குத் தகுந்தபடி ஒவ்வொரு ஸ்தோத்ர பாடமும் செய்தருளினர் என்பது திண்ணம். அதுவுமன்றி ஐஹிகபலம் யாவற்றையும் ஸர்வேச்வரனை ஸ்ரீ மந்நாராயணனிடமிருந்தே அடையலாமென்றும் மேற்கூறிய ஸ்தோத்ர பாடங்களிலிருந்து தெரியவருகிறது. ஐஹிகபலத்திற்காக தேவதாந்தர பஜனமும் வேண்டாமென்று புலப்படுகிறது. பின்னையும் 'யெயயாஂஂ வூவஃஜெ தாஂ ஹூமெவ ஹஜாஜ்ஹழ' என்று எவ்வுருவமும் ஸர்வேச்வரன் அம்சமாயிருந்த போதிலும் ஒவ்வொரு அம்சத்திலுள்ள விசேஷகுணங்களை அநுஸந்திப்பதற்காகராமன், க்ருஷ்ணன், வரதன், தேஹளீசன், தேவாதிராஜன், ரங்கநாதன், ஸ்ரீநிவாஸன், தேவநாதன் என்றுபல நாமங்களை உச்சரித்து பல பகவத் குணங்களை வெளிப்படுத்தினர். இந்த ஸ்தோத்ரங்கள் அந்தந்த நாமங்களில் மஹாவிச்வாஸமுள்ளவர்களுக்கு அநுஸந்திக்க ப்ரயோஜநமுள்ளதாயிற்று. பகவானை நாமாகவே துதிப்பதைக்காட்டிலும் பெரியோர்களின் அருளிச்செயல்கள் அர்த்தபுஷ்டியுள்ளதாயிருப்பதால் அபேக்ஷிதாம்சம் கைகூடுமென்பதில் ஸந்தேஹம் கிடையாது. இப்படி அர்த்த பதார்த்தத்தையும் விவரிக்க ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகள் அமைந்துள்ளன.

அடுத்தபடிகாமமென்பதை கவனிப்போம். காமம் என்பது 'ஊூா'. ஸ்வாமியின்சரித்திரத்திலிருந்தும் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும் காமம் என்பது ஸர்வேச்வரன் விஷயமாகவே இருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. அவ்விதம் தான் ஆழ்வார்களும் அநுஸந்திக்கிறார்கள்.

பிறகு மோக்ஷம் என்கிற புருஷார்த்தத்தை கவனிப்போம். மோக்ஷம் என்கிற புருஷார்த்தத்தை தெரிவிக்கவே ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் தூப்புல் நிகமாந்தமஹாதேசிகன் அம்சமாக அவதரித்தாரென்பது அடியேனுக்கு புலப்படுகிறது. மோக்ஷ ஸ்வரூபத்தையும் அந்த ஸாம்ராஜ்யத்தை அடைய உபாயமும் இன்னதென்று தெளிவுபடுத்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரமென்கிற க்ரந்தத்தை ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்தார். இந்த க்ரந்தம் தானுகவே எழுதவில்லை. பல ஆசார்யர்களின் அருளிச் செயல்களையும் வேதவேதாந்தங்களில் உள்ள அம்சங்களையும் நன்கு பராமரித்தே ஸ்வாமி தேசிகன் இந்த க்ரந்தத்தை எழுதினர். இந்தவிஷயம் ஆங்காங்கு உதாரணமாக சொல்லப்பட்ட ச்லோகங்களிலிருந்து தெரியவருகிறது. ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் ஸ்வாமிதேசிகன் ஆசார்யனின் அருளினால் கிடைத்த அர்த்தம் என்றும் எழுதியுள்ளார். இந்த க்ரந்தத்தில் மோக்ஷ ஸ்வரூபமும் அதற்கு உபாயமும் அதற்கு அநுஸந்திக்க

வேண்டிய அங்கபஞ்சகங்களையும் ஆசார்யன் மூலமாக அடையலாமென்பதையும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் சக்தியற்றவனுக்கு ப்ரபத்தியே யுக்தமென்று கீழ்ச் சொன்ன க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளினர். இந்த ப்ரபத்தி மார்கத்தின் ஸாரத்தை அறிவதற்காக அபயப்ரதான ஸாரமென்கிற க்ரந்தமும் ஸ்வாமிதேசிகன் ஸாதித்தருளினர். இந்த க்ரந்தத்தில் ராமாயணத்திலுள்ள ஒவ்வொரு காண்டத்திலும் ப்ரபத்தியின்மார்க்கமே ப்ரதிபாதிதமென்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஸ்வாமி தேசிகன் ப்ரபத்தி மார்க்கத்தை விவரித்துக்காட்டியது மல்லாமல் இதற்கு அதிகாரிகள் யாவருமாவர். ஸ்திரீ ஶூத்ராதி ஜாதி வித்யாஸமில்லை யென்றும் அருளினர். அதாவது— 'அந்தணரந்திய ரெல்லையில் நின்ற அனைத்துலகும் நொந்தவரே முதலாகநுடங்கிய நன்னியராய்' என்று, இப்படி சதுர்வித புருஷார்த்தங்களையும் ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஒருவனிடமிருந்தே அடையலாமென்று நிரூபித்துக் காண்பித்த தூப்புல் நிகமாந்த மஹா தேசிகனுக்கு நாமென்ன ப்ரத்யுபகாரம் செய்யமுடியும். இப்படிப்பட்ட ஆசார்யன் நமக்கு கிடைத்தது நமது பாக்யமே. ஆசார்யனுக்கு முக்யமாக வேண்டியது ஜ்ஞாந வைராக்யம். ஸ்வாமியின் ஜ்ஞாநத்தை அளவிட முடியாது. ஶததூஷணீ முதலிய க்ரந்தங்களிலிருந்தே தெரியவருகிறது. ஸ்வாமிதேசிகன் பாமரன் முதல் பெரிய பண்டிதன் வரை நன்கு அநுபவிக்க க்ரந்தங்கள் செய்தருளினர். அதாவது— பெரிய வித்வான்கள் அறிவதற்காக ஶததூஷணீ ந்யாய ஸித்தாஞ்ஜநம் முதலிய நூல்களை செய்தருளினர். ஸாஹித்ய ஜ்ஞாநமுள்ளவர்கள் அநுபவிக்க ஹம்ஸஸந்தேஶம் யாதவாப்யுதயம் முதலிய க்ரந்தங்களை அருளிச் செய்தார். ஒவ்வொரு ஸாஹித்ய க்ரந்தங்களிலும் ரஸங்கள் நிறைந்துள்ளன. திராவிட பாஷையில் பகவானை அநுபவிப்பதற்காக திராவிட ப்ரபந்தமும் அருளிச்செய்தார். இப்படி பல நூல்களிலிருந்து ஸ்வாமியின் ஜ்ஞாநத்தை அளவிடமுடியாது என்று புலப்படுகிறது. வைராக்ய பூர்த்தியும் ஸ்வாமி தேசிகனிடம் குடிகொண்டிருந்தது என்று ஶாஸ்த்ர வாயிலாக அறிகிறோம். இப்படி ஸ்வாமி தேசிகனிடத்தில் ஜ்ஞாநம் வைராக்யம் அநுஷ்டாநம் இவைகள் நன்கு குடிகொண்டிருந்தது மல்லாமல் ஆசார்யர்களுக்கு அவச்யாபேக்ஷிதமான ஸத்குணங்களும் நிறைந்திருந்தன. பல அரிய குணங்களும் ஸ்வாமிக்கு இருந்ததென்று பலர் வெளிப்படுத்திருக்கிறார்கள். அதில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமியும் ஒருவராவார். ஸ்ரீ அண்ணன் ஸ்வாமி தேசிகன் விஷயமாக ஸாதித்தது ஸப்ததி ரத்நமாலிகா என்கிற க்ரந்தம். அதில் ஒரு ச்லோகத்தை மாத்திரம் இங்கு எழுதுகிறேன். 'ஶாந்திஶ்ஶாந்திஶ்ஶாந்தி ஸ்வ விஷய விஜயிதா யீரதா நிஸ்ஸ்ப்ருஹத்வம் ஶேஷத்வம் ஸ்ரீஶதஸாஸ ஜநவிஷயகம் வாஸ தத்ர ஸ்வ தந்த்ர । ஸுக்ஷோஹத்வம் வடுத்வம் த்ருடா ஸர்வஶிதா நிஹதுரகவாநஸத்யே யஷ்விஜ்ஞாநவிதம் ஸ வஹ விஜயதே தேஶிகாசார்யவர்ய: ॥' [ஸ்வாமி தேசிகன் ஸர்வேந்திரியங்களையும் அடக்கிக் கொண்டிருந்தார். ப்ரதிவாதிகளிடத்தில் பயமில்லாதவரும் ஒன்றிலும் ஆசையற்றவராயுமெல்லோருக்கும் விதேயராகவும் பகவத் பாகவத பர்யந்தம் கீழ்ப்படிந்தவராகவும் எல்லோருக்கும் வசமானவராகவும் தனக்கொரு பரமில்லை யென்று எண்ணியும் பிறரிடத்தில் தோஷாரோபணம் செய்யாதவராகவும் இருந்து கொண்டு ஸ்வாமிதேசிகன் விளங்கினர்] என்று கருத்து. பின்னையும் 'விதாஹம் நாயகம்ஶ்ரீம்' என்றுப்போல ஸ்வாமி தேசிகனுக்கு மஹா ஜ்ஞாதாக்களான பித்ரு பிதாமஹாதிகள் அமைந்திருக்கிறார்கள். இதுவும் ஆசார்யன் மேன்மைக்குக் காரணம். இவ்வாறு ஸகலகுண ஸம்பந்நராய் ஆஜாநஶுத்தராய் ஜ்ஞாந வைராக்யங்களுடன் கூடினவராயுள்ள ஆசார்யன் நமக்கு கிடைத்தது அஸ்மதாதிகளின் ஸுக்ருத விசேஷமே. ஸர்வேச்வரனே இப்படி அவதரித்து தர்மஸம்ஸ்தாபனம் பண்ணினர் என்பது திண்ணம். தர்மத்தை நிலைநாட்டவே மநுஷ்ய ஸஜாதீயராய் அவதரித்தாரென்று பெரியோர்களின் கருத்து.

சிறிதளவாவது ஆசார்யனைப்பற்றி நினைத்தோமாயின் ஸர்வேச்வரன் திருவுள்ளத்திற்கு முகப்பு 'ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்.' என்றவன் தானே அருளிச்செய்தான்.

அதற்கடுத்தபடி ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் அவதாரதினமான திருக்கேட்டையும். அதையும் நினைக்கப்ராப்தம். யாதெனில் ஸ்வாமி தேசிகனே ஆதிவண் ஶடகோபயதீந்த்ரமஹா தேசிகனாக அவதரித்தார் என்பது அடியேன் நினைவு. ஸ்வாமி தேசிகனைப்போல ஆதிவண் ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனும் இருபது வயதிற்குள் ஸகலஶாஸ்த்ரபாரங்கதராக விளங்கினர் என்பது யாவருமறிந்ததே. அதுவுமல்லாமல் ஸ்வாமிதேசிகனுக்கு மிகவும் உகப்பாயுள்ள ப்ரபத்திஶாஸ்த்ரத்தை நன்குஅறிந்துகொண்டு ஆதிவண் ஶடகோபயதீந்த்ர மஹா தேசிகன் பிறருக்குப் போதித்து வந்தார். இதனாலேயே ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனை புகழ்ந்தால் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்திற்கு முகப்பு என்று புலப்படுகிறது.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ | வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி || ஶ்ருத்வைவ நிரவத்யாநாம் நிஷத்யாநாம் குணஸம்பதாம் | ஶரணம் ஸேவிதாநாம் ஶடகோபம் முநீஶ்வரம் ||

ஸ்ரீ:

வாழித்திருநாமம்

செம்பொன்சேர் சிங்கவெற்புச் செழிக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூதூர் முனியே சகத்துதித்தோன் வாழியே
பண்புடைய வம்மாள்தன் பரிவுடையோன் வாழியே
பாடியத்தைப் பலகாலும் பகுத்துரைப்போன் வாழியே

பொன் பெயரோன் மார்பிடந்தான் புகழுரைப்போன் வாழியே
புரட்டாசிக் கேட்டைதனில் புவியுதித்தோன் வாழியே
தண்புகழ்சேர் மாறனுரை சாற்றிடுவோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாமரைத்தாள் வாழியே

இரகசியத்திரய சாரத்தின் ரசமுறைப்போன் வாழியே
இரகசிய முப்பத்திரண்டும் ரசித்துரைப்போன் வாழியே
அகவாயிலுயிர்களுய்ய அருள்படைத்தான் வாழியே
ஆழ்வார்தம் கிருபையான வம்சமுத்திரை வாழியே

திகழ்திருநூல் திருவேணுத் திருச்சிகையும் வாழியே
திருவிலச்சினை சேர்ந்த திருத்தோள்கள் வாழியே
அகன் ஞாலத்தவரறிய வாறளித்தான் வாழியே
அங்கை தன்னில் சீகோசமழகுடனே வாழியே

ஓங்குமலை வாழ்க அஹோபிலம் தான் வாழ்க
பாங்காய்ச் சடகோபன் பா வாழ்க — பூங்கமலந்
தன்னையணி தாராய் சடகோபமாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

श्रीः

॥ श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥

श्रीमदादिवण्शठकोपयतीन्द्रमहादेशिकविषयायाः வாழித்திருநாம गाथायाः

संस्कृतानुवाद पद्यमाला

[ஸ்ரீ. உப. வித்வான், பாதூர், புராணம், ஸரளகவி, ராகவாசார்ய ஸ்வாமி,
வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

स्वर्णसमुज्ज्वलकेसरिभूधरकीर्तिविवर्धन! जय जय हे
भूतपुरीकलितोदयलक्ष्मणयोगिवपुर्धर! जय जय हे।
सद्गुणमातृसमाख्यगुरूत्तमपूर्णदयाऽऽदृत! जय जय हे
शश्वदुदीरितसंयमिनायकवाङ्मयदेशिक! जय जय हे ॥ १ ॥

भिन्नहिरण्यसुरारिभुजान्तरनाथयशोवद! जय जय हे
ज्येष्ठशुभोडुनि मासि नभस्य इहात्तसुजन्मक! जय जय हे।
सर्वहितावहकीर्तिपरांकुशसूक्त्युपदेशक! जय जय हे
वण्शठकोपमुने सरसीरुह तुल्यनिजांघ्रिक! जय जय हे ॥ २ ॥

रस्यमनुत्रयसाररसोत्कर बोधनतत्पर! जय जय हे
क्षुद्ररहस्य निबन्धगणप्रतिपादनसादर! जय जय हे।
तत्वबुभुत्सु समस्तजनावनदक्ष दयाऽऽकर! जय जय हे
श्रीशठकोप कृपाप्रदिपादितहंससुमुद्रक! जय जय हे ॥ ३ ॥

अध्वरसूत्रधर त्रिसुदण्डविराजित सच्छिख! जय जय हे
शंखसुदर्शनलक्ष्मपरिष्कृत दोर्द्वयमूलक! जय जय हे।
मध्यम विष्टपवास्यनुभाव्यसृतिप्रदिपादक! जय जय हे
शोभनपुस्तक भूषितसुन्दर पाणिसरोरुह! जय जय हे ॥ ४ ॥

गरुडगिरिमहोबिलं शठद्विड्-
वचनमयं निगमं च साधु पुष्णान्।
मुनिवर शठकोप पद्ममालिन्
पुनरवनौ शरदश्शतं वसत्वम् ॥ ५ ॥

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ஸூ கார்த்திகை மீ 1953 நவம்பர் - டிஸம்பர் மீ

[தக்ஷிணயனம்; சரத்ருது; வ்ருச்சிக மீ]

16—11—53	1உ	திங்கட்கிழமை	சூன்யதிதி; வ்ருச்சிகரவி 1-39 (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)
17—11—53	2உ	செவ்வாய்க்கிழமை	வ்ருச்சிகசுக்லஏகாதசி- த்வாதசி திதித்வயம்; கைசிக ஏகாதசி.
20—11—53	5உ	வெள்ளிக்கிழமை	வைகாநஸதீபம்.
21—11—53	6உ	சனிக்கிழமை	பாஞ்சராத்ரதீபம்; க்ருத்திகை; திருமங்கைமன்னன் திருநக்ஷத்ரம்.
22—11—53	7உ	ஞாயிற்றுக்கிழமை	ரோகிணி; திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்.
2—12—53	17உ	புதன்கிழமை	ஸர்வ ஏகாதசி.
3—12—53	18உ	வியாழக்கிழமை	த்ரயோதசி திதி.
4—12—53	19உ	வெள்ளிக்கிழமை	அதிதி.
5—12—53	20உ	சனிக்கிழமை	சதுர்தசி திதி; போதாயன அமாவாஸ்யை.
6—12—53	21உ	ஞாயிற்றுக்கிழமை	அமாவாஸ்யை.
8—12—53	23உ	செவ்வாய்க்கிழமை	பூராடம்; ஸ்ரீஅஹோபிலமடம் 43-வது பட்டம் (தேவனார்விளாகம்) **ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவீராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்** திருநக்ஷத்ரம்.
9—12—53	24உ	புதன்கிழமை	உத்திராடம்; ஸ்ரீஅஹோபிலமடம் 34-வது பட்டம் (அத்திப்பட்டு) ஸ்ரீசடகோபராமாநுஜயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
10—12—53	25உ	வியாழக்கிழமை	சதுர்த்தி திதி.
11—12—53	26உ	வெள்ளிக்கிழமை	பஞ்சமி-ஷஷ்டி திதித்வயம்.
14—12—53	29உ	திங்கட்கிழமை	வ்ருச்சிக சுக்ல நவமிதிதி.
15—12—53	30உ	செவ்வாய்க்கிழமை	வ்ருச்சிக - சாப தசமிதிதி; சாப ரவி 32-3. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

6e

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைத வேதாந்த கோசம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசாரியர். M. O. L.
(D. T. தாதாசாரியர்)

விலை ரூபாய் 20—0—0.

கிடைக்குமிடம்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் முக்யமானது. இதில் 107 புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட அனேக பதங்களுக்கு விசிஷ்டாத்வைத ரீதியில் அப்புத்தகங்களிலுள்ள வ்யாக்யானப்படி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின் இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒரு நிகண்டு (அகராதி)வாகத் திகழ்கிறது என்னலாம். 374 பக்கங்கள் உள்ளன. 500 காபிகளே கைவசமிருப்பதால் இப்புஸ்தகத்தை விரும்புவோர்கள் முந்திக்கொள்ளவேணும். புஸ்தகம் நல்ல பயிண்டுடன் கூடியிருக்கிறது.

ஸ்ரீ:

நித்யாநுஸந்தானம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸ்ரீஅஹோபிலமடம் ஸந்நிதியில் காலை விச்வரூபம் முதற்கொண்டு ராத்ரி திருவாராதனமுடிவுபர்யந்தம் அநுஸந்திக்கப்பட்டுவரும் ஸேவாக்ரமங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 9.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobila-mutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Edited by Sri P. S. Srinivasa Desikachariar M. A., B. L.